PARAPARAPU JOURNAL
பரபரப்பு ஜேர்னல்
ISSUE 055 NOVEMBER 09, 2007

சதியினால் வீழ்த்தப்பட்டார்



கனடா டொலர் 3.50
பிரிட்டன்-பவுண்ட்ஸ் 2.00
பிரான்ஸ்-யூரோ 3.00
சுவிஸ்-பிராங்க் 5.00
ஜேர்மனி-யூரோ 4.00
அவுஸ்திரேலியா-டொலர் 5.00
நோர்வே-குரோனர் 32.00
டென்மார்க்-குரோனர் 30.00

அதிகாலை 0115-0400

இருப்பிடம் பற்றி வன்னியிலிருந்து தகவல் கொடுத்தது யார்?

PARAPARAPU JOURNAL TEAM

Overseas Distribution

Australia
Lingam
Denmark & Germany
Sivasekaran Sarma
France
T.Rameswaran
Norway
Selva
Swiss
A.Varathan
U.K.
N.T.Navaneethan

Creation Team

Production Advisor
Sydney Karan
Type Setting
Karthik, Ram
Advertising
Kannan
Marketing Manager
Nimalini Rasa
Layout Design
Team Alpha Canada
Associate Editor
Shiamini Kandiah
Chief Executive
Joethn Kandiah
Published By
Team Alpha Canada

Editor-in-Chief
Rishie

Paraparapu Weekly
P.O.Box 171, 21 Main Street Markham, Ontario. L3P 3J7, Canada.
Phone: 416-548-8060 Fax: 416-548-8061
E-Mail: info@paraparapuweekly.com

அகிலன்

மழையில் நனைந்தபடி பள்ளிக்குப் போன நாட்கள் நினைவுக்கு வருகிறதா?

இங்கே மழைக்காலம் தொடங்கிவிட்டது. முதல் மழைக்கே எல்லா வாய்க்கால்களிலும் வெள்ளம் பாய்கிறது. வெள்ள வாய்க்கால்கள் என்று எங்களுடைய ஒழுங்கைகளுக்குள்ளால் எல்லாம் வெள்ளம் புரண்டோடுகிறது. முதல் மழையல்லவா! குப்பை கூழமெல்லாத்தையும் கழுவிக் கொண்டு வரும். வெள்ளம் அழுக்கு மயமாகியே இருக்கு. ஆனால் மண் மணக்கிறது. இந்த வெள்ளம் குளங்குட்டைகள் நிரம்பியதால் வந்த வெள்ளமல்ல. அல்லது நிலங் குளிர்ந்த பிறகு பொங்கிய வெள்ளமுமல்ல.



இது மழை பெய்யும்போது மட்டும் பாயும் வெள்ளம். மழை ஓய்ந்த பிறகு இந்த வெள்ளம் பாயாது. மண் குளிர்ந்த பிறகு பாயும் வெள்ளமென்றால் மழை நின்ற பிறகும் வெள்ளம் பாய்ந்து கொண்டிருக்கும். குளமோ குட்டையோ நிரம்பியபிறகு பாயும் வெள்ளம் கண்ணாடிபோல இருக்கும். அவ்வளவு தூய்மையாக தண்ணீர் பாயும். அப்போதுதான் ஊரெல்லாம் ஆறுகளாகவே தெரியும். மழையில் நனைந்தபடி பள்ளிக்குப் போன நாட்கள் நினைவுக்கு வருகிறதா?

அம்மாவோ ஐயாவோ அப்புவோ பாட்டியோ மாமாவோ மாமியோ பேசப்பேச மழையில் நனைந்து திரிந்த அந்தப் பொழுதுகள் ஞாபகத்துக்கு வருகிறதா? அற நனைந்தால் கூதலும் இல்லை குளிருமில்லை என்று சொல்வார்கள். அதைப்போல அற நனைந்தபடி கடற்கரையில் மழையில் படுத்த வேளைகள் நினைவிலிருந்து மேலெழுகின்றனவா?

மழை கொட்டக் கொட்ட பலாலிப் பேரம்பலமண்ணையின் தோட்டத்தில் மரவள்ளிக்கிழங்கை பிடுங்கி வந்து அவித்து மிளகாய்ச் சம்பலோடு தின்ற காலம் தொண்டைக் குழிக்குள் வருகிறதா? அல்லது இதையெல்லாம் நினைக்கும் போது துக்கம்தான் தொண்டையை அடைக்கிறதா? வேரோடு பிடுங்கி தெருவிலும் திண்ணையிலுமாக எறியப்பட்டிருக்கிறோம். தெருவிலும் திண்ணையிலுமாக எறி யப்பட்டாலும் பரவாயில்லை. திக்குத் திசை தெரியாமலல்லவா எறியப்பட்டிருக் கிறோம்.

நாடுநாடாக எறியப்பட்டிருக்கிறோம் ஊரில் மழை நாட்களை யாராலும் மறக்க முடியாது. மழையில் நனைந்த கோழிகள் குளிரில் குறாவியபடி சுவர்க் கரையோரங்களில் ஒதுங்குகின்றன. ஆட்டுக் கொட்டிலிலிருந்து மொச்சை அடிக்கிறது. ஆடுகள் மழையில் நனையும் போது மொச்சை பெருகுகிறது. யாரது மாட்டை சாய்ச்சுக் கொண்டு போவது? தங்கவேலண்ணையா? அவரேதான். தெருவில் வெள்ளம் பாயும்போதே அவர் மாடுகளைச் சாய்ச்சுக் கொண்டு போகிறார். அவருக்கு மழையோ வெயிலோ ஒரு பொருட்டல்ல. எல்லா வற்றிலும் காய்ந்து கறுத்துத் திரண்ட உடல். மாடுகள் குளிரில் நடுங்கினாலும் தங்கவேலண்ணைக்குக் குளிராது.

குளிரை விரட்ட ஒரு கால் அவருக்குப் போதும். கால் என்றால் கறுப்புத்தான். கறுப்பென்றால் கறுப்புச் சாராயமே. கல்லோயாச் சரக்கு. தங்கத்திடம் அதை அடிச்சுப்போட்டு ஒரு சுருட்டை அவர் பற்ற வைத்தாரென்றால் எந்தக் குளிரும் ஓடிப்போய்விடும். எந்தப் பஞ்சியும் அலுப்பும் பறந்து விடும். இதைப்பற்றித் தனியாக பின்னர் எழுதுகிறேன்.

மழைக்காலங்களில் பொதுவாக எல்லா இடமும் பச்சை மயமாகி விடுகிறது. பூமியின் வர்ணமே பச்சை போலத் தானிருக்கிறது. கடலைத் தவிர்த்துப் பார்த்தால் பூமியின் பெரும்பகுதியும் காடுகளாகத்தான் இருந்திருக்கிறது. அந்தப் பச்சைக்காடுகளை மனிதர்கள் தங்களுடைய தேவைகளுக்காக கண்டபடியெல்லாம் வெட்டியழித்த தால் இப்போது அந்தப் பச்சை குறைந்து போனாலும் இயற்கை அதனை மீளாக்கம் செய்து கொண் டேயிருக்கிறது.

இதோ ஒரு மழை பெய்தவுடன் செடிகளும் கொடி களும் கொண்டாட்டமாகத் துளிர்க்கத் தொடங்கி விட்டன. இப்போது ஐப்பசி மாதம். ஐப்பசி மாத மென்றால் முதல் மாரியல்லவா. முதல்மாரி குழந்தை யைப் போன்றது. குழந்தையின் குதுகலம் முதல் மாரியில் இருக்கும். அந்தக் குதுகலமே மண்ணையும் சிலிர்க்கச் செய்கிறது. ஆயிரமாயிரம் செடிகொடிகள் ஊரெங்கும் முளைக்கின்றன.

மாரிப்பயிர் காட்டிலும் உண்டு. களனியிலும் உண்டு. எல்லா வீடுகளிலும் கீரைகளும் கிழங்குகளும் சமைய லாகும். அல்லது குடிநீராகும். குடிநீர் என்றால் மலேரி யாவுக்கும் சளி ரோகத்துக்கும் இந்தச் செடிகொடி கள்தான் மருந்து. மழைக்காலத்தில் பெரும்பாலும் சளி யும் காய்ச்சலும் பிடித்து விடுகிறது. மழையில் நனைந் தால் கட்டாயம் சளி பிடித்தே தீரும். சளி பிடித்தால் காய்சல் வரும். காய்ச்சலுக்கும் சளிக்குமா கவே மாரியில் செடிகொடிகள் முளைக் கின்றன. இயற்கை எப்படிச் சமநிலையை வைத்திருக்கிறது பார்த்தீர்களா! எங்கள் மண் அப்படியான இயல்பும் சிறப்பமு டையது. அது எல்லாவற்றுக்கும் ஈடு கொடுக்கக்கூடியது. அப்படி அது ஈடு கொடுத்தும் வருகிறது. ஊரென்றால் வீடுகளும் தோட்டமும் வயலும்





கோவில்களும் பள்ளிக்கூடங்களும் ஒழுங்கை தெருக்களும் மட்டும்தானா? அல்லது கடற்கரையும் வீடுகளும் சந்தையும் கடைத்தெருக்களும்தான் ஊரா? இந்தக்கொடி செடிகளும் மரங்களும் பறவைகளும் வானமும் நட்சத்திரங் க ளு ம் கூ ட த் தா ன் எங்கள் ஊர். எங்களின் ஊரில் இருந்த நில வைப் போலவா கனடாவிலும் பிரான் சிலும் லண்டனிலும் தெரிகிற நிலா? இல் லையே! மாரியில் எந்த ஊர்தான் தாய கத்தில் அழகில்லை? பச்சையாகவே இருக் கும் ஊர்களுக்குள் ளால் கறுப்புக் கோடு களாக தார் றோட் டுகள். அல்லது பச்சை யான பரப்பிற்குள் ளாக செம்மண் தெருக் கள். வேலிகள் தளைச்சு குளிர்மை யாகவே இருக்கும். கதியால்களை வெட் டிப் போடுவார்கள். அதிலும் பூவரசங் கதியால்களைத்தான் மாரியில் வெட்டி நட




முடியும். கிழுவைக்கு மாரி ஆகாது. மாரியில் கிழு வையை வெட்டிப் போட் டால் அழுகிவிடும். ஆடி மாதத்தில்தான் கிழுவையைப் போடுவார்கள். கிழுவை யிலும் இரண்டு வகையுண்டு. ஒன்று பால்கிழுவை. மற்றது முட்கிழுவை. கோடையில் போட்ட கிழுவை மாரியில் சடைத்துத் தளிர்த்திருக்கும். மாரியில் எதைப் பார்த்தாலும் அழகுதான். வரண்டிருந்த நிலம் குளிரும்போது மண்ணின் மனம் குளிர்கிறது. மண்ணின் மனம் குளிரும்போது அதை எல்லாவற்றி லும் பார்க்கலாம். எல்லாமே செழித்து விடுகின்றன. போரால் அழிந்த நிலமென்று இதை யாராவது சொல் வார்களா? சத்தியம் பண்ணினாலும் யாரும் நம்பமாட் டார்கள். அந்தளவுக்கு செழித்து பச்சைப் பசேலென் றிருக்கிறது. இந்தப் பச்சை நிலத்தில்தானே குண்டு குண்டாகக் கொட்டுகிறார்கள். எறிகணைகளை ஏவி இந்தப் பச்சையையெல்லாம் அழிக்கிறார்கள். வெறி கொண்டு அலைகிறதைப்போல எல்லாவற்றையும் நாசமாக்குகிறார்கள். இந்தியத் தொலைக்காட்சியில் தமிழகத்தின் சிவராஜ் குடும்பத்தின் ஆயுள்வேத

வைத்தியத்தைப்பற்றிய விளம்பரத்தை அடிக்கடி போடுவார்கள். தலைமுறை தலைமுறையாக சிவராஜ் குடும்பம் ஆயுள்வேத வைத்தியத்தைச் செய்து வருகிறது. தமிழகத்தில் மட்டுமல்ல இந்த வைத்தியக்குடும்பம் தென்னிந்தியாவிலேயே பிரபலமானது. அதுவும் வைத்தியத் துறையில்.

இதைப்போல ஈழத்திலும் பிரபலமான நாடறிந்த தமிழ் வைத்தியர்கள் பலர் இருந்தார்கள். சுதுமலையில் அண்ணாமலைப் பரியாரியார் பசுபதிப் பரியாரியார் பருத்தித்துறையில் வல்லிபுரப் பரியாரியார் கொடிகாமத்தில் செல்லத்துரைப் பரியாரியார் கள்ளியங்காட்டில் ராமசாமிப் பரியாரியார் மூளாய் தம்பிப்பிள்ளைப் பரியாரியார் சில்லாலை அத்தினாசியார் பரியாரியார் மன்னார் அடம்பன் இரத்தினம் பரியாரியார் முள்ளியவளை சரவணமுத்துப் பரியாரியார் மூதூரில் மார்க்கண்டுப் பரியாரியார் மட்டக்களப்பு பட்டிப்பளை கோவிந்தன் பரியாரியார் சுண்ணாகம் ஜோர்ஜ் பரியாரியார் மட்டுவில் பிலிப்புப் பரியாரியார் இயக்கச்சியில் கந்தையாப் பரியாரியார் நெடுந்தீவில் பச்சத்தண்ணிப் பரியாரியார் ஆறுமுகப் பரியாரியார் மண்டைதீவில் அப்பையா என்ற சபாரத்தினம் பரியாரியார் வவுனியா மரையடிச்சகுளத்தில் ரங்கய்யாப் பரியாரியார் நட்டாங்கண்டல் பனங்காமத்தில் மாப்பாணிப் பரியாரியார் கன்னங்குடா கரையாக்கன் தீவில் விநாசித்தம்பிப் பரியாரியார் அராலி கரட்டிப்பிள்ளையார் கோவிலடிப் பரியாரியார் மாமுனை சின்னத்துரைப் பரியாரியார் கிளிநொச்சியில் ஜீவாப் பரியாரியார் என்று நாடு முழுக்க ஏராளம் பரியாரிமார் இருந்தார்கள்.





இதைவிடவும் ஊர் ஊராக ஏராளம் பரியாரிமார் தமிழ் வைத்தியம் என்று சொல்லப்படும் ஆயுள்வேத வைத்தியத்தை செய்து கொண்டேயிருந்தார்கள்.

இந்தப் பரியாரிகளுக்கு ஊரில் இருந்த மதிப்பும் மரியாதையும் சாதாரணமானதல்ல. அப்போது இங்கிலிசு வைத்தியம் என்று சொல்லப்படும் அரசாங்க ஆசுப்பத்திரிகளோ தனியார் மருத்துவமனைகளோ அதிகமாக இருக்கவில்லை. அதைவிட ஊராக்கள் பலருக்கும் இங்கிலிசு வைத்தியத்தை விடவும் தமிழ் வைத்தியத்திலேயே அதிக நம்பிக்கையும் ஈடுபாடும் இருந்தது.

அதோடு ஒவ்வொரு ஊர்களிலும் பரியாரிமார் இருந்தார்கள். எந்த வருத்தமென்றாலும் அதுக்கேத்த மாதிரி மருந்தைக் கொடுக்கக் கூடிய ஆட்களும் இருந்தார்கள். அவர்கள் கொடுக்கிற மருந்தில் சுகமும் வந்தது. சுகப்பட்டவர்கள் பரியாரிமாரைக் கொண்டாடினார்கள்.

பரியாரிமாரைப்பற்றி எவ்வளவொ சொல்லலாம். சொல்லத்தான் வேணும். ஒவ்வொரு பரியாரிக்கும் ஒவ்வொரு சிறப்புண்டு. ஒவ்வொரு பரியாரியிடமும் ஒவ்வொரு வகையான கைராசியிருக்கு. அந்தக் கதைகளை எல்லாம் சொல்லாமலிருக்க முடியுமா?

தமிழர்களின் ஊர்களைப்போல சிங்களவர்களிடமும் நாட்டு வைத்தியத்துக்குச் சிறப்பிடமுண்டு. சிறிலங்காவில் ஆயுள்வேத வைத்தியம் இன்னும் பிரபலமாகவே இருக்கிறது.

சிங்கள மக்கள் ஆயுள்வேத வைத்தியத்தையே அதிகமாக நாடும் இயல்பைக் கொண்டவர்கள். அவர்கள் தங்களுடைய கிராமங்களில் இந்தமாதிரியான வைத்தியர்களுக்கு அதிக மதிப்புக்கொடுத்து மிகுந்த மரியாதையோடு நடந்து கொள்வார்கள்.

வெதமாத்தயா என்று இந்த வைத்தியர்களை அன்பாகவும் மரியாதையாகவும் அழைக்கும் சிங்களவர்கள் நாட்டு வைத்தியமும் இயற்கையோடிணைந்த வாழ்க்கையாகவுமே பல இடங்களிலும் இருக்கிறார்கள். நீங்கள் யாரும் சிங்களப் பகுதிகளுக்குப் போனால் அங்கே வெதமாத்தயாக்களின் செல்வாக்கைப் பார்க்கலாம். வெதமாத்தயாக்களின் உலகம் எப்போதும் மூலிகைகளுடன் சேர்ந்தது. அவர்கள் மூலிகைகள் இல்லாமல் வாழவே மாட்டார்கள். சிங்களச் சனங்களும்தான்.

நாங்கள் மலை நாட்டில் இருந்த போது சிங்கள வெத மாத்தயாக்களின் வைத்தியத்தையும் செய்திருக்கிறோம். மலை நாட்டில் மலையக மக்களின் மருத்துவத்தையும் பார்த்தி ருக்கிறோம். எல்லாமே நினைவுகளில் அழிக்கமுடியாமல் தேங்கியிருக்கு.

இந்த மழை வெள்ளத்தைப்போலல்ல. நிலத்தடி நீரைப்போல. இறைப்போம்.

புகைப்படங்கள் மூலம் புரட்சி ஏற்படுத்தி வருகின்ற ஒருவரைக் காட்டுமாறு புகைப்பட த்துறையில் விருப்பமுடையவர்களைக் கேட்டால், அவர்கள் தயங்காமல் கைகாட்டும் ஒருவர். செபாஸ்டியோ செல்காடோ. வறுமையின் மறு பக்கத்தைப் படம் பிடித்துக் காட்டும் இவர், சுற்றுச்சூழல் மாசுபடுவதையும் தனது புகைப்படங்கள் மூலம் காட்டி வருகிறார். தள்ளாத வயதிலும் புகைப்படங்கள் எடுப்பதில் தனியாத ஆர்வம் கொண்ட செல்காடோ, பசுமைப்புரட்சி



ஏழ்மை முகங்கள் ஐரோப்பியக் காட்சியறைகளில்

யிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளவர். (இவரது சேவை நிறுவனம் மூலம் லட்சக்கணக்கான மரங்கள் நடப்பட்டுள்ளன)

தற்போது 64 வயதாகும் செல்காடோ ஆரம்ப காலங்களில் கோப்பி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர். 30 ஆண்டுகளுக்கு முன் நடந்த எதிர்பாராத சம்பவம்தான் இவரை புகைப்படக்கலைஞராக மாற்றியது. பிக்காசோவைப் போல தலையில் முடி இல்லாமல் காட்சி அளிக்கும் செல்காடோ, அந்தப் பழைய விடயத்தை நினைத்ததும் மகிழ்ச்சியின் உச்சிக்கே செல்கிறார்.

''அன்று நான் பாரீஸ் நகரிலுள்ள எனது ஏஜென்சியில் சும்மா அமர்ந்திருந்தேன். அப்போது, பாரீசில் கட்டிடக் கலை படிக்கும் எனது மனைவி ஒரு கமரா வாங்கி வந்தார். அதற்கு முன் நான் படம் எடுத்தது இல்லை. ஆனாலும் முதன்முறையாக கமராவை கையாண்ட போது அளவில்லாத இன்பம் கிடைத்தது'' என்கிறார்.

இந்த நேரத்தில் பி.எச்.டி. பட்டம் முடித்த செல்காடோவுக்கு, சர்வதேச கோப்பி நிறுவனத்தின் பொருளாதார நிபுணராக வேலை கிடைத்தது. இதற்காக லண்டன் சென்றார். அப்போது சொந்தமாக 'வெய்கா' கமரா ஒன்றை வாங்க, இவரது வாழ்க்கைப்பாதையே மாறியது.

''புகைப்படங்கள் எடுக்கும்போது எனக்கு மிகப்பெரிய மகிழ்ச்சி கிடைத்தது. இதையடுத்து நான் எனது நிறுவனத்திடம் விலகல் கடிதம் கொடுத்துவிட்டு முழுநேர புகைப்படக் கலைஞராக மாறினேன்'' என்று கூறும் செல்காடோ அதற்குப் பிறகு இத்துறையில் முத்திரை பதிக்கத் துவங்கினார்.

பிரான்ஸ் நாட்டின் பிரபல *Le Monde* பத்திரிகை இவரை மிகச் சிறந்த புகைப்படக் கலைஞராக வர்ணித்தது. இவரது படங்கள் அனைத்துப் பத்திரிகைகளிலும் இடம் பெற்றன. தற்போது வாழும் புகைப்படக் கலைஞர்களில் அதிக அளவில் புகைப்படக் கண்காட்சி நடத்தியவர் இவராகத்தான் இருக்க முடியும்.

களி மண்ணில் மூழ்கிய நிலையில் காட்சி அளிக்கும் பிரேசிலின் தங்கச் சுரங்கத் தொழிலாலர்கள், முதலாவது வளைகுடாப் போரின்போது எண்ணெய் வயல்களில் பரிதாப நிலையில் இருந்த தொழிலாளர்கள், பார்க்கவே பயங்கரமாக இருக்கும் ருவாண்டா நாட்டு அகதிகள் என இவர் எடுத்த புகைப்படங்கள் காலத்தால் அழிக்க முடியாதவை. சுருக்கமாகச் சொல்லப்போனால் இவர் ஒரு 'புகைப்பட நிறுவனம்' என்று எழுதியிருந்தது *Le Monde* பத்திரிகை.

பிரேசில் நாட்டில் பிறந்த செல்காடோ, இளமைப் பருவத்தில் ஒரு விவசாயி. இடதுசாரிக் கொள்கைகளில் தீவிரமாக இருந்த இவர் 1969ல் நடந்த ராணுவ ஆட்சியின்போது நாட்டை விட்டு வெளியேறி, பிரான்சுக்கு சென்றார். அங்கு லெய்யா வானிக் செல்காடோ என்பவரை மணந்தார். இவரது புகைப்படத்துறைச் சாதனைகளுக்கு மனைவி லெய்லா பக்கபலமாக இருந்துள்ளார். 1979ல் பிறந்த இரண்டாவது மகன் உடல் நலம் பாதிக்கப்பட தனது கட்டிடக் கலை தொடர்பான வேலைகளைக் கைவிட்டார் லெய்யா.

1992ல் மனைவியுடன் சேர்ந்து செல்காடோ எடுத்த அமேசான் பற்றிய படங்கள் பெரிய அளவில் பேசப்பட்டன. சமீபத்தில் லண்டனில் செல்காடோ நடத்திய புகைப்படக் கண்காட்சி அவரது பழைய கால 'கோப்பி' வாழ்க்கையை எடுத்துக்காட்டியது. இத்தாலியைச் சேர்ந்த பிரபல 'இல்லி' கோப்பி நிறுவனம் இதற்கு ஸ்பொன்சர் செய்து இருந்தது.


கண்காட்சியில் வைக்கப்பட்ட புகைப்படங்களுக்காக பிரேசில், கௌதமாலா, இந்தியா, எத்தியோப்பியா என பல நாடுகளுக்குச் சென்று கோப்பித் தொழிலாளர்களை படம் பிடித்திருந்தார் செல்காடோ. கோப்பிக் கொட்டைகளைப் பறிக்கும் பிரேசில் தொழிலாளர்கள், நீளமான விரல்களுடன் பணியில் ஈடுபட்டிருந்த எத்தியோப்பியா மக்கள், சாக்குப்பைகளை லொரியில் ஏற்றும் இந்திய தொழிலாளர்கள் ஆகியோர் பற்றிய செல்காடோவின் படங்கள் தத்ரூபமாக அமைந்திருந்தன. இவர்களது வறுமை நிலையை அழகாகப் படம் பிடித்து இருந்தார்.

இவரது 'தொழிலாளர்கள் மற்றும் குடிபெயர்ந்தவர்கள்' என்ற புத்தகம், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை விளக்குகின்றன. இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள தொழிலாளர் வாழ்க்கை முறை பற்றிய சில கடுமையான கருத்துக்கள், இவர் அரசியலில் ஈடுபடப் போகிறாரோ என்ற நினைப்பை ஏற்படுத்திவிட, அதுபற்றியும் சில ஊடகங்கள் எழுதியிருந்தன. இதை மறுத்த செல்காடோ, ''நான் பணம் சம்பாதிப்பதற்காகத்தான் வேலைகள் செய்கிறேன். பிரிட்டனின் பிரபல வோல்கா மற்றும் வேறு முன்னணி நிறுவனங்களுக்காக நிறைய விளம்பரப் படங்கள் எடுத்துக் கொடுத்துள்ளேன். நான் சமூகத்தைக் காக்கும் புகைப்படக்கலைஞன் அல்ல. மக்கள் என் மீது சமூக அக்கறையுள்ளவன் என்ற முத்திரையைப் பதித்துள்ளனர். உண்மையில் நான் மற்றவர்களைப்போல வர்த்தக ரீதியாகவே வேலை செய்கிறேன். நான் ஒன்றும் அரசியல் சார்ந்தவன் அல்ல. நான் ஒரு புகைப்படக் கலைஞன் மட்டுமே'' என்கிறார்.

ஏழைகளின் வறுமையைப் பற்றியே இவருடைய அநேக படங்கள் இருப்பதுபற்றி என்ன கூறுகிறார்? ''நானே ஒரு ஏழை நாட்டில் பிறந்தவன். ஏழை நாடுகளில் பணி புரிபவர்களுடன் அதிக நேரத்தைச் செலவிட்டுள்ளேன். அவர்களைப் படம் எடுப்பது, பணக்காரர்கள் மத்தியில் குற்ற உணர்வை ஏற்படுத்துவதற்காக அல்ல. படம் எடுப்பது எனது வாழ்க்கை. அதை விரும்பிச் செய்கிறேன்.



'இல்லி' கோப்பி நிறுவனத்தினர் கேட்டுக்கொண்டதற்காக ஆண்டில் 15 நாட்கள் கோப்பி பயிரிடுபவர்களுடன் தங்குவதற்குச் சம்மதித்தேன். ஏனென்றால், கோப்பி வியாபாரத்தில் முதலிடத்திலுள்ள 'நெஸ்லே' நிறுவனம் போல் அல்லாமல் 'இல்லி' நிறுவனத்தினர் தனது தொழிலாளர்களது வாழ்க்கையில் அக்கறை உடையவர்களாக இருக்கிறார்கள். 'இல்லி' நிறுவனம் நல்லது அல்லது கெட்டது என்பதற்காக இதைச் சொல்ல வில்லை. இதனுடைய நோக்கம் கோப்பி தயாராவது எப்படி என்பதை விளக்குவது மட்டுமே''


செபாஸ்டியோ செல்காடோ

தனது கடைசிக்காலம்வரை புகைப்படம் எடுத்துக் கொண்டு புகைப்படக்கலைஞராகவே வாழ்க்கையை முடித்துக்கொள்ள வேண்டும் என விரும்கிறேன் என்கிறார் செல்காடோ. ''எனக்கு இப்போதுள்ள மகிழ்ச்சியான வாழ்வு எங்கிருந்து வந்ததென்றால், இதோ இங்கிருந்துதான்'' என்று தனது கமராவைத் துக்கிக் காட்டுகிறார்.

குறுகியகால முதலீட்டுக்கு ஒரு அருமையான இடம்



இந்தோனேஷியாவில் அன்னிய முதலீடுகள் திடீரென அதிகரித்துள்ளன. அண்மையில், நாடாளுமன்றத்தில் அன்னிய முதலீட்டுக்கு எதிராக ஒழுங்குமுறை விதிகள் நிறைவேற்றப்பட்ட போதிலும், வர்த்தகத்திற்கு ஆதரவான அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு சாதகமாக பொருளாதார பலன்கள் ஏற்பட தொடங்கியுள்ளன.

ஜப்பான் மற்றும் சீனாவுடன் ஏற்பட்டுள்ள புதிய வர்த்தக உறவுகளால், வரும் ஆண்டுகளில் இந்தோனேஷியாவின் பொருளாதாரம் மிகப்பெரிய வளர்ச்சியை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தோனேஷியாவிற்கு கடந்த வாரம் சுற்றுப் பயணம் மேற்கொண்ட ஜப்பானியப் பிரதமருடன், பெரிய புதிய தடையற்ற வர்த்த ஒப்பந்தத்தில் இந்தோனேசிய அதிபர் கையெழுத்திட்டார். மற்றொரு நாட்டுடன், மிகப்பெரிய அளவில் இருதரப்பு ஒப்பந்தத்தில் இந்தோனேஷியா கையெழுத்திடுவது இதுவே முதன்முறையாகும்.



பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் என அழைக்கப்படும் இது, இரண்டு நாட்டு நாடாளு மன்றங்களாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும். அதன் மூலம், சாரசரியாக 9,275 பொருட்கள் மீது 90 சதவீத வரிகள் குறைக்கப்படும் அல்லது நீக்கப்படும்.

இது பற்றி ஜப்பானிய வர்த்தகக் கூட்டமைப்பின் தலைவர் ஃபியூஜியோ மித்தராய் கூறுகையில், ''இந்தோனேஷிய உற்பத்தியாளர்களிடமிருந்து எரிசக்தி ஆதாரங்கள் தொடர்ந்து தடையின்றி கிடைப்பதற்கு, இந்த புதிய ஒப்பந்தம் வழிவகை செய்யும் என டோக்கியோ கருதுகிறது'' என்றார்.

ஏற்கனவே, ஜப்பானுக்கு திரவ எரிவாயு வழங்கும் மிகப்பெரிய விநியோகஸ்தராக ஜகார்த்தா இருந்து வருகிறது. இருந்த போதிலும், உள்நாட்டில் தேவை அதிகரித்துள்ளதாலும், உற்பத்தி குறைந்துள்ளதாலும், ஜப்பான், தென் கொரியா மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளுக்கு ஒப்பந்த விதி முறைகளின்படி இந்தோனேஷிய உற்பத் தியாளர்களால் எரி வாயுவை விநியோகிக்கமுடிய வில்லை.



இந்தோனேஷிய அரசுக்குச் சொந்தமான எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனமான பெர்டாமினா, நாட்டின் மிகப்பெரிய தனியார் எரிசக்தி நிறுவனமான மெட்கோ எனேர்ஜியுடன் இணைந்து, ஜப்பானின் வர்த்தக நிறுவனமான மிட்சுபிஷியுடன் 1.1 பில்லியன் மதிப்புள்ள ஒப்பந்தத்தில் கடந்த வாரம் கையெழுத்திட்டது.

மத்திய சுலவேசி மாகாணத்தில் எல்.என்.ஜி. சுத்திகரிப்பு ஆலை கட்டுவதற்காக கையெழுத்திடப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஜப்பானுக்கு பிரத்யேகமாக எரிபொருள் சப்ளை செய்யப்படும்.

மேலும் கடந்த வாரம், மெட்கோ எனேர்ஜியின் 50.7 சதவீத பங்குகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும், என்கோ எனேர்ஜியின் 39.4 சதவீத பங்குகளை மிட்சுபிஷி, 353 மில்லியன் டொலருக்கு வாங்கியுள்ளது.

வெளிநாட்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், தெற்கு சுமத்திராவிலிருந்து மேற்கு ஜாவா வரையில் இயற்கை எரிவாயு குழாய் அமைப்பது, இரண்டு புதிய மின் நிலையங்கள் அமைப்பது ஆகிய திட்டங்களை கூட்டாக செயல்படுத்த வழிவகை செய்யும் பிற ஒப்பந்தங்களும் கடந்த வாரம் அறிவிக்கப்பட்டன.

மாற்று எரிபொருள் ஆதாரத்திற்காக வடிவமைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய திட்டமான இந்தோனேஷியாவின் சாருல்லா ஜியோதேர்மல் திட்டத்திற்கு ஆதரவு அளிக்கப்படும் என ஜப்பான் கோடிட்டுகாட்டியுள்ளது.

இத்திட்டத்திற்காக மூன்று கட்டங்களாக நடைபெறும் கட்டுமானம் மற்றும் விநியோகத் திட்டத்திற்கு, சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய வங்கி, ஒட்டுமொத்தமாக 800 மில்லியன் டொலர்களை கடனாக அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீனாவின் முதலீட்டுத் திட்டங்கள்

சீனாவும், இந்தோனோஷியாவில் பெரியளவில் புதியதாக முதலீடு செய்வதற்கான திட்டங் களை தொடங்கியுள்ளது. சீனாவின் டோங்ஃபாங் எலெக்ட்ரிக் மற்றும் ஷாங்காய் எலெக்ட்ரிக் நிறு வனத்துடன் இணைந்து, 2 பில்லியன் டொலர் மதிப்பில் புதிய மின் நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக இந்தோ னேஷிய அரசுக்கு சொந்தமான மின் நிறுவனமான பி.எல்.என், இந்த மாதம் அறிவித்துள்ளது.

சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி, இத்திட்டத்திற்கான 85 சதவீத நிதியை அளிக்கும் என்றும், இந்த புதிய மின்நிலையங்கள் 2009 அல்லது 2010ம் ஆண்டுகளில் செயல்பட தொடங்கும் என பி.எல்.என். தெரிவித்துள்ளது.

இதனிடையே, ஷாங்காய் எலெக்ட்ரிக் நிறுவனம், மேற்கு ஜாவாவில் 800 மில்லியன் டொலர் முதலீட்டில் நிலக்கரி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் மூன்று புதிய 350 மெகாவாட் ஆலைகளை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. பிற கட்டமைப்பு மற்றும் எரிசக்தி திட்டங்களில் கூடுதலாக 800 மில்லியன் டொலர்களை முதலீடு செய்ய சீன உறுதியளித்துள்ளது. சியர்பானில் 250 மில்லியன் டொலர் முதலீட்டில் ஜாட்ஜிடே அணையும், புதிய தேர்மல்



மின்நிலையங்களை அமைக்கும் திட்டங்கள் இதில் அடங்கும்.

இந்தோனேஷியாவின் துணை அதிபர் ஜூசுப் கல்லா வின் குடும்பத்தினருக்கு சொந்தமான, இந்தோனேஷிய எரிசக்தி நிறுவனமான பி.டி.போஸோவா எனேர் ஜியுடன் இணைந்து, சீனாவின் செங்தா என்ஜினியரிங் நிறுவனம், கல்லாவின் சொந்த மாகாணமான தெற்கு சுலவேசியில் 200 மில்லியன் டொலர் மதிப்பீட்டில் நிலக்கரியை கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யும் 200 மெகாவோட் மின் ஆலையை கூட்டாக அமைக்க திட்டமிட்டுள்ளது.

கிடு கிடு வளர்ச்சியின் காரணம் என்ன?

இந்தோனேஷிய எரிசக்தி திட்டங்களில் சீனா, ஜப்பான் அதிக ஆர்வம் காட்டுவதற்கு காரணங்கள் இருக் கின்றன. புதிய மற்றும் நம்பகமான எரிசக்தியை வழங் குவதில் சர்வதேச அளவில் கடும் போட்டி ஏற்பட் டுள்ளதால், எரிசக்தி தேவைக்காக இறக்குமதியை பெரிதும் சார்ந்திருக்கும் இவ்விருநாடுகளும், இந்தோ னேஷியாவின் எரிசக்தி திட்டங்கள் மீது ஆர்வம் காட் டுவதில் வியப்பில்லை.

இப்பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்துவது யார் என் பதில் ஏற்பட்டுள்ள போட்டியால், தங்களின் பொரு ளாதார ஆதிக்கத்தை விரிவுபடுத்த ஜப்பானும், சீனாவும் திட்டமிட்டுள்ளன. இந்தோனேஷியாவின் பொருளா தாரம் புதிய பாதையில் செல்வதற்கு சாதகமான சூழ் நிலை நிலவுவதாக ஏற்பட்டுள்ள நம்பிக்கையை உறுதி செய்யும் விதமாக, மிகப்பெரிய முதலீட்டு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தோனேஷியாவில் இவ்வாண்டின் இரண்டாம் கால்பகுதியில் உள்நாட்டு வளர்ச்சி விகிதம் 6.3 சத வீதமாக வளர்ச்சி பெற்றுள்ளது. 1996ம் ஆண்டு முதல் வளர்ச்சி விகிதம் மிக வேகமாக அதிகரித்து வருகிறது.

இந்தோனேஷியாவின் பல்வேறு வர்த்தகதுறைகளில், தேசியவாத உணர்வுகளை கருத்தில் கொண்டு அன்னிய முதலீடுகளில் புதிய கட்டுப்பாடுகளை விதிக்க வழி வகை செய்யும் ''எதிர்மறை முதலீட்டு பட்டியல்' கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட போதி லும், அதை பொருட்படுத்தாமல் புதிய முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு, அன்னிய முத லீடுகளை ஈர்க்க அமைக்கப்பட்டுள்ள *Capital Investment Co-ordinating Board (BKPM)* என்ற அரசு நிறுவனமும் ஒரு காரணமாகும்.

அன்னிய முதலீட்டுக்கு எதிரான நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளை புறந்தள்ளிவிட்டு, அன்னிய



லுட்ஃபி
முதலீட்டு வளர்ச்சி ஏஜென்சியின் தலைவராக செயல்படுகிறார்

முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பெறுவதில் இந்த நிறுவனம் முக்கிய பங்களிப்பை ஆற்றியுள்ளது. சொந்த உழைப்பால் தொழில் முனைவராக உருவெடுத்த முகமது லுட்ஃபி, முதலீட்டு வளர்ச்சி ஏஜென்சியின் தலைவராக செயல்படுகிறார். பல்வேறு பெரிய வர்த்தகங்களில் குறிப்பிடத்தக்க பங்குகளை வைத் துள்ள இவர், ஊடகம் தொடர்பான மஹாகா நிறுவ னத்திலும் மிகப்பெரிய பங்குதாரர்.

முதலீடு தொடர்பான திட்டங்கள் குறித்து இந்தோ னேசிய அதிபரிடம் நேரடியாக இவர் அறிக்கைகளை சமர்ப்பிக்கிறார். 2004ம் ஆண்டு அதிபர் தேர்தலின் போது, யுதோனோவின் பொருளாதார செய்தி தொடர் பாளராக லுட்ஃபி பணியாற்றினார். தற்போது, அதி பரின் மிகவும் நம்பிக்கைக்குரிய பொருளாதார ஆலோச கர்களில் ஒருவராக இவர் இருக்கிறார்.

BKPM-யின் தலைவர் பதவியிலிருந்து முன்னாள் அதிபர் மேஹாவதி சுகர்ணோபுத்ரியின் நெருங்கிய சகாவான தியோ டோமியோ நீக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள், அப்பதவியில் லுட்ஃபி நியமனம் செய்யப்பட்டார்.

சிவப்பு நாடாவுக்கு தடை

தற்போதைய நலத்திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சர் அபுரிஸால் பக்ரி போன்ற அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் அவையின் சபாநாயகர் அகுங் லக்சோனோ ஆகியோரின் எதிர்ப்புக்கு இடையே, இந்தோனேஷிய பொருளாதாரத்தை மேலும் தேசிய மாக்க வேண்டும் என்றும், அன்னிய முதலீடுகளை குறைக்க வேண்டும் என்றும் நாடாளுமன்றத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை லுட்ஃபி நிராகரித்து விட்டார்.

அதற்கு பதிலாக, *BKPM*யின் தலைவர் என்ற முறையில், புதிய அன்னிய முதலீட்டுக்கு அச்சுறுத் தலாக, பொருளாதாரத்தில் தொற்றுநோய் போல் பரவியிருக்கும் சிவப்பு நாடா முறையை குறைக்க லுட்ஃபி முயற்சி மேற்கொண்டுள்ளார்.

நாடு முழுவதும் 70 பிராந்திய *BKPM* அலுவ லகங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில், முதலீட்டு திட்டங்களுக்கு தடைக் கல்லாக இருக்கும் விதிமுறைகளை மாற்றிய மைத்து, அவற்றை ஒழுங்குபடுத்தவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் தாம் அங்கம் வகித்த *Young Indonesian Entrepreneurs Association (HPMI)* என்ற அமைப்பு, அன்னிய நிறுவனங்களுடன் ஒப்பந் தங்களை மேற்கொள்ளவும், நாட்டில் உள்ள 40 ஆயிரம் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உதவிக்கரம் நீட்டவும் லுட்ஃபி துாண்டுகோலாக இருக்கிறார். சர்வதேச சந்தையுடன் போட்டியிடும் வகையில் உள்ளூர் நிறுவனங்களை மேம்படுத் துவதற்கு அவர் உதவியளிக்க திட்டமிட்டுள்ளார்.

தற்போதைய முன்னணி நாடாளுமன்றவாதிகள் மற்றும் அமைச்சர்கள், *HPMI*ன் தலைவர்களாக பதவி வகித்த போதும், உள்ளூர் தொழில்களை காப்பதில்தான் அவர்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

அதே நேரத்தில், மற்றொரு புறத்தில், கடந்த வாரம் ஜப்பானின் வெளியுறவு வர்த்தக அமைப்பிற்கும், இந்தோனே ஷியாவின் சேம்பர் ஓஃப் கொமேர்ஸிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுவதற்கு லுட்ஃபி துாண் டுகோலாக இருந்தார். இதன் மூலம் இந்தோ னேஷியாவில் நடுத்தர தொழில் நிறுவனங் களுக்கு ஜப்பானின் உதவி கிடைக்கும்.

இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம் என்னவென் றால், இந்தோனேஷிய நிறுவனங்களின் உற்பத்தி தரத்தை மேம்படுத்துவதுதான். அதன் மூலம், ஜப்பா னின் ஆட்டோமோடிவ், எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் கட்டுமான நிறுவனங்களின் உற்பத்திச் சங்கிலிக்கு பொருத்தமான உபகரணங்களை, இந்தோனேஷிய நிறுவனங்கள் தயாரித்து அளிக்க முடியும்.

இந்தோனேஷியாவில் அன்னிய முதலீடு, இன்னும்கூட அரசியல் ரீதியாக உணர்ச்சிகரமான தலைப்பாக வும்தான் இருக்கிறது.

அரசாங்கத்தின் நலிவடைந்த நிறுவனங்களை வெளி



யுதோயோனோ
2009ம் ஆண்டு நடை பெறவுள்ள அதிபர் தேர்தலில் யுதோயோனோவிற்கு வாய்ப்புகள் சாதகமாக இருக்கும் என அவரது அரசியல் வியூக நிபுணர்கள் எண்ணுகின்றனர்

நாட்டினரிடம் விற்றுவிடு மாறும், பல பில்லியன் டொலர் நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் பொருளா தாரத்தை மிக வேகமாக தாராளமயமாக்குமாறும் சர்வதேச நிதியம் இந்தோனேஷிய அரசை வலியுறுத்தி வருகிறது.


1997-98ம் ஆண்டு ஏற்பட்ட நிதிச் சிக்கலில் இருந்து அரசாங்கம் மீள்வதற்கு இந்த நிதியம்தான் நிதியுதவி அளித்தது.

ஆனால், சர்வதேச நிதியத்தின் பரிந்துரை களை அமல்படுத்தக்கூடாது என பொருளாதார தேசியவாதி கள் வலியுறுத்துகின்றனர். இந்தநிலையில், வரலாற் றுக்கு அப்பால் செயல்பட தாம் விரும்புவதை யுதோயோனோ ஏற்கனவே கோடிட்டுகாட்டியுள்ளார்.

புதிய பொருளாதார வளர்ச்சி, ஜப்பான் மற்றும் சீன முதலீடுகளால் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகிய வற்றால், 2009ம் ஆண்டு நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் யுதோயோனோவிற்கு வாய்ப்புகள் சாத கமாக இருக்கும் என அவரது அரசியல் வியூக நிபு ணர்கள் எண்ணுகின்றனர்.

வெளிநாட்டு முதலீடுகளில் ஆர்வமுடையவர்கள் இந்தோனேசியாவின் சக்தித்துறை சார்ந்த *(Energy sector)* முதலீடுகளில் ஒரு கண் வைத்திருங்கள். சக்தித்து றையின் சில பங்குகள் திடீர்திடீரென எகிறலாம். குறுகியகால பங்கு விற்பனைக்கு சாதகமான மார்க்கட் இது.

மேலைநாட்டு வாழ்க்கை




உடலையும் மனதையும் பேணவும்.. பாதுகாக்கவும்..

1ஆம் நாள்

காலை உணவு:

வான்கோழி சொசேஜ்-2
ஓற் பிறான் சீரியல்
1/2 கிறேப் புறுட்
கோப்பி அல்லது தேநீர்



இடைநேரத்தில்:

வாழைப்பழ சிமூத்தி: 1வாழைப்பழத்துடன் 1கப் கொழுப்பில்லாத பால் விட்டு பிளெண்டரில் போட்டு நன்றாக அரைக்கவேண்டும்.

மதிய உணவு:

மெடிற்றரானியன் சலட்: 1/2 கப் அவித்த சுண்டல் கடலையுடன் கடும் பச்சை சலட்இலைகள் மற்றும் சலட்டிற்கு போடும் மரக்கறிகளுடன் 1 மேசைக் கரண்டி ஒலிவ் எண்ணையுடன் சிறிய அளவு balsamic வினிகர் கலந்து உண்ணலாம்.

இடைநேரத்தில்:

1கப் கொழுப்புக் குறைந்த இனிப்பில்லாத தயிர்.

இரவு உணவு:

கிறில் பண்ணிய சமன் மீன்
புறொக்கொலி அவித்து அல்லது நீராவியில் அவித்து.
கரட் அவித்து.


2ஆம் நாள் உணவு அடுத்தவாரம்.

ஒன்பது எண்ணவும்:

பச்சைக்காய்கறிகள் அல்லது பழங்கள் நாளொன்றுக்கு ஒன்பது முறை எடுக்க வேண்டும் எனபது மருத்துவரின் அறிவுரை. ஒரு முறை பரிமாறும் அளவு என்னவென்று பார்ப்போம். பழங்கள், காய்கறிகள் என்று குறிக்கும்போது, புதியவை, பதப்படுத்தப்பட்டவை, டின்னில் அடைக்கப்பட்டவை, உலர வைக்கப் பட்டவை, மற்றும் பழச்சாறுகள் அனைத்தையும் சேர்த்துக்கொள்ளலாம்.

- ஒரு மத்திய அளவிலான பழம் ஒன்று (அப்பிள் தோடம்பழம் அல்லது வாழைப்பழம்.)
- 1/2 கப் பச்சை, அவித்த, உறைநிலை அல்லது உலர் பழங்கள்
- 3/4 கப் பழச்சாறு
- 1/2 கப் துண்டுகளாக்கப்பட்ட பழங்கள்
- அவித்து டின்னில் அடைக்கப்பட்ட பட்டாணி வகைகள்
- 1கப் பச்சைக்கீரை வகைகள்
- 1/4 கப் உலர்பழங்கள்





மாச்சத்து, சில உண்மைகள்:

ஊட்டச்சத்து உணவியல் என்பதும், உணவுத் திட்டம் என்பதும் மாச்சத்து, உடலுக்கு எந்த அளவில் தேவைப்படுகிறது என்று நிர்ணயம் செய்வதுதான். ரத்தத்தில் சர்க்கரை அளவைக் கூட்டி, உடலுக்குத் தேவையான எரிபொருளான குளுக்கோஸை வழங்குகிறது. ரத்தத்தில் குளுக்கோஸ் அளவு அதிகரிக்கும்போது, கணையம் இன்சுலினைச் சுரக்கிறது. இதனால் ஒவ்வொரு செல்லிலும் எரிபொருள் சேகரிக்கப்படுகிறது.மாச்சத்து குறைந்த அளவு சேர்க்க வேண்டும் என்பது விதி. மாச்சத்து பசியை அடக்கி, உடல் எடை குறைய வைக்கும். இதைப் பொய் என்று சொல்வோரும் உண்டு.

குறைவான உணவு எடுக்கும்போது, சேர்த்து வைக்கப்பட்ட கிளைக்கோஜன் எரிக்கப்படுகிறது. நீர் பிரிக்கப்படுகிறது. உடல் எடை குறைந்தாற்போல உணர்வு தெரிகிறது. உண்மையில், உடலில் உள்ள நீரின் அளவுதான் குறைகிறது. மாச்சத்து குறைவாக எடுப்பது ஒன்றும் பெரிய உடல் எடை குறைக்கும் மந்திரம் அல்ல. குறைந்த கலோரி அளவு உணவு எடுக்கும்போது உடல் எடை குறைகிறது. இது சிலருக்கு பசி உணர்வைக் குறைக்கும். சிலருக்கோ தலை சுற்றல், வலி, குமட்டல் போன்ற உணர்வுகளைத் தோற்று விக்கும். கார்போஹைட்ரேட் அளவைக் குறைக்கும் போது, கெடொன்ஸ் என்ற பொருள் வெளியாகிறது. தொடர்ந்து கெடோன்ஸ் வெளியேறும்போது, எலும்புகளில் உள்ள தாதுப்பொருட்கள் விரயமாகி, பலவீனமாகி விடும். எளிதில் உடையும் அபாயம்

ஆரோக்கிய TIPS

1.உங்கள் பிள்ளைகளுடனோ அல்லது சினேகிதர்களோடோ கால்பந்து விளையாடுங்கள்.

2.ஆறுமாதத்திற்கு ஒரு தடவை வீட்டில் வைத்திருக்கும் மருந்துகளின் திகதியைப் பார்த்து. காலம் கடந்துவிட்டால் எறியுங்கள்.

3.3மாதத்திற்கொருதடவை உங்கள் டுத்பிறஷ்ஷை மாற்றுங்கள்.


4.நேரமாற்றம் போது *smoke alarm*ன் பற்றறியை மாற்றுங்கள்.

5.டிவிக்கு முன்னால் இருந்து சாப்பிடுவதை தவிருங்கள்.



6.நிறைய வாசியுங்கள்.

7.மன்னிக்கப் பழகுங்கள்.



உருவாகும். குறைந்த மாச்சத்தும், அதிகமான கொழுப்பும் இருதயத்துக்கு கேடாகும்.

மாப் பொருள் தவிர்க்கும் எண்ணத்தில், உடனடி உணவுகளான பலவகை நொறுக்குத்தீனிகள் எடுப்பதால், ஊட்டச்சத்து இல்லாத வெற்றுக் கலோரிகளை மட்டும் எடுப்பதாகும்.

உங்கள் நலன் காக்க வரும் மந்திர உணவுகள்:

★ அடர் வண்ணம் கொண்ட சாக்கலேட்டில் புரட்டிய ஸ்ட்ராபெரி பழங்கள்.
★ சுட்ட சல்மன் மீன்கள்.
★ வேக வைத்து மசித்த உருளைக்கிழங்கில், லவங்கப் பொடி தூவியது.
★ வால்நட் பருப்புகளும், கிரான்பெரிப்பழம் தூவிய பசலைக் கீரை சாலட்.

என்ன இது? அருஞ்சுவை உணவுப் பட்டியல்.
ஆம், உண்மைதான். நார்ச்சத்து, அத்தியாவசியமான விட்டமின்கள், தாதுப்பொருட்கள், சக்திமிக்க அன்டி-ஆக்ஸடைன்டுகள் கலந்த இதயம் காக்கும் உணவுகள். கீழே குறிப்பிடப்பட்டுள்ள நோய்த் தாக்குதல்களில் இருந்தும் காக்கிறது:


★ரத்தக் குழாய்களை அடைக்கும் அத்திரோ சிலரோஸிஸ் தாக்குதலில் இருந்து காக்கும்.
★ கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கும்.
★ ரத்த அழுத்தத்தைக் கட்டுக்குள் வைத்திருக்கும்.
★ உஷ்ண வலி, அழற்சியை சுகமாக்கும்.
★புற்றுநோய் காரணியாகும் ''ஃப் ரேடிகல்'' அணுக் கூறுகளைச் சமன் செய்யும்.
★ரத்த சர்க்கரை அளவை மட்டுப்படுத்தி வைத்து, வளர்சிதை மாற்றத்தை சீராக்கும்.
★அளவுடன் எடுக்கும்போது, தேவையான ஊட்டசத்தை அளித்து, அதே வேளையில் உடல் எடையையும் குறைக்கிறது.

இவைகளைத் தேடி எந்தப் பிரத்தியேக ஆரோக்கிய உணவு மையத்துக்குச் செல்ல வேண்டியதில்லை. அடுத்தமுறை நீங்கள் சூப்பர்மார்க்கட் செல்லும் போது, அங்கேயே வாங்கிவிடலாம்.

டிப்ஸ்




1.காய்கறிகளை அதிகம் வேக வைத்தால் அவற்றின் சத்துகள் வீணாகும். காய்கறிகளை மிதமாகவே சமைக்க வேண்டும். பச்சைக் காய்கறிகளில் அதிகச் சத்து உள்ளது. தினமும் கீரைகள், தக்காளி, கரட், வெள்ளரி ஆகியவற்றை உணவில் சேர்க்கலாம்.



2.நாள்தோறும் பல நிறங்களில் உள்ள பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றைச் சாப்பிடலாம். ஒவ்வொன்றிலும் உடல் நலத்தைப் பேணக்கூடிய நுண்ணுயிர்ச் சத்துகள் ஏராளமாக உள்ளன. இவை மாரடைப்பு, புற்று நோய் ஆகியவற்றை வராமல் தடுக்கும்.

உங்கள் உடலை மெருகூட்ட இதோ 60 நாட்கள் புரோகிராம்

தோள்களை தூக்கி குலுக்குதல்



இடுப்பளவுக்கு உங்கள் கால்களை விரித்து வைத்துக் கொண்டு மூச்சை உள்வாங்கிபடியே உங்களது தோள்களை எவ்வளவு உயரத்திற்கு உயர்த்த முடியுமோ அவ்வளவு உயரத்திற்கு உயர்த்துங்கள்.

அப்படியே 2 வினாடிகள் நில்லுங்கள். பிறகு மூச்சை வெளியே விட்டபடி உங்களது தோள்களை மீண்டும் கீழே கொண்டு வர வேண்டும்.

இந்த பயிற்சியை 10 முறை செய்யுங்கள். உடம்பை வார்ம்-அப் செய்யும்போதும் குளுமைப்படுத்தும் போதும் கூட இந்த அசைவுகளை நீங்கள் செய்யலாம்.


பலன்ஸ்



கால்களை சற்றே விரித்து வைத்து நில்லுங்கள். கைகளை பக்கவாட்டில் வைத்திருங்கள். முழங்கால்களை லேசாக வளையுங்கள். தோள்களை ரிலாக்ஸ் செய்யுங்கள். உங்களுக்கு முன்பாக நேராக கண்களை செலுத்துங்கள். பிறகு அடிவயிற்று சதைக்கு அழுத்தம் கொடுத்து கால்விரல்களை ஊன்றி அப்படியே உங்களது உடலை மேலே உயர்த்தியவாறு மூச்சு காற்றை வெளியே விடுங்கள்.


இந்த பயிற்சியை செய்யும்போது உங்களது கணுக்கால் பாதிக்கப்படாதவாறு கால்விரல்களை கவனமாக ஊன்றி உடம்பை உயர்த்த வேண்டும். சில வினாடிகளுக்கு மூச்சை இழுத்து விடுங்கள். தரையிலிருந்து உங்களது உடம்பை உயர்த்தி முதுகெலும்பை முடிந்த அளவுக்கு நீளமாக்குங்கள். பிறகு தரையை நோக்கி மீண்டும் உடம்பை கீழே கொண்டு வர வேண்டும். முதலில் 5 தடவை செய்து பழக்கமாகிவிட்ட பிறகு 10 தடவை செய்யுங்கள்.

தோள் வட்டங்கள்



கைகளை ரிலாக்சாக வைத்துக் கொண்டு தோள்களை மேலே உயர்த்துங்கள். பிறகு முன்புறமாக தோள்களை வட்டமடியுங்கள். 5 முதல் 10 தடவை இவ்வாறு வட்டமடித்த பிறகு அதே எண்ணிக்கைக்கு பின்புறமாக தோள்களை வட்டமடியுங்கள்.

செஸ்ட் ஓப்பனர்



உங்களது கைகளை இடுப்பின் மேல் வையுங்கள். தோள்களை கீழே இறக்குங்கள். பிறகு தோள்பட்டைகளை இழுத்து கொண்டுவர வேண்டும். அப்போது முழங்கைகளை ஒன்றுடன் ஒன்று மோதும்படி முதுகிற்கு பலம் கொடுக்கும்படி இழுத்துக் கொண்டு வர வேண்டும். பிறகு மார்பு பகுதியை விரித்துக் கொடுக்க வேண்டும். இப்படியே சில தடவைகள் செய்யுங்கள்.

ஹேம்ஸ்டிரிங் ஸ்டிரச் (நின்றபடி)

கால் பாதங்களை சமமான அளவில் வைத்துக் கொண்டு வலது கால்பாதத்தை ஒரு பெரிய அடியாக எடுத்து வையுங்கள். உடலை பலன்ஸ் செய்வதற்காக ஒரு திடமான தரை அல்லது பொருளின் மீது அந்த கால்பாதத்தை வையுங்கள். வலது முழங்காலை லேசாக மடக்குங்கள். பாதத்தின் பின் பகுதி தரையில் இருக்கும்படியாக பின்பக்கம் உள்ள காலுக்கு பலம் கொடுங்கள். அதாவது கால்முட்டியின் தசைகளில் ஒரு நீட்சியை உருவாக்கும் வகையில் இந்த அசைவை கொடுக்க வேண்டும். ஒரு சில வினாடிகள் இவ்வாறு இருந்த பிறகு பழைய நிலைக்கு வாருங்கள்.



இந்த பயிற்சியை 3 முதல் 5 தடவை வரை செய்யுங்கள். பிறகு வலது பாதத்திற்கு பதிலாக இடது கால் பாதத்தை வைத்து இதே பயிற்சியை செய்யுங்கள். கால் முட்டியில் உங்களுக்கு இருக்கும் இறுக்கத்தை பொறுத்து இதை நீங்கள் செய்யலாம்.

பண்டைக்கால மருத்துவ ரகசியங்கள்

பித்த வெடிப்பு

பித்தவெடிப்பு என்பது எரிச்சலூட்டும் ஒரு விஷயமாகும். முதலில் விரல்களின் இடுக்கில் சிறிது சிறிதாக வரும் இந்த வெடிப்பு பின்பு காலின் பாதம் முழுவதும் பரவி, வெடிப்புகளாக மாறி விடும். இதனால் ஏற்படும் வலி, அரிப்பு மற்றும் எரிச்சல் சாதாரணமாகவோ, மிகவும் அதிகமாகவோ இருக்க கூடும்.


தாவரம்



ஜமேக்கா தீவில் இருக்கும் மக்கள் பித்தவெடிப்பிற்கு உள்ளிப்பற்களை உபயோகப் படுத்துவர்.

செய்முறை: பாதிக்கப்பட்ட காலை சவர்க்காரம் போட்டு நன்கு கழுவவும். பின்பு அந்த இடத்தை நன்கு துடைத்துவிட்டு, உள்ளிப்பற்களை வைத்து நன்கு மஸாஜ் செய்யவும். இதை ஒரு நாளைக்கு இருமுறை செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

தாவரம்



ரஷ்ஷிய மக்களும் பூண்டை உபயோகித்து பித்தவெடிப்பை நீக்கினர்.

செய்முறை: உள்ளியை உரித்து ஒலிவ் எண்ணெயுடன் கலக்க வேண்டும். பின்பு அதை மூன்று நாட்கள் ஊற வைக்க வேண்டும். பின்பு உள்ளியை நன்கு பிழிந்து எடுத்து விட்டு அந்த எண்ணெயை பித்த வெடிப்பு உள்ள இடங்களில் நன்கு தடவ வேண்டும்.

தாவரம்



1768ல் ஜேம்ஸ் குக் என்பவர் ஒரு ரகசிய பயணத்தை மேற்கொண்டார். அந்த பயணத்தின் போது தான் அவர் நியூசிலாந்து நாட்டை கண்டு பிடித்தார். பின்னர் ஆஸ்திரேலியாவிற்கும் சென்றார்.

அங்கு ஆஸ்திரேலியாவில் தேயிலைகளை கொண்டு பல வியாதிகள் குணமடைவதை கண்டார். ஆயினும், இதன் முழு பலன் முதல் உலகப்போரிற்கு பிறகே கிடைத்தது. தேயிலை இலைகளை வைத்து பல தோல் வியாதிகளை குணமடைய செய்தனர்.

செய்முறை : தேயிலை இலைகளை நன்கு பிழிந்து எடுத்து அதன் சாற்றை பித்த வெடிப்பு உள்ள இடங்களில் தடவி வந்தனர்.

கைகள்



முந்தைய நூற்றாண்டில், சீன மருத்துவர்கள் மேல்புற பாதத்தை நன்கு அழுத்தி மஸாஜ் செய்வதன் மூலம் பித்தவெடிப்பை கட்டுப்படுத்தினர்.

செய்முறை : விரலிடுக்குகளிலிருந்து பாதம் முழுவதும் நன்கு மஸாஜ் செய்ய வேண்டும். பின்பு அங்கு சுடுதண்ணி ஒத்தடம் கொடுக்க வேண்டும்.

தாவரம்




அமெரிக்கர்கள் அப்பிள் பழச்சாற்றை பித்தவெடிப்பு நிவாரணியாக பயன் படுத்தினர்.

செய்முறை:அப்பிள் சாற்றில் ஒரு துணியை நனைத்து எடுத்து அதை பித்த வெடிப்பு இடங்களில் நன்கு தடவவும்.

முதுகுவலி

உலகின் முதல்மனிதன் ஏதாவது எடுக்க குனிந்த முதல் நாள் முதலே முதுகுவலி ஆரம்பித்து விட்டது. பண்டைய கால புத்தகங்களில் இதற்கான மருத்துவ குறிப்புகள் குவிந்து கிடக்கின்றன. மஸாஜ், தவார ஆயின்மெண்டுகள் போன்ற பல இயற்கை வழிமுறைகளின் மூலம் இவற்றை கட்டுப்படுத்த முடியும். சமீபத்தில் ஜப்பானிய ஆய்வாளர் ஒருவர், அடிக்கடி ஓய்வெடுப்பதாலும் முதுகுவலி வரும் என்று கூறியுள்ளார்.


அசைதல்



பண்டைய கால பிரிட்டன் வைத்தியர்கள் படுக்கும் முறை மற்றும் சிறிய உடற் பயிற்சிகள் மூலம் முதுகுவலியை கட்டுப்படுத்தி வந்தனர்.

செய்முறை: அவ்வப்போது ஒரு சுவற்றில் சாய்ந்து நன்கு நிமிர்ந்து நிற்கவும். பின்பு, உங்களின் இடுப்பு பகுதி, தோள்பட்டை, தலை ஆகியவை சுவற்றில் படுகிறதா என்று பார்க்க வேண்டும். அவ்வாறு அனைத்தும் சுவற்றில் படுமாறு அவ்வபோது நிற்க வேண்டும்.

தண்ணீர்



பண்டைய மக்கள் தண்ணீரையும் ஒரு மருந்தாக பயன்படுத்தினர். நன்கு சில்லிட்ட தண்ணீர் மற்றும் ஐஸ் கட்டிகளை முதுகில் வைத்து மஸாஜ் செய்தனர். பின்பு இதையே சுடுதண்ணி கொண்டும் தொடர்ந்து செய்து, முதுகுவலியை போக்கினர்.



FRUITED COUCOUS SALAD

தேவையான பொருட்கள்:

$1\frac{1}{2}$ கப் கொதி நீர்
1/4 தே.க உப்பு
1 கப் குஸ்குஸ் (couscous)
1/2 கப் புறோசின் ஒறேன்ஞ் ஜூஸ் கொன்சென்றேற்
2 மே.க வைற் வைன் வினிகர்
1 மே.க சீனி
1 மே.க ஒலிவ் ஒயில்
1 தே.க ஒறேன்ஞ் தோல் துருவல்
1 கப் புளுபெரி
1 கப் றாஸ்பெரி
1 கப் ஸ்றோபெரி பாதியாக வெட்டி
1 பீச் 1/2 அங்குல துண்டுகளாக வெட்டி
1 பிளம் 1/2 அங்குல துண்டுகளாக வெட்டி
1/4 கப் புதினா இலை

செய்முறை :

1) கொதி நீரில் உப்பையும் சேர்த்து சூடாக்கி, குஸ்குஸ்சை அதில் போட்டு கிளறி அடுப்பில் இருந்து இறக்கி 5 நிமிடங்கள் விட்டு, குஸ்குஸ்சை கிளறி ஓர் பாத்திரத்தில் போட்டு ஓர் பக்கமாக வைக்கவும்.

2) ஒறேன்ஞ் கொன் சென்றேற், வினிகர், சீனி, எண்ணெய் ஒறேன்ஞ் தோல் துருவல் என்பவற்றை ஓர் பாத்திரத்தில் போட்டு நன்கு கலந்து கொள்ளவும். அதில் பாதியை குஸ்குஸ்சில் போட்டுக் கலந்து கொள்ளவும். குஸ்குஸ்சை மூடி 1 மணிநேரம் குளிரவிடவும்

3) மீதி ஜூஸ் கலவையையும், மீதி இருக்கும் தேவையான பொருட்களையும் குஸ்குஸ்சில் போட்டுக் கலந்து கொள்ளவும். பரிமாறும் பிளேட்டில் போட்டு பரிமாறவும், 12 பேருக்கு போதுமானது.

கலோரி 122
மாசத்து 25g
புரதம் 3g
கொழுப்பு 2g

FASHIONED RASPBERRY SODA

தேவையான பொருட்கள்:
16 அவுன்ஸ் புறோசின் றாஸ்பெரி பழம்
1/4 கப் சீனி
2 மே.க எலுமிச்சம்பழச் சாறு
2 மே.க ட்றிப்பிள் செக் அல்லது ஏறேன்ஞ் ஜூஸ் (Triple Sec)
12 ஸ்கூப் கொழுப்பு குறைந்த வனிலா ஐஸ்கிறீம்
12 கப் லெமன்-லைம் சோடா, ஷம்பேன் (குளிராக)

செய்முறை:
1) சட்டி ஒன்றில் றாஸ்பெரி, சீனி, லெமன் ஜூஸ், ட்றிப்பிள் செக் என்பவற்றை சேர்த்து நடுத்தர சூட்டில் அடுப்பில் வைத்து சூடாக்கவும். 7-10 நிமிடங்கள் அல்லது றாஸ்பெரிகள் மென்மையாக வரும்வரை சூடாக்கவும். அவ்வப்போது கிளறிவிடவும்.

2) றாஸ்பெரி கலவையை பூட் புறொசர்சரில் போட்டு நன்கு அரைத்துக் கொள்ளவும் பின்னர் அதை வடித்து ஜூசை தனியாகப் பிரித்து எடுத்துக் கொள்ளவும்.

3) ஓர் கிளாசில் 2 மே.க றாஸ்பெரி ஜூஸ் கலவையை விட்டு 1 ஸ்கூப் வனிலா ஐஸ்கிறீம் போட்டு மேலே 1 கப் சோடா அல்லது ஷம்பேன் விட்டு பரிமாறவும். 12 பேருக்கு போதுமானது. (அடுப்பில் வைத்து சூடாக்காது மைக்றோவேவில் 5 அல்லது 7 நிமிடங்கள் வைத்தும் சூடாக்கிக் கொள்ளலாம்).

கலோரி 164
மாசத்து 31g
புரதம் 4g
கொழுப்பு 2g

சோயாவினால் உங்களை காப்பாற்றுங்கள்!
றொபூ, சோயாநட், சோயா மில்க் போன்றவை உங்கள் ஹிமியூன் தன்மையைக் கூட்டக் கூடியவை, வெளியில் இருந்து உடலிற்குள் புகும் கிருமிகளை தடுக்க உதவக் கூடியவை. இவற்றை உங்கள் உணவில் சேர்த்துக் கொள்ளலாமே!


BRANDY PEPPER STEAKS

தேவையான பொருட்கள்:
4 மாட்டு இறைச்சித்துண்டு (beef eye round steak) (3/4 அங்குல தடிப்பு)
2 தே.க மிளகுதூள்
1/2 கப் ப்பீவ் ப்றொத் (beef broth)
2 தே.க சோளமா
4 அவுன்ஸ் காளான் அரிந்தது
1/4 கப் வெங்காயத் தாள் நறுக்கி
1 மே.க பிறன்டி (brandy)
1/4 தே.க உப்பு

செய்முறை:
1) இறைச்சியின் இரு பக்கங்களிலும் மிளகுதூளை தூவிக் கொள்ளவும். சோஸ் பான் (Pan) ஒன்றில் சோள மாவை ப்பீவ் ப்றொத்தில் கரைத்துக் கொள்ளவும். அத்துடன் காளான், வெங்காயத்தார், பிறன்டி, உப்பு என்பவற்றையும் சேர்த்து நடுத்தர சூட்டில் அடுப்பில் வைத்து சூடாக்கவும் தடிக்கும் வரை கிளறி அடுப்பில் விடவும். அடுப்பில் இருந்து இறக்கி ஓர் பக்கமாக வைக்கவும்.

2) அடுப்பில் சட்டி ஒன்றை வைத்து கொஞ்சம் எண்ணெய் ஸ்பிறே பண்ணி இறைச்சியை ஒவ்வொரு பக்கமாக பொரித்து எடுக்கவும். உங்களுக்கு விருப்பமானவாறு இறைச்சியை பொரித்து எடுக்கவும். சோசுடன் பரிமாறவும். 4 பேருக்கு போதுமானது.

கலோரி 185
மாசத்து 3g
புரதம் 28g
கொழுப்பு 6g



உலகின் வசீகர இளவரசி டயானா

அத்தியாயம் 3

டயானாவும் அவரது இளைய சகோதரர் சார்ள்சும் மற்ற இரு மூத்த சகோதரிகளுக்கு நேர்மாறான குணம் கொண்டவர்களாக இருந்தனர். ''சிறுவயதில் என்னைப் போன்றே, தனது தம்பியும் கஷ்டப்பட்டான்'' என்றார் டயானா. பெற்றோர் வீட்டில் இல்லாதபோது, சமையல் அறைக்குச் சென்று, சமையல்காரர்களிடம் ஏதாவது சாப்பிடக் கொடுக்குமாறு கெஞ்சுவார்ககளாம். இதனால்தானோ என்னவோ, பின்னாளில் இளவரசியான பிறகு டயானா, மாளிகையின் சமையலறையில் பணியாற்றும் ஊழியர்களிடமே நன்கு பழகினார். சமையலறையில் இருக்கும் நேரத்திலேயே அவர் மகிழ்ச்சியுடன் இருந்தார்.

டயானாவின் பாட்டி ரூத் பெர்மாய் பார்க் இல்லத்திலிருந்து 8 கி.மீ. தொலைவிலேயே வசித்து வந்தார். இந்த வீட்டையும் அவர்தான் மேற்பார்வை செய்து வந்தார். வேலையாட்கள் நியமனம், அன்றாடப் பிரச்சினைகளை அவர்தான் கவனித்து, டயானாவின் தந்தைக்கு உதவி வந்தார்.

டயானாவின் தந்தையுடன் ராணுவத்தில் பணிபுரிந்த ஸ்மித் என்பவரும், அவரது மனைவியும் பார்க் இல்லத்தை நிர்வாகம் செய்து வந்தார்கள். வீட்டில் இருக்கும் பணியாட்களைக் குறிப்பாக, சமையல்காரர்களை அவர்கள் வெளியாட்கள் போல் நடத்தினர். சாப்பிடும் உணவுகள், அனைத்தையும் வீட்டில் இருக்கும் சமையலறையிலேயேதான் தயாராகின. உணவுப் பொருட்களை வெளியிலிருந்து வாங்கிவர எப்பொழுதாவதுதான் அனுமதி உண்டு.

டயானாவின் சகோதரிகள் சாராவும், ஜேனும் விடுதியில் தங்கிப் படித்ததால் தாயாரின் விவாகரத்து அவர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. சாரா மிகவும் குறும்புக்காரர். ''சாரா மிகவும் மோசமாக நடந்துகொள்வார்'' என அவரது வீட்டில் பணியாற்றிய ஊழியர் கூறினார். குதிரையை சமையல் அறைக்குள் ஓட்டிக்கொண்டு வந்து, அதில் அமர்ந்து சாப்பாட்டு மேஜையை சுற்றி வருவார். சமையல்காரர் இதைக் கண்டித்தாலும் அவர் கவலைப்படமாட்டார்.

டயானாவோ, புதிதாக வேலைக்குச் சேர்ந்த ஆயாக்களிடம்தான் குறும்புத்தனத்தைக் காட்டுவார். இருக்கையில் ஊசி வைப்பது, அவர்களது ஆடைகளை ஜன்னல் வழியாக வெளியே இழுப்பது போன்ற குறும்புகளைச் செய்தார். தனக்கு ஏதாவது வேண்டும் என்றால் டயானா பிடிவாதம் பிடிக்கத் தொடங்கிவிடுவார். இதே பழக்கம் அவரிடம் வளர்ந்த பிறகும் தொடர்ந்தது.

விவாகரத்துப் பெற்றதால் டயானாவின் தாய் பிரான்சஸ் மீது தவறான கண்ணோட்டம் ஏற்பட்டது. அவர் நால்போஸ்க் பக்கமே வரவில்லை.

1969ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பிரான்சசின் விவாகரத்து உறுதி செய்யப்பட்டது. பின்னர் அவர் அதே ஆண்டு மே மாதம் பீட்டர் ஷேண்ட்கிட் என்பவரைத் திருமணம் செய்துகொண்டார்.



தனது 2வது திருமணத்துக்கு முன் வார இறுதி நாட்களில் குழந்தைகள் தாயாரைச் சந்திக்க லண்டன் வருவார்கள். குழந்தைகளைப் பார்த்தும் அழுது புலம்புவார் பிரான்சஸ். ஒவ்வொரு வாரமும் இதேபோல் நடக்கும். எதற்காக அழுகிறீர்கள் அம்மா என குழந்தைகள் கேட்டால், அதற்கு நீங்கள் நாளை சென்றுவிடுவீர்களே என்று கூறுவார். டயானாவுக்கு அப்போது 9 வயது.

டயானாவுக்கு தனது தந்தையை மிகவும் பிடிக்கும். தாயை அவ்வளவாகப் பிடிக்காது. ஆனால், சில வேளைகளில் தாயாரின் நிலைமை குறித்துப் பரிதாபம் கொண்டார். இந்நிலையில், பிரிந்து செல்லும் முன் பிரான்சஸ் தனது குழந்தைகளிடம் கடைசியாக ஒரு வார்த்தை கூறினார்.

''கவலைப்படாதீர்கள், எல்லோரும் விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்பிவிடுவீர்கள். அடிக்கடி தொலை

பேசியில் தொடர்புகொள்ளுங்கள்'' இதைத்தான் டயானாவின் தாயார் வீட்டை விட்டு வெளியேறும்போது குழந்தைகளிடம் கூறினார். இந்த வார்த்தைகள் டயானாவுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

தாயின் பிரிவால் மிகவும் மன வேதனையுடன் இருந்தாலும், வீட்டுக்கு வெளியே வேதனையை வெளியில் காட்டிக் கொள்ளமாட்டார். பார்க் இல்லத்துக்கு வந்தவுடன் டயானா, யாருடன் பேசாமலும் இருப்பார். அம்மா இல்லாமலேயே, டயானா இங்கு மகிழ்ச்சியாக இருக்கிறார் என தந்தை நினைத்துவிடக்கூடாது என்பதற்காக அவர் இவ்வாறு நடந்து கொண்டார்.

சாண்ட்ரிங்ஹம் அரண்மனையில் இளவரசர் ஆண்ட்ரூக்கும், எட்வேர்டுக்கும் அவரது தந்தை தேநீர் விருந்து அளித்தபோது, டயானா கலந்து கொள்ளவில்லை. தலைவலி என்று கூறிவிட்டார்.

டயானாவின் லத்தீன் மொழி ஆசிரியர் ரெவரண்ட் ஸ்வீட் கூறுகையில், ''டயனாவுக்கு இளவரசர் ஆண்ட்ரூ மீது ஈர்ப்பு இருந்தது.

விடுமுறை நாட்களில் டயானாவின் சிறந்த நண்பராக அவர் இருந்தார். இளவரசர் ஆண்ட்ரூவுடன் எடுத்துக் கொண்ட புகைப் படங்களைக் காட்டி, 'நான் வளர்ந்ததும் இளவரசர் ஆண்ட்ரூவை திருமணம் செய்துகொள்வேன்' என்றார். அதற்கு, 'உண்மையாகவாக' என நான் கேட்டபோது, 'ஆம், நான் அவரைத் தான் திருமணம் செய்து கொள்வேன், அவர் எனது நண்பர்' என்றார் டயனா. அவர்கள் சிறந்த நண்பர்களாகப் பழகுகிறார்கள், ஒருவரை ஒருவர் நன்கு தெரிந்துவைத்துள்ளனர். விடுமுறை நாட்களை இருவரும் சேர்ந்து கழிக்கின்றனர் என புரிந்து கொண்டேன்'' என்றார்.

இதற்கிடையே, 1971ம் ஆண்டு டயானாவின் சகோதரியான சாரா மது அருந்தும்போது, அவர் படித்துக் கொண்டிருந்த பாடசாலையான வெஸ்ட் ஜூ ஹீத் ஊழியர் ஒருவர் கவனித்துவிட்டார். இதையடுத்து அவர் பாடசாலையிலிருந்து நீக்கப்பட்டார்.



டயானா வெஸ்ட் ஜூ ஹீத் பாடசாலையில் சேர்ந்தபோது, டயானாவின் சகோதரி ஜேனுக்கு 16 வயது. ஜேன் படிப்பில் சிறந்து விளங்கினார். சாரா அப்பாடசாலையில் இல்லை. (மது குடித்ததற்காக பள்ளியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே வெளியேற்றப்பட்டார்).

இது குறித்து சாராவின் பாடசாலைத் தோழி கூறுகையில், ''சாரா படிப்பில் மட்டுமல்லாது, விளையாட்டிலும் சிறந்து விளங்கினார். பல பரிசுகளை வென்று குவித்தார். இருந்தபோதிலும், வெஸ்ட் ஜூ ஹீத் பாடசாலையின் சூழ்நிலை அவருக்கு வெறுப்பையே ஏற்படுத்தியது. நான், வெறுப்பை உணர்ந்ததால் குடியை நாடினேன். பலவித மது வகைகளை விரும்பினேன். எனக்கு வோட்கா மட்டுமே பிடிக்கும். அதைக் குடித்தால் வாசனை ஏதும் வராது என்று சாரா கூறினார்'' என்றுநினைவுகூர்ந்தார்.

வெஸ்ட் ஜூ ஹீத் பாடசாலையில் 120 மாணவிகள் படித்து வந்தனர். இப்பாடசாலையில் நன்னடத்தைக்கும், மகிழ்வுடன் இருப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஆனால், அங்கு படிப்புக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. இங்கு படிப்புக்கு முக்கியத்துவம் தராமல், மாணவிகளை வேறு ஒரு விடயத்துக்கு தயாராக்கவே இந்த பாடசாலையில்

சேர்க்கப்பட்டனர். அந்த விடயம் தான் என்ன?

பிரிட்டனின் அந்தக்கால வாழ்க்கை முறைப்படி, பெரும் செல்வந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு படிப்பில் முக்கியத்தும் அளிக்கப்பட மாட்டாது. அவர்கள் திருமண வாழ்க்கைக்குத் தயாராகவே பாடசாலையில் சேர்க்கப்பட்டனர். இது போன்ற பாடசாலைதான் வெஸ்ட் ஹீத் பாட சாலை.

படிப்பைவிட செல்லப்பிராணி வளர்ப்புக்கு பாடசாலையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அங்கு படித்தவர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடனும், தன்னம்பிக்கையுடனும் வெளியே வந்தனர். அங்கு இயல்பான சூழ்நிலையே நிலவியது.



டயானாவும் அவரது இளைய சகோதரர் சார்ல்ஸ்

டயானாவை உன்னிப்பாகக் கவனித்து வந்த அப்பாடசாலையின் தலைமை ஆசிரியை ரூத் ரட்ஜ் ''பாடசாலையில் சேர்ந்த புதிதில் டயானா பெரியவர்களைக் கண்டு பயந்தார்.

ஆசிரியர்களிடம் கடுகடுப்பாக நடந்து கொண்டார். எனினும், அவரைக் கவனித் துக்கொள்ளும் நபர்கள் புத்திசாலிகளாகவும், திறமையானவர்களாகவும் அமைந்தது ஓர் அதிர்ஷ்டம் என்றே கூறலாம்.



டயானா

அவர்கள் டயானாவுக்கு முன்பே பழக்கப்பட்டிருந்ததால், பள்ளிச் சூழலுக்கு ஏற்ப மாற்றிக்கொள்ள டயானாவால் முடிந்தது. இதுவே, பிறகு சமூகத்தில் ஒரு முத்திரையைப் பதிக்க ஒரு காரணமாக அமைந்தது.

இந்தப் பாடசாலையில் டயானாவின் தோழிகளான கரோலின் பிரைட், லாரா கிரேக் ஆகியோர் நம்பிக்கைக்கு உகந்த தோழிகளாக பின்னாளில் இருந்தனர். பிற்கா லத்தில் டயானாவின் சுக, துக்கங்களை அவர்கள் பகிர்ந்துகொண்டனர்.



டயானா

தனது பெற்றோர்களின் விவாகரத்தால் ஏற்பட்ட துயரம் எப்போதும் அவரின் மனதிலிருந்து விலகவில்லை. அப்பாட சாலையில் டயானாவை கவனித்துக் கொண்ட வயலட் ஆலன் கூறுகையில், ''இப்பிரச்சினை குறித்து அடிக்கடி டயானா என்னிடம் பேசியுள்ளார்'' எனக் கூறுகிறார். ''தாய், தந்தையரின் பிரிவை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சில விடயங்களில் டயானா எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடியவராகவும் பலவீன மானவராகவும் இருந்தார். அவை குறித்து நான் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. எனினும் பொதுவாகப் பாதுகாப்பின்மை, தனது பெற்றோரின் விவாகரத்தினாலும் அவர் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார்'' எனக் கூறினார்.

தாய், தந்தை விவாகரத்தினால் பாதிக்கப்பட்டிருந்த டயானா மன இறுக்கத்துடன் இருந்தார். ஆனால், அந்த இறுக்கம் நாளடை வில் குறைந்து கொண்டே வந்தது.

பாடசாலையில் பியானோ வாசிக்கக் கற்றுக்கொண்டார். பாலே நடனம், போல் ரூம் நடனம் ஆகியவற்றைப் பழகினார். இது அவரது மன இறுக்கத்தைத் தளர்த்தியது.

ஒருமுறை பாடசாலையில் நடைபெற்ற நடனப்போட்டியில் டயானா முதல் பரிசை வென்றார்.

அதே போல, ஆண்டு தோறும் நீச்சல், டைவிங் போட்டிகளில் டயானாவுக்கு பரிசு நிச்சயம் உண்டு.

உள்ளூர் மருத்துவமனைக்கு மனநலம் பாதிக்கப்பட்டவர்களைக் காணச் செல்லும் போதெல்லாம் அங்கு துன்பப்படும் நோயாளிகளிடமும், ஏழைகளிடமும் அவர் பாசம் கொண்டிருந்தார். அங்கு ஆடல் நிகழ்ச்சி, நடக்கும்போது, அவர்களின் சக்கர நாற்காலிகளை இழுத்து முன்னுக்குப் பின் நகர்த்தி, தன்னுடன் அவர்களும் நடனமாடுவதைப்போல் நடந்து கொள்வார்.

அன்றாட வாழ்வில் டயானா சில வேளைகளில் மிகவும் உணர்ச்சி வசப்படக்கூடிய வராக இருந்தார். அவரைச் சீண்டியவரை அவர் மன்னிக்க மாட்டார். டயானா வலுவான மனோதிடம் உள்ளவர் என அவரின் ஆசிரியை கூறுகிறார். தனக்கு வேண்டும் என்றால் அதை அடையாமல் விடமாட்டார் என்று தலைமை ஆசிரியர் கூறுகிறார்.



டயானா

அப்பாடசாலையின் கடைசி ஆண்டு படிக் கும்போது சிறந்த மாணவியாக டயானா தேர்வு செய்யப்பபடடார். சேவைக்காக சிறப்புப் பரிசையும் அவர் பெற்றார். தலைமை ஆசிரியை ரூத் ரட்ஜ் கூறுகையில், ''டயானாவை நம்பி எந்தப் பொறுப்பையும் ஒப்படைக் கலாம். அவர் தனது வரம்புக்கும் மீறி மக்களுக்கு உதவி செய்யும் குணம் உள்ளவர். தாராள மனம் படைத்தவர்'' என்றார்.



டயானா

டயானா தனக்குப் பொழுது போக வில்லை என்றால், பார்பரா கார்ட் லேண்ட் எழுதிய காதல் கதைகளைப் படிக்கத் தொடங்கி விடுவார். பொதுவாக பார்பரா கார்ட்டேலண்ட் எழுதிய கதைகளில், வலு வான ஆண் மகன் எவ்விதம் இளம் கன்னிப்பெண்களைக் கவர்ந்து திருமணம் செய்து கொள்வதைப் பற்றியதாகவே இருக்கும். இது போன்ற கதைகள் வாழ்க்கையில் எப்போதுமே சரியான திசையில் சென்று முடிவதில்லை. டயானா வின் வாழ்விலும் இதுவே நடந்தது.



டயானா

1975ம் ஆண்டு ஜூன் 9ம் திகதி ஏர்ல் ஸ்பென்சர் மரணம் அடைய டயானா குடும்பம் பார்க் ஹவுசில் இருந்து ஸ்பென்சர் குடும்பம் இருந்த அல்தார்ப்புக்கு சென்றது. விஸ்கவுன்ட் அல்தார்ப் 8வது ஸ்பென்சர் என்ற பிரபு அந்தஸ்தைப் பெற்றார். இது பற்றி டயானா நினைவு கூர்கையில், ''எனக்கு அப்போது 13 வயதிருக்கும் எனது தாத்தா ஏர்ல் ஸ்பென்சர் திடீரென மரணமடைய வாழ்க்கைப் பாதையே மாறியது. நாங்கள் நார்போல்க்கில் இருந்து அல்தார்ப்புக்கு செல்ல நேர்ந்தது. வளர்ந்த இடத்தில் பழகியவர்களைப் பிரிந்து புதிய இடத்துக்குச் செல்வது மிகவும் சிரமமாக இருந் தது. தவிர, அல்தார்ப்பில் எனது சித்தி றெய்ன் நிறைய பிரச்சினைகளைக் ஏற்படுத்தி வந்தார். எங்களது தந்தையைப் பிரித்துச் சென்று விடுவாரோ என்று அச்சப்பட்டோம்'' என்றார்.

டயானாவின் தந்தைக்கு மொத்தம் நான்கு குழந்தைகள் என்றாலும் இவர்கள் அனை வரும் எப்போதும் ஒற்றுமையாக இருந்தார்கள். எந்த விடயங்கள் என்றாலும் அதில் ஒரேவிதமான கருத்துகளைக் கொண்டிருந்தனர். இவர்கள் அனைவருக்குமே சித்தி றெய்ன் டார்ட்மவுத்தை மட்டும் சுத்தமாகப் பிடிக்காது.

பின்னர் றெய்ன் டயானாவின் தந்தையை முறைப் படி திருமணம் முடித்து மனைவி அந்துஸ்தை பெற்றார். ஆனாலும், குழந்தைகளின் மனநிலையில் மாற்றம் ஏற்பட வில்லை. ஏற்கெனவே தாயைப் பிரிந்த நிலையில் தற்போது தந்தை யையும் தனது சித்தி பிரித்துச் சென்றுவிடுவார் என்றே அவர்கள் அச்சமடைந்தனர். இதனால், தொடர்ந்து றெய்ன் மீது வெறுப்புக் காட்டினார்கள்.

இந்நிலையில், டயானாவின் மூத்த சகோதரி சாராவுக்கு பத்திரிகை ஊடகங்களுடன் தொடர்பு இருந்தது. பத்திரிகையாளர்கள் நிறைய பேர் அவருக்கு நண்பர்களாக இருந்தனர். இதனைப் பயன்படுத்தி சித்தி றெய்ன் டார்ட்மவுத்தை பற்றி தவறாகச் செய்திகளை உள்ளூர் பத்திரிகைகளில் வெளியிடச் செய்தார். இந்தச் செய்திகள் பெரும் பரபரப்பாகப் பேசப்பட்டன.

தொடரும்....




விமானம் போல மேலேறும் ஹெலிகொப்டர் போல தரையிறங்கும்

கட்டுரைக்குள் செல்லுமுன் இதைப் படித்துவிடுங்கள். கட்டுரையின் உள்ளடக்கத்தைப் பார்த்தவும் இது ஏதோ புரியாத டெக்னிக்கல் சமாச்சாரம் என்று விலகிச் சென்றுவிடாதீர்கள். அனைவருக்கும் புரியும் வகையில் மிக எளிமையாகக் கொடுக்க முயன்றிருக்கிறோம். ஒருமுறை படித்துப் பாருங்கள். நிச்சயம் புரியும்.

ஓஸ்பிரே (*Osprey*) என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? பறவைகள் பற்றி ஓரளவு தெரிந்த ஆளாக இருந்தால், அது ஒரு பறவை என்று சொல்லி விடுவீர்கள். வடஅமெரிக்கக் கடல்களில் பறக்கும் ஒருவகை கடற்கழுகு அது. சில சமயங்களில் 'மீன் கழுகு' எனவும் அழைக்கப்படுகிறது. சரி. 'ஒஸ்பிரே வி-22' என்பது என்னவென்று தெரியுமா?

இது அமெரிக்க ராணுவத்திடம் இருக்கும் ஒரு ரக விமானம். வீட்டுக்குத் தேவையில்லாத நாய்க்குட்டியை ஊருக்கு வெளியே கொண்டுபோய் விடவிட, அது திரும்பவும் வீட்டுக்குள் வந்துவிடுவதுபோல அமெரிக்கா கைகழுவப் பலகாலமாக முயற்சித்தும், கைகழுவ முடியாமலிருக்கும் விமானம்.

தற்போது அமெரிக்க துணை ஜனாதிபதியாக இருக்கும் டிக் செனி இதைக் கைகழுவ பல முறை தீவிரமாக முயற்சி மேற்கொண்டார் என்பதை கற்பனை செய்து பார்ப்பதுகூட கடினமாக இருக்கும். ஜோர்ஜ் எச்.டபிள்யு.புஷ்ஷின் (தற்போதய ஜனாதிபதியின் தந்தை) பாதுகாப்பு செயலாளராக பணியாற்றிய காலத்திலேயே மரைன் கோர்ப்ஸின் இந்த விமானத்தை அழிப்பதற்கு நான்கு முறை அவர் முயற்சி மேற்கொண்டார். ஆனால், நான்கு முறையும் தோல்வி தான் கிடைத்தது.



ராணுவத்தினரை ஏற்றிச்செல்லக்கூடிய இந்த போர் விமானம், கவர்ச்சிகரமானது இல்லை என்றும், அதில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளை சரி செய்ய முடியாது என்பதையும் டிக் செனி திரும்பத்திரும்பக் கூறிக்கொண்டிருந்தார். ''ராணுவத்தின் நிலையில் இருந்து பார்க்கும்போது எந்த விமானங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று பார்த்தால், 'ஒஸ்பிரே வி-22' உயர் முன்னுரிமைப் பட்டியலில் இல்லை'' என்று 1989ம் ஆண்டு செனட் கமிட்டி கூட்டத்தில் அவர் தெரிவித்தார். ''இந்த விமானம் பட்டியலின் கடைசியில் வந்துள்ளது. அந்த காரணத்திற்காகத்தான், ஒஸ்பிரேயை கைவிட நான் முடிவு செய்தேன்''

ஆனால், ஒஸ்பிரேயை அழிக்க முடியாது என்பது நிரூபணமாகிவிட்டது.

டிக் செனியின் கோடாரியால் வெட்டுப்படுவதற்கு முன், செனட் கமிட்டியைச் சேர்ந்தவர்கள் இந்த விமானத்தைக் காப்பாற்றிவிட்டனர். சொந்த மாவட்டங்களிலிருந்து வந்த பணத்தை இந்த விமானத் திட்டத்துக்குத் திருப்பிவிட்டு, இந்த பணியை கச்சிதமாக அவர்கள் நிறைவேற்றி விட்டனர். இதன் மூலம், விமானபோக்குவரத்து துறையில் ஹெலிகொப்டரை மேம்படுத்தி மிகப்பெரிய சாதனை

ஒன்றை புரிவதற்கான வழியை அமெரிக்க பொறியாளர்கள் கண்டுபிடித்தனர்.

தற்போது இந்த விமானம், ஏரோபிளேன் போன்று பறக்கிறது. ஆனால், ஹெலிகொப்டர் போல் தரையிறங்கவும், புறப்படவும் செய்கிறது. ஈராக்கில் நடைபெறும் போரில் பயன்படுகிறது.

இந்த விமானத்தை தயாரிக்க நீண்ட காலம் பிடித்துள்ளது. உருவாக்குவதற்கு 25 ஆண்டுகள் ஆகியுள்ளன. நிலவுக்கு மனிதனை அனுப்ப அப்பல்லோ திட்டத்தை செயல்படுத்துவதற்கு எடுத்துக் கொண்ட கால அளவை விட இது இரண்டு மடங்கு. ஓஸ்பிரே *V-22* விமானம் போரில் ஈடுபடுத்தப் படுவதற்கு முன்பாக கீழே விழுந்து நொறுங்கிய சம்பவங்களில் 30 பேர் உயிரிழந்துள்ளனர். நிலவுக்கான திட்டத்தில் உயிரிழந்தவர்களை விட இது பத்து மடங்கு அதிகமாகும்.

ஓஸ்பிரே திட்டத்திற்காக பென்டகன் 20 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது. இத்திட்டம் நிறைவு பெறுவதற்காக, மேலும் 35 பில்லியன் டொலர்களை செலவிடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் அமெரிக்க ராணுவத்துக்கு 458 விமானங்கள் கிடைக்கும். ஒரு விமானத்தின் சாரசரி விலை 119 மில்லியன் டொலர்.

பணத்தை விழுங்கும் திட்டம்

அமெரிக்காவில் மிகப்பெரிய ஆயுத சாதனங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பதற்கு பல வழிகளில் சிறந்த உதாரணமாக *V-22* விமானம் இருக்கிறது. ராணுவ-தொழில்துறை வட்டாரங்களில் 'தேவையற்ற ஆதிக்கம்' செலுத்தப்பட்டு வருவதாக, 1961ம் ஆண்டே அன்றைய ஜனாதிபதி டூவைட் ஐஸ்நோவர் எச்சரிக்கை விடுத்தார். ஓஸ்பிரேயை வடிவமைத்து, கட்டி, சோதனை செய்து, களத்திற்கு கொண்டு வருவதற்கு பல ஆண்டுகள் பிடித்துள்ளது. இதற்கு அர்த்தம் என்னவெனில், முக்கிய கான்ட்ராக்டர்களான பெல் ஹெலிகொப்டர் மற்றும் போயிங் ஆகிய நிறுவனங்களுக்கு எக்கச்சக்கமான பணம் கொடுக்கப்பட்டுள்ளது.


விமானம் ஒரு குறிப்பிட்ட வடிவமைப்புக்கு வந்த பிறகு செலவுகளும் அதிகரித்தன. இந்த விமானத்தின் இலக்குகள் பாதியாக குறைக்கப்பட்டன அல்லது ஒதுக்கப்பட்டன.

ஆண்டுதோறும் பாதுகாப்புத் துறைக்கு அமெரிக்கா, ஏறத்தாழ 500 பில்லியன் டொலர்களை ஒதுக்குகிறது. இதில், ஈராக் மற்றும் ஆப்கனிஸ்தானில் மேற்கொள்ளப்பட்டு வரும் ராணுவ நடவடிக்கை களுக்காக ஆண்டு தோறும் செலவிடப்படும் 200 பில்லியன் டொலர்கள் இந்த கணக்கில் வராது. தேவையற்ற திட்டங்களுக்காக பெருமளவில் பணம் செலவிடப்பட்டு வருகிறது.

ஒரளவுக்கு நடுத்தரமாக பாதுகாப்புத்துறைக்கு பணம் ஒதுக்கப்பட்ட ரொனால்ட் ரீகன் காலத்துடன் ஒப்பிடும் போது, தற்போதுள்ள காங்கிரஸ் உறுப்பினர்களிடம், பென்டகன் சீர்திருத்தம் மற்றும் அதன் திறனை மேம்படுத்துவதில் ஆர்வம் மிகவும் குறைவாக



இருக்கிறது. ''அமெரிக்க ராணுவத்தில் கிட்டத்தட்ட ஒவ்வொரு திட்டத்தையும் செயல்படுத்துவதற்கு அதிக காலம் எடுத்துக்கொள்ளப் படுவதுடன், முன்கூட்டியே கணித்ததற்கு மாறாக அதிக செலவும் பிடிக்கிறது'' என கார்டோன் ஆடம்ஸ் தெரிவிக் கிறார். பில் கிளிண்டன் ஆட்சியின் போது, மேலாண்மை அலுவலகத்திற் காக ராணுவத்தில் மேற் கொள்ளப்பட்ட செலவு மற்றும் பட்ஜெட் தொடர்பான விவகா ரங்களை இவர்தான் மேற்பார் வையிட்டு வந்தவர்.



உயிர்பிழைத்த கதை

உண்மையில், 40 மில்லியன் டொலர் செலவில் ஒரு விமானத்தை தயாரிப்பது என்றும், 10 ஆண்டுகளுக்குள் 1000 ஓஸ்பிரே விமானங்களைத் தயாரித்து முடிப்பதும் என்றும் முதலில் தீர்மானிக்கப்பட்டது. ஓஸ்பிரே பார்ப்பதற்கு விமானம் போன்று காட்சியளித்தாலும், ஹெலிகொப்டர் போல் செங்குத்தாக ஏறி, இறங்கும். விமானத்தின் இறக்கைகள் மற்றும் என்ஜின்களை நாடுவானில் சுழற்றுவது போன்றவை தொழில்நுட்ப ரீதியில் பெரும் சவாலாக இருந்ததால், இந்த திட்டம் காலதாமதமடைந்தது. அத்துடன், அதன் விலையும் உச்சத்தை தொட்டது.

செலவுகள் அதிகரித்ததால், வாங்க விரும்பிய விமானங்களின் எண்ணிக்கையை பென்டகன் குறைத்தது. அதனால், தனி ஒரு விமானத்தின் விலை உயர்ந்தது. செலவுகள் அதிகரித்ததை காரணம் காட்டி, 1983ம் ஆண்டு இத்திட்டத்தை ராணுவம் கைவிட்டது. மரைன் கார்ப்ஸின் சிறிய பிரிவினரின் பயன்பாட்டிற்காக தயாரிக்கப்படும் இந்த V-22- விமானங்கள் ஏறக்குறைய அதன் கொள்முதல் பட்ஜெட்டில் 70 சதவீதத்தை விழுங்கின. மேலும், இந்த திட்டத்தை பெரியளவில் மேற்பார்வையிட வேண்டியிருந்ததுடன், மற்ற திட்டங்களை விட தொழில்நுட்ப ரீதியாக பெரும் சவால் அளிப்பதாகவும் இருந்தது.

பென்டகனின் பலவீனத்தை மோப்பம் பிடித்த காங்கிரஸ் உறுப்பினர்களின் ஆதரவாளர்கள், இத்திட்டத்திற்கு உயிரூட்டுவது என முடிவு செய்தனர். இவர்களின் பெரும்பாலானவர்கள், V-22 விமானங்களை தயாரிக்கும் நிறுவனங்கள் அமைந்துள்ள மாகாணங்களான டெக்ஸஸ் (பெல் ஹெலிகொப்டர்) மற்றும் பென்சில்வேனியா (போயிங்) ஆகியவற்றை சேர்ந்தவர்கள். செனியின் எதிர்ப்புக்கு இடையே, இத்திட்டத்தை உயிருடன் வைப்பதற்காக, அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து V-22 கூட்டணியை உருவாக்கினர்.

40க்கும் மேற்பட்ட மாகாணங் களில் பரவியிருந்த கிட்டத்தட்ட 2 ஆயிரம் V-22 விநியோகஸ் தர்கள், இத் திட்டத்தை தொடர்ந்து செயல் படுத்து வற்காக, அவர்களின் எம்.பி.க்க ளுக்கு நிர்பந்தம் அளித்தனர். இதற்காக, அவர்கள் பெருமளவில் பணம் செலவிட்டனர். அதனால், செனியின் கிடுக்கிப்பிடிக்கு மத்தியிலும், ஓஸ்பிரே உயிர்பிழைத்தது.

அதிக வேகத்தால் ஆபத்து

1993ம் ஆண்டு ஓஸ்பிரே திட்டம், அதன் 12வது பிறந்த நாளை எட்டியது. பில்கிளிண்டன் ஜனாதிபதியான அந்த நேரத்தில், இந்த விமானங்களுக்காக 13 பில்லியன் டொலர்களை மரைன்ஸ் செலவிட்டிருந்தது. ஆனால், எந்த விமானமும் போர்க்களத்துக்கு தயாராகவில்லை. 1991ம் ஆண்டு V-22 விமானங்களில் ஒன்று, முதன் முறையாக பறக்க தயாரானது. அந்த விமானம் மேலே எழும்பும்போதே கீழே விழுந்து நொறுங்கியது. சரியான முறையில் வயரிங் செய்யப்படாததே இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

1992ம் ஆண்டு இரண்டாம் முறையாக கீழே நொறுங்கி விழுந்ததில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். இருந்தபோதிலும், கிளிண்டன் நிர்வாகம் இத்திட் டத்தை 90ம் ஆண்டுகளில் தொடர்ந்து செயல்படுத்தி வந்தது. ஆனால், 2000ம் ஆண்டு, மேலும் இரண்டு V-22 விமானங்கள் கீழே விழுந்து நொறுங்கியதில் 23 பேர் கொல்லப்பட்டனர்.

அதனால், மரைன்கள், 18 மாதங்கள் ஓஸ்பிரேக்கு ஓய்வு கொடுத்தனர். அதனை, இயக்காமல் அப்படியே வைத்திருந்தனர்.

2000ம் ஆண்டு நிகழ்ந்த கோரமான விபத்துக்கான

காரணம் பற்றி நடத்தப்பட்ட விசாரணையில், மிக வேகமாக விமானத்தை தரையிறக்க முற்பட்டதால் விபத்து நேரிட்டதாக தெரிவிக்கப்பட்டது. அதனால், மரைன்கள், அவர்களுடைய சோதனை திட்டங்களில் மாற்றங்களை மேற்கொள்ளவேண்டியிருந்தது. விமானங்களை பத்திரமாக தரையிறக்க, அவற்றின் வேகம், எடை மற்றும் பிற காரணிகளை, பயிற்சி விமானிகள் கவனத்தில் கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், குறிப்பிட்ட காலக் கெடுவில் பாதியைத்தான், விமானிகளால் நிறைவேற்ற முடிந்தது.

இந்த போக்கு தொடர்ந்தது. 2004ம் ஆண்டு திட்டத்தின் படி 131 மணி நேரம் இரவு நேரத்தில் விமானங்களில் பறந்து சோதனை நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், மரைன்களால் ஓஸ்பிரேயில் 33 மணி நேரம் மட்டும் தான் பறக்க முடிந்தது. இதற்கு என்ன காரணம்? பெரும்பாலான V-22 விமானங்களில் கியர் பொக்ஸ்கள் சரிவர செயல்படாததால், அவற்றை விமானிகள் தரையிறக்கிவிட்டனர். அதனால், இரவு நேரங்களில் பறப்பதற்கான தகுதியை பெரும்பாலான விமானிகள் பெறவில்லை.

இதே போல், கடலில் நடத்தப்படவிருந்த ஒத்திகையும் தடைப்பட்டது. ஏனெனில், இந்த சோதனையை நடத்துவதற்கு 21 நாட்கள் கப்பல்கள் தேவைப்பட்டது. (கப்பலின் மேல்த்தளத்தில் இருந்து விமானங்களை ஏற்றி இறக்கிப் பயிற்சி செய்ய) ஆனால், ஓஸ்பிரே விமான சோதனையை நடத்துவதற்கு ஏற்ற கப்பல்களில், 10 நாட்கள் மட்டும் சோதனைக்கு அனுமதி கிடைத்தது. மிகுதி நாட்களில் கப்பல்தர முடியாது என்றுவிட்டது கடற்படை

சாகசம் செய்யுமா?

இந்த விமானத்தின் மணல்புயல் சோதனையும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. பாலைவனம் போன்ற இடங்களில் V-22 தரையிறங்கும் போது, மணல் புயலை ஏற்படுத்த வேண்டும். ஆனால், அது போன்ற சோதனை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஏனெனில் ''தரையிறங்கும் முயற்சிகளின் போது, தாவரங்களிலிருந்து வழக்கத்திற்கு மாறாக வெளிப்பட்ட ஈரப்பதத்தின் காரணமாக, மணல் புயல் ஏற்படவில்லை'' என பென்டகனை சேர்ந்த மூத்த சோதனையாளர் குறிப்பிடுகிறார்.

இருந்தும், திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

கடினமான சூழ்நிலைகளில் இந்த விமானத்தின் பறக்கும் திறன் குறித்து எச்சரிக்கப்பட்டது. 2000ம் ஆண்டு விபத்துக்குப் பிறகு, மிதமான வேகத்தில்



செல்லுமாறு ஓஸ்பிரே விமானிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. அதற்குப் பிறகுதான் எந்த V-22 விமானமும் விபத்துக்குள்ளாகவில்லை.

''இப்போது அனைத்து பணிகளையும் இந்த விமானம் மேற்கொள்ளும் என மரைன்கள் கூறி வருகின்றனர். ஆனால், சிறிது சிறிதாக, இந்த விமானத்தின் பயன்பாடுகள் குறைக்கப்பட்டு வருகின்றன'' என பிலிப் கோய்லி தெரிவிக்கிறார். 1994-2001ம் ஆண்டு வரையிலான காலத்தில் V-22 முன்னேற்றம் குறித்து கண்காணிப்பதற்கான பென்டகனின் உயர் ஆயுத சோதனையாளராக இவர் இருந்தார்.

''பாதுகாப்பான ஒரிடத்திலிருந்து மற்றொரு பாதுகாப்பான இடத்திற்கு டிரக் போன்று இதை பயன்படுத்தினால், V-22 விமானம் பாதுகாப்பானது. ஆனால், போர்க்காலங்களில் அவற்றை பயன்படுத்துவது குறித்து எண்ணிப்பார்க்க முடியவில்லை. ஏனெனில், அங்கு ஏராளமான சாகசங்களில் இந்த விமானங்கள் ஈடுபட வேண்டியிருக்கும்'' என்றும் அவர் தெரிவிக்கிறார்.

தொழில்நுட்ப குளறுபடி

மரைன்கள் வாதிடுவது என்னவென்றால், V-22 ஒரு தாக்குதல் விமானம் என்றும், துப்பாக்கி குண்டுகள் தங்களை தாக்கும் என எண்ணும் எந்த ஒரு விமானியும், நிதானமாக விமானத்தை ஒட்டிச்செல்லமாட்டார் என தெரிவிக்கின்றனர். ''இந்த விமானம் திறமையுடன் செயல்படக்கூடியது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை'' என V-22 விமானத்தின் பிரபல விமானிகளுள் ஒருவரான லெப்டினன்ட் கேர்னல் அன்டனி பியான்கா தெரிவிக்கிறார்.

இதில் உள்ள மிக மோசமான ரகசியம் என்னவென்றால், ஏரோப்பிளேன் மற்றும் ஹெலிகொப்டரின் சிறப்பம்சங்களை இந்த விமானம் கொண்டிருக்கும் அதே நேரத்தில், மிக மோசமான

அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது. விமானம் போன்று *V-22*-வால் நழுவிச் செல்ல முடியாது. ஹெலிகொப்டர் போன்று வானத்தில் அங்கும், இங்குமாக வட்டமிடவும் முடியாது. ஏரோப்பிளேன் போன்று பறக்கும்போது, சக்தியை இழந்துவிட்டால், கடினமான இடங்களில் தரையிறங்கும் திறனை பெற்றிருக்க வேண்டும். இந்த விமானத்தின் மிகப்பெரிய 19 அடி நீள (5.7 மீட்டர்) சுழலும் இறக்கைகள், பயணிகள் இருக்கை பகுதியை இரண்டாக கிழித்துக்கொண்டு உடைவதை விட, தூள் தூளாக உடையும் வண்ணம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

V-22- விமானம் ஹெலிகொப்டர் போன்று பறக்கும் நிலையில், தரையிறங்கும்போதோ அல்லது புறப்படும்போது, எதிரிகளின் துப்பாக்கிச்சூடு அல்லது யந்திரக் கோளாறு காரணமாக அதன் என்ஜின்கள் செயலிழந்தால் என்ன நடக்கும்? உண்மையில், *V-22* விமானம் ஹெலிகொப்டர் போன்று பறக்கும்போது, அதன் என்ஜின் செயலிழந்தால், உயிர் தப்புவதற்காக *Autorotating* முறை மூலம் தானாகவே தரையிறங்கும் வகையில் வடிவ மைக்கப்பட்டுள்ளது. மிகவும் கடினமான அவசர காலங்களில் *Autorotating* மூலம் மெதுவாக தரையிறங்குவதால், குறைந்தபட்சம் உயிர்பிழைக்கலாம்.



ஒஸ்பிரேயின் வடிவமைப்பில் பல முறை மாற்றங்கள் செய்யப்பட்ட போதிலும், அதன் திறன்களை மேம்படுத்த முடியவில்லை. இதை பென்டகன் படிப்படியாக ஒப்புக்கொண்டது. ''*Autorotating* திறன் போதுமான அளவிற்கு நிரூபிக்கப்படாதது கவலையளிக்கிறது'' என 1999ம் ஆண்டு அறிக்கை எச்சரித்தது.

ஆனால் ஆச்சரியகரமாக, *V-22*-விமானத்தில் கட்டாயம் இருக்க வேண்டிய அம்சங்களில், பத்திரமாக தரையிறங்குவது என்ற பாதுகாப்பு விதிமுறை தேவையில்லை என்ற முடிவுக்கு பென்டகன் வந்தது. ''பத்திரமாக தரையிறங்குவதற்கு ஓட்டோ ரொட்டேஷன் என்ற அம்சம் தேவையில்லை'' என 2002ம் ஆண்டு பென்டகன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தை ரத்து செய்ய முயற்சி அல்லது *V-22*ல் பயணம் செய்பவர்கள் கொல்லப்படக்கூடிய அபாயம் போன்ற பிரச்னைகளால், இந்த விமானத்தை எப்படியாவது பாதுகாப்பது என மரைன்கள் முடிவு செய்தனர். அதன்படி, மிகவும் அபாயகரமான சூழ்நிலைகளில் இந்த விமானத்தில் பறக்கும்போது உயிர்பிழைப்பதற்கான பொறுப்பு, விமான வடிவமைப்பாளர்களிடமிருந்து விமானிகளுக்கு மாற்றப்பட்டது.

இப்பிரச்னைக்கு தீர்வு காண பொறியாளர்கள் பல ஆண்டுகளை வீணாக செலவிட்டு வரும் நிலையில், பாதிக்கப்பட்ட *V-22* விமானத்திலிருக்கும் விமானிகள், ஒருசில நொடிகளில் முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. சிமுலேட்டருக்கு (தரையிலுள்ள பயிற்சிக்கூடம்) வெளியே, விமானிகள் ஒருபோதும் திட்டமிட்டபடி பயிற்சி மேற்கொள்ளவில்லை. சிமுலேட்டரில் கூட முடிவுகள் உறுதியளிக்கும் வகையில் வரவில்லை.

''சிமுலேஷன்களை பொறுத்தவரை தரையிறங்கும் போது கிடைக்கும் முடிவுகள் மிகவும் வேறுபட்டு இருக்கும். ஏனெனில் விமானிகளின் தொழில்நுட்ப திறன் மற்றும் நேரம் ஆகியற்றை பொறுத்து இது மாறுபடும்'' என விமானப் பயிற்சி கையேடுகள் எச்சரிக்கின்றன. பென்டகன் சோதனை அலுவலகத்தின் இயக்குனர், 2005ம் ஆண்டு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இது பற்றி மிகவும் அப்பட்டமாக கருத்துக்களை தெரிவித்திருந்தார். ''*V-22* விமானம், ஹெலிகொப்டர் போன்று 1,600 அடிகளுக்கு கீழே பறந்து கொண்டிருக்கும் போது, சக்தியை இழக்கும் நிலையில், அவசரமாக தரையிறங்கினால் உயிர்பிழைக்க வாய்ப்பில்லை'' என அவர் தெரிவித்தார்.

Aerodynamics of Autorotation பற்றி புரிந்துகொள்வது என்பது இத்துறையுடன் பரிச்சயமற்ற வாசகர்களுக்கு மிகவும் சவால் அளிக்கக்கூடிய விஷயம்தான். ஆனால், *V-22*வை போர்முனைக்கு அனுப்பும்போது, அதில் சிறிய துப்பாக்கி மட்டுமே பின்பக்கமாக குறிவைத்து பொருத்தப்பட்டிருக்கும் என்பதை யார் வேண்டுமானாலும் புரிந்து கொள்ளலாம். *V-22*-பற்றி பென்டகன், அதன் இணையதளத்தில் குறிப்பிடும் போது, ''முழு அளவிலான போரில் பயன்படுத்து வதற்கு சிறந்த ஆயுதமாக இது இருக்கும்'' என தெரிவித்துள்ளது.

இது மிகவும் அப்பட்டமான பொய்யாகும்.

ஓய்வு பெற்ற ஜெனரல் ஜேம்ஸ் ஜோன்ஸ், *V-22*ன் ஆதரவாளர் என்ற முறையில், அண்மையில் ஈராக்கில் பாதுகாப்பு படையினரின் திறன் குறித்து நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றுக்கு தலைமை வகித்தார். ஆனால், 1999-2003ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், இவர் மரைனில் பணியாற்றியபோது, 50 கலிபர் துப்பாக்கியை கூட இந்த விமானத்தில் பொருத்தமுடியாது என தெரிவித்தார். ''தொழில்நுட்பரீதியாக பார்த்தால் இது சாத்தியமாகக்கூடியது. கோப்ராஸ் (துப்பாக்கி பொருத்தப்பட்ட ஹெலிகொப்டர்) மற்றும் வானில் பறக்கும் பிற பிளாட்போர்ம்களில் பெரிய துப்பாக்கிகளை பொருத்தியிருக்கிறோம். அது போன்ற ஒன்றை இந்த விமானத்தில் பொருத்தியிருக்க வேண்டும்'' என அவர் தெரிவித்தார்.

விபத்து அதிகரிப்பு

அபாயகரமான பகுதிகளில் *V-22* பறப்பது போன்று, போர் விமானங்கள் அல்லது ஹெலிகொப்டர்கள் பறக்க முடியாது என மரைன்ஸ் தெரிவிக்கின்றனர். *V-22*வின் வேகம், அச்சுறுத்தல்களிலிருந்து தப்பிப்பதற்கு உதவுகிறது என அதன் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். உதாரணமாக, துப்பாக்கி ரவை காற்றில் மணிக்கு 320 கிலோ மீட்டர் வேகத்தில் உராய்ந்து செல்வதுபோல், அபாயகரமான நேரங்களில் ஹெலிகொப்டரின் செயல்பாட்டுக்கு மாற்றிவிட்டு ஒருசில நொடிகளில் இந்த *V-22* விமானத்தை தரையிறக்கலாம். மரைன்களை தரையிறக்குவதற்கோ அல்லது தரையிலிருந்து மரைன்களை ஏற்றிச்செல்வதற்கோ இந்த விமானம் பயன்படுவதுடன், தரையிறங்கும் பகுதியிலிருந்து உடனடியாக வேகமாக பறந்தும் விடுகிறது. எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதற்காக ஏவுகணை அபாய எச்சரிக்கை சாதனங்களும், தீயை அணைக்கும் கியர் பொக்ஸ் சாதனங்களும், இதில் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த விமானம் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், ஹைட்ரோலிக் மற்றும் விமான கட்டுப்பாட்டு சாதனங்கள், காற்றில் பறப்பதற்கு உதவி செய்கின்றன. இறுதியாக, *V-22* கீழே விழுந்தால், நொறுங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள அதனுடைய பயணிகள் இருக்கை பகுதி மற்றும் சிதறும் இருக்கைகள், விமானத்தில் இருப்பவர்களுக்கு மெத்தை போன்று உதவும். அது போன்ற பாதுகாப்பு இருப்பது நல்லது. அது தேவையும் கூட.

2006ம் ஆண்டு மார்ச்சில், பழுதுபார்க்கப்பட்ட *V-22* விமானம் மூன்று பேருடன் பறந்த போது, எதிர்பாராதவிதமாக கொம்ப்யூட்டரில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கீழே விழுந்து நொறுங்கியது. கொம்ப்யூட்டர் தகவல்களின்படி பார்த்தால் மூன்று நிமிடங்களுக்கு பிறகு 6 அடி உயரத்திலும் (சுமார் 2 மீட்டர்) அல்லது சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவிப்பதன்படி பார்த்தால் 25 அடி (8 மீட்டர்) உயரத்தில் இருக்கும் போது, விமானம் தரையில் விழுந்ததாகவும், அதனுடைய வலது இறக்கை உடைந்து விழுந்ததாகவும் கூறுகின்றனர். இதனால், ஏற்பட்ட சேதம் 1 மில்லியன் டொலருக்கும் அதிகம்.

செயல்பாடு குறைவு

இந்த விமானத்தில் மேலும், பல பிரச்னைகள் இருக்கின்றன. விமானத்திலிருந்தபடியே இலக்குகளை விமானிகளால் சரியாக பார்க்க முடிவதில்லை என நீண்ட காலமாக இந்த விமானத்தை பற்றி விமர்சிக்கும் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். பயணிகளின் இருக்கை மிகவும் ஒடுக்கமாகவும், நெருக்கமாகவும் இருக்கிறது. வழக்கத்திற்கு மாறாக *V-22*விற்கு அதிக பராமரிப்பு தேவைப்படுகிறது. கடந்த பெப்ரவரியில் கொம்ப்யூட்டர் சிப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, இந்த விமானம் நொறுங்க இருந்த நேரத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.



மோசமான சுவிட்ச்கள் காரணமாக, ஜூனில் இந்த விமானம் தரையில் மோதி வெடித்து சிதறியிருந்திருக்கும். நல்லவேளையாக விமானியின் சாதுரியத்தால் தப்பியது.

மரைன் வட்டாரங்களில், ஜூனில் விடுக்கப்பட்ட உள் எச்சரிக்கை ஒன்றில், தீவிர பிரச்னைகள் காரணமாக, ஈராக்கில் இந்த விமானத்தின் பங்கு எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு இருக்காது என்றும், அதைவிடக் குறைவாகவே இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. 2005ம் ஆண்டுக்கு முன்னர் உற்பத்தி செய்யப்பட்ட *V-22* விமானங்களில், அந்த நேரத்தில் 35 சதவீத விமானங்கள் தான் பறப்பதற்கு தகுதி பெற்றவையாக இருந்தன. புதிய மொடல்களில், தற்போது ஈராக்கில் உள்ளவற்றில் 62 சதவீத விமானங்கள்தான் பறப்பதற்கான தகுதியை பெற்றுள்ளன.

சந்தேகம்...சந்தேகம்

இது போன்ற எச்சரிக்கைகளின் பலன் என்னவென்பது மரைன்களுக்கு விரைவில் தெரிந்து விடும். ''என்னுடைய அடக்கமுடியாத ஆசை என்ன வென்றால், சண்டைக்கு பயன்படுத்துவதற்காக, அதி விரைவில் *V-22* எங்களுக்கு கிடைக்க வேண்டும்'' என மரைன்களின் ஜெனரல் ஜேம்ஸ் கான்வே, மார்ச்சில் தெரிவித்தார். ''*V-22* விமானம் மிக விரைவாக அதனுடைய செயல்பாட்டு திறனை நிரூபிக்க போகிறது'' என்றும் அவர் கூறினார்.

ஆனால், பிறகு அவர் கூறுகையில் *V-22* பூஸ்டர்கள், ஏதோ ஒரு கோளறால் பாதிக்கப்பட்டுள்ளன என்றார். ''நான் உங்களுக்கு சொல்கிறேன். விமானம் நொறுங்கி விழப்போகிறது'' என்றும் அவர் தெரிவிக்கிறார்.

கோன்வே மட்டும் இதை கூறவில்லை. 2002ம் ஆண்டு முதல் 2005ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் *V-22* திட்டத்திற்கு அரசாங்க உயர் செய்திதொடர்பாளராக இருந்த வோர்ட் கார்ரோல், ''முதல் 3 ஆண்டுகளில் இந்த விமானங்களை பயன்படுத்தும்போது, அவற்றில் ஆறு ஓஸ்பிரேக்கள், அதாவது 5 சதவீத விமானங்கள் நொறுங்கி விழும்'' என்று நம்புகிறார்.

இரவு நேரங்களில், மோசமான காலநிலையில் பறக்கும்போது புதிய விமானிகள், இழைக்கும் தவறுகளால் துயரமான விளைவுகள் ஏற்படும் என்றும் கார்ரோல் தெரிவிக்கிறார்.

V-22 பற்றி பெரும்பாலானவர்கள் கொண்டுள்ள சந்தேகம் போன்று, இவரும் இந்த விமானம் பற்றிய தனது கருத்தை முழுவதுமாக தெரிவிக்காமல் நிறுத்தி



வைத்துள்ளார். ''எனக்கு இன்னும்கூட திருப்தியில்லை'' என அவர் தெரிவித்துள்ளார். சில மரைன்கள் மட்டும், இந்த விமானத்தின் மீது மிகுந்த பாசம் வைத்துள்ளனர் என்றும் கார்ரோல் கூறியுள்ளார்.

முன்னாள் ஃஎப்-14 விமானியான கார்ரோல், *V-22*வை விரும்புவதைவிட மரைன்களின் மனதுக்கு பிடித்த மற்றொரு போர் விமானமான *AV-8* -ஹாரியர் ஜம்பை அதிகம் நேசிக்கிறார். ''*V-22*விற்கு சிறந்த மாற்றாக ஹாரியர் இருக்கிறது'' என அவர் குறிப்பிடுகிறார்.

''*AV-8* போன்று *V-22*-விமானத்திலும் பல்வேறு அம்சங்கள் விட்டுக்கொடுக்கப்பட்டுள்ளன. இதனால், போர்க்களத்தின் சூழ்நிலையே மாறிவிடும்'' என அவர் குறிப்பிடுகிறார்.

போர்க்களத்தில் *AV-8* போன்று *V-22*-ம் ஏராளமான மரைன்களை கொல்லக்கூடும். 1971ம் ஆண்டு முதல் மூன்று பங்குக்கும் மேலான ஹாரியர்கள் விழுந்து நொறுங்கின. 143 விபத்துக்களில் 45 மரைன்கள் கொல்லப்பட்டனர்.

ஆனால், இரண்டு போர் விமானங்களுக்கும் பெரிய வேறுபாடுகள் இருக்கின்றன.

ஒவ்வொரு ஹாரியர் விமானமும் ஒரே ஒரு விமான இருக்கையை மட்டும் கொண்டுள்ளது. பாரசூட்டுடன் வெளியே தள்ளக்கூடிய இருக்கை பொருத்தப் பட்டுள்ளது. ஆனால், *V-22* விமானங்கள் இன்னும் ஒரு சில நாட்களில், 26 மரைன்கள்வரை ஈராக் போர்க்களத்திற்கு ஏற்றிச்செல்லும் என்றும், வெளியே தள்ளக்கூடிய இருக்கையோ, பாராசூட்களோ இருக்காது அவற்றில் என்றும் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

உங்களது ஏராளமான பணத்தையும் உருக்கு ஆலைகளையும் வேறு ஏதாவது ஒரு நாட்டுக்கு கொண்டு போங்கள் என்று லட்சுமி மிட்டலுக்கு உத்தரவு போட்ட முதலாவது நாடு, உலகிலேயே ரஷ்யாதான். இந்தியா மற்றும் இங்கிலாந்தின் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவரான லட்சுமி மிட்டல் (பிறப்பால் இந்தியர். வர்த்தக சாம்ராட்சியம் இருப்பது பிரிட்டனில்) உலகிலேயே உருக்கு உற்பத்தியில் முன்னணியில் இருக்கிறார். உருக்காலைகளின் சக்கரவரத்தி என்று வியாபார வட்டாரங்களில் அழைக்கப்படுபவர் இவர்.

மாஸ்கோவில் 2003ம் ஆண்டு ஒரு நவீன அலுவலகத்தை மிட்டல் உருவாக்கினார். ஆனால் மிட்டல், அவரது சகோதரர்கள், மிட்டலின் மகன் ஆகியோர் ரஷ்யாவுக்குள் நுழையக்கூடாது என்றும், கசகஸ்தான், யுக்ரைன் ஆகிய நாடுகளில் இப்போது தங்கியுள்ளதை போலவே தங்கியிருக்க வேண்டும் என்றும் ரஷ்யாவில் நிரந்தரமாக தங்கியிருக்க அனுமதிக்கப்படுவார்கள் என்று கற்பனை செய்து பார்க்க வேண்டாம் என்றும் அவர்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.


சமூக காரியங்களுக்காக வேண்டுமானால் ரஷ்யாவுக்குள் வரலாம். ஆனால் அதுவும் சில

இந்தியத் தொழிலதிபர்களுக்கு செக் வைக்கிறது ரஷ்யா

தற்போது அவருக்கு காதுகேட்பதில் சிறு கோளாறு இருக்கிறது. அதனால் அவர் சிரமப்படுகிறார். அவருக்கு ரஷ்யாவிடமிருந்து வந்த அந்தத் தகவல் கூறப்பட்டபோது அவரால் அதை தெளிவாக புரிந்து கொள்ள முடியவில்லை. நம்பவே முடியாமலிருந்தது காரணமாக இருக்கலாம்.

விஷயம் என்னவென்றால் அண்மையில் 400 கோடி ரஷ்ய நிலக்கரித் தாதுவுக்கு ஏலம் நடந்தது. இந்த ஏலத்தில் கலந்து கொள்ள மிட்டல் தகுதி இழப்பு செய்யப்பட்டு, தள்ளி வைக்கப்பட்டார். இந்த நிலக்கரி ஏலத்தில் மிட்டல் ஏன் கலந்து கொள்ள கூடாது என்பதற்கான காரணங்களை விளக்கி அவருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது என்று ரஷ்ய அரசாங்கத்தின் சொத்து விவகாரத்திற்கான ஒரு அதிகாரி தெரிவித்தார்.

ரஷ்யாவில் பாதிப்புக்கு உள்ளான சக்திவாய்ந்த நபர் மிட்டல் மட்டுமல்ல. இன்னும் பலர் இருக்கிறார்கள். அண்மைக் காலங்களில் ரஷ்யாவுக்கான இந்திய தூதரர்கள், இந்திய அமைச்சர்கள் காங்கிரஸ் கட்சி தலைவர்கள், இந்திரா காந்தி குடும்பத்தின் வம்சாவளியில் வந்தவர்கள் பலரும் ரஷ்யாவில் உள்ள சொத்து வளங்களை பங்கு போடுவதில் நம்பிக்கை வைத்திருந்தார்கள். எல்லோருக்கும் இப்போது இடைஞ்சல்கள் வரத்தொடங்கியுள்ளன.



வரையறைக்கு உட்பட்டுத்தான் என்று அவர்களுக்கு இறுக்கம் கொடுக்கப்பட்டது.

இத்தனைக்கும் மிட்டல் ரஷ்யாவுக்கு சும்மா வருவதில்லை. கோடிக்கணக்கான முதலீட்டுடன் வருபவர். மிட்டலிடம் இருந்து வந்த பல வேண்டுகோள்களை ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின் நிராகரித்தார். மாஸ்கோ வந்த மிட்டலை வரவேற்க மறுத்தார்.

விஷயம் அரசியல் சம்மந்தப்பட்டது அல்ல. வியாபாரத்துடன் சம்மந்தப்பட்டது. ரஷ்யாவில் பிரபலமான ஆலிஷர் உஸ்மானோவ், அலெக்சர் மொர்தாஷோவ், போன்ற உருக்காலைகளுடன் மிட்டலுக்கு தனிப்பட்ட முறையில் மோதல் இருந்து வந்தது. இந்த உருக்காலைகளை எளிதில் வென்று விடலாம் என்று மிட்டல் நினைத்தார். இதனால் இந்த உருக்காலைகள் மிட்டல் மீது பொறாமை கொண்டிருந்தன. பழிவாங்கவும் துடித்தன.



ஆனால் அதே சமயம் மிட்டலின் மகன் ஆதித்யா தனிப்பட்ட முறையில் விக்டர் ரஷ்மிக்கோவின் சிறப்பு விருந்தினராக வரவேற்கப்பட்டார்.

ரஷ்யர்களுடன் தங்களது வர்த்தகப் பேரங்களை நடத்தி செல்வதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை சில இந்தியர்கள் தெரிந்துவைத்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் இனவாதம் மிக்கவர்கள் என்று சில இந்தியர்கள் கூறுகிறார்கள் அப்படி இருக்கும் போது ரஷ்யாவின் எண்ணை வியாபாரங்களில் பேரம் செய்வதில் இந்தியர்களைவிட சீனர்களுக்கே அதிக செல்வாக்கு இருந்து வருகிறது. அதற்கான காரணம் தெரியவில்லை.

இப்போது மிட்டல் விஷயத்தில் நிலக்கரி ஏலத்தில் அவர் ஏன் ஒதுக்கப்பட்டார் என்பதும் விளங்கவில்லை. இதற்கு காரணம், சீனர்கள் அல்லாது ஜப்பானியர்களாக இருக்கலாம். அவர்கள்தான் இப்போது இந்த நிலக்கரி டீல்களில் உயர்ந்த இடத்தில் இருக்கிறார்கள்.

ரஷ்யாவில் வர்த்தகம் செய்யும் இந்தியர்கள் தங்களது வர்த்தகத்தை அல்லது தொழிலைத் தொடங்குவதற்கு முன்பாக ஆடம்பரமான விழாக்களை நடத்தி செலவழிப்பார்கள். அதை வைத்து ரஷ்ய டீல்களைக் கவர நினைப்பார்கள். ஆனால், பரிதாபகரமாக திரை மறைவு வேலைகளால் அவர்களது எதிர்பார்ப்புகள் தோற்கடிப்பட்டுவிடும்.

ரஷ்யா தொடர்பான சில முக்கிய வியாபார ஆவணங்களை இந்திய உளவு அதிகாரிகள்கூட டெல்லி மார்க்கெட்களில் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. டெல்லியில் அரசாங்கத்தின் கோப்புகளில் இருந்து பலவிதமான ஆவணங்கள் அடிக்கடி திருட்டு போவதுண்டு. இவற்றில் பல வெளிநாட்டு முதலீடுகள் - முக்கியமாக ரஷ்ய முதலீடுகள் சம்மந்தப்பட்டவை. தொழில் ரீதியான உட்சண்டைகள், கொமிஷன் வாங்குவதில் ஏற்படும் சச்சரவுகள் போன்றவற்றால் இது போன்ற ஆவண திருட்டுக்கள் அடிக்கடி நடப்பதுண்டு.

இதனால் அநேக இந்தியர்களது முதலீடுகள் ரஷ்யாவுக்குப் போய்ச்சேருமுன் டெல்லியிலேயே சண்டைகள் தொடங்கி விடுகின்றன. ரஷ்யர்கள் இந்தியர்களை இழுத்து வீழ்த்துவதற்கு முன், இந்தியர்களே இந்தியர்களை இழுத்து விழுத்திவிடுகிறாரகள்.

இதையும் தாண்டி ரஷ்யாவரை போய் விட்டால், சில சமயம் இந்திய தொழிலதிபர்களுக்கு ரஷ்யா வளைந்து கொடுக்கும். சில சமயம் ரஷ்யா தனது எதிர்ப்பைக் காட்டும்.

வெகு அண்மையில் சாக்கா (யகூசியா) என்ற கிழக்குப் பிராந்தியத்தின் தலைவர் வியாசெஸ்லாவ் ஸ்டிரோவை மிட்டல் சந்தித்தார். சாக்கா பிராந்தியத்தில் தலைசிறந்து விளங்கும் அல்ரோசா என்ற நிறுவனத்தின் நிர்வாகத் தலைவர் செர்ஜி விபோமோவும் மிட்டலை அப்போது வரவேற்றார். அல்ரோசா நிறுவனம் உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய வைர சுரங்கத்தை கொண்டது.

இவர்கள் இருவரையும் சந்தித்து பேசிய போது கவர்ச்சிகரமான பல உறுதி மொழிகளை மிட்டல் அளித்தார். ஆனால் அவர்கள் இருவரும் ரஷ்யாவின் அதிகார மையமான கிரெம்ளின் மாளிகையின் ஆசியைப் பெற மறந்துவிட்டார்கள். இதனால் மிட்டலுக்கு

ஏற்பட்ட கதியைப்போலவே இவர்களுக்கும் ஆகி விட்டது.

தற்போது மிட்டலைக் கலந்துகொள்ள விடாது ரஷ்யா தடுத்துள்ள ஏலம் எது?

ரஷ்யாவின் 5வது மிகப்பெரிய உருக்கு உற்பத்தி செய் யும் நிறுவனம் மீச்சல். (மிட்டலையும் மீச்சலையும் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள். இரண்டும் வேறு வேறு) எலகுவால் என்ற நிலக்கரிச் சுரங்க நிறுவ னத்தில் சாக்கா பிராந்திய அரசும், ரஷ்ய ரயில்வே நிறுவ னமும் சிறு சிறு பங்குகளை வைத்துள்ளன. இந்த எல்கா நிலக்கரிச் சுரங்கத்தின் 68.86 சதவீத பங்குகளை 2 ஆயிரத்து 300 கோடி கொடுத்த வாங்கி கொள்வதாக மீச்சல் உருக்காலை நிறுவனம், ரஷ்ய அரசிடம் கடந்த 5ம் திகதி உறுதி மொழி அளித்திருக்கிறது.

யாகூட் நிலக்கரிச் சுரங்கம், எல்கா நிலக்கரிச் சுரங்கம் ஆகிய இரண்டு சுரங்கங்களிலும் உள்ள மொத்த நிலக்கரி இருப்புகள் 390 கோடி தொன் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலக்கரியில் பெரும்பா லானவை உலையில் பயன்படுத்தப்படுவை. நிலக்கரி விற்பனை செய்யும் அதிகாரிகள் நிர்ணயித்த விலையை காட்டிலும் 23 சதவீதம் அதிகமாக கொடுத்து மீச்சல் நிறுவனம் ஏலம் கோரியுள்ளது.

ஏலம் சுமார் 30 நிமிடங்களில் முடிந்தது.

இதுதான் மிட்டல் தடுக்கப்பட்ட ஏலம். ஏல முடிவில், மிட்டலின் பிரதிநிதி ஒருவர் கூறுகையில் ''எங்களது நிறுவனம் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக் கப்படவில்லை. இது ஆச்சரியமாக இருக்கிறது. இதற் கான காரணத்திற்காக நாங்கள் காத்திருக்கிறோம்'' என் றார். அவர் இவ்வாறு சொன்னது ரஷ்ய அரசாங்கத்தை கோர்ட்டுக்கு இழுப்பது போல உள்ளது.

இந்த ஏலத்தில் மிட்டல் நுழைந்திருந்தால், ஏலம்போன 23 சதவீத அதிகத்தொகையைவிட இரட்டிப்பான அளவுவரை போயிருப்பார் என்று வியாபார வட்டாரங் களில் கூறப்படுகிறது.

2005ம் ஆண்டு ஜனவரி மாதம் மீச்சல் நிறுவனத்தின் விருப்பத் திற்கேற்ப 170 கோடி நிலக்கரி இருப்பு கொண்ட யகூத் நிலக்கரி சுரங்கத்தில் பகுதிய ளவு தனியார் மயமாக் கப்பட்டு விட் டது. உள்நாட்டு உருக்கு உற்பத்திப் போட்டியாளர்களை வெளியேற்றி மீச்சல் நிறுவனம் இந்த ஏலத்தை எடுத்துள் ளது.


யாகூ நிலக் கரி சுரங்கத்தில் மீச்சல் ஏற்கனவே 411 கோடி டொலரை முதலிட்டுள்ளது. அத னால்தான் மீச்சலுக்கு சாதகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. (அதாவது மற்றயவர்களை டம்மியாக்கி, ஏலத்தை மீச்சலுக்குக்கிடைக்கச் செய்வது)

சாக்கா பிராந்தியத்தின் தலைவர் ஷ்டிரோவ் கொடுத்த உறுதி மொழியின் அடிப்படையில் இந்த ஆபத்தான விளையாட்டை மீச்சல் நிறுவனம் விளையாடி இருக் கிறது. மலிவான விலையில் பங்குகளை வைத்திருப்ப தில் ஷ்டிரோவ் கெட்டிக்காரர் என்று கூறப்படு கிறது. இதன் காரணமாக அல்லது ஜப்பானிய வர்த்தக நிறுவ னம் ஒன்று அளித்து வரும் நிதி உதவியின் அடிப்படை யில் மீச்சல் இந்த துணிச்சலான காரியத்தில் இறங் கியிருக்கலாம்.

ஒரு தொன் நிலக்கரி இருப்புக்கு என்ன விலை என்று பார்க்கும்போது இப்போது மீச்சல் வாங்கியுள்ளதை விட 40 சதவீதம் அதிகம் கொடுத்து 2005ல் மீச்சல் வாங்கியிருக்கிறது. அதாவது 2 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கிய விலையைவிட, இப்போது 40 சதவீதம் மலிவாகத் தட்டிச் செல்கிறது. இதைத்தான் 'கண்ணைப் பொத்திய லாபம்' என்பார்கள்.

நிதி அமைச்சகம் மற்றும் அல்ரோசா நிறுவனம் ஆகிய வற்றைச் சுற்றியுள்ள கோஷ்டிப் பூசல்கள், எந்த ஒரு முடிவும் எடுக்க முடியாத நிலை, ஆகியவற்றின் காரண மாகத்தான் மிட்டல் குடும்பத்தினருக்கு இப்போது இந்த வேதனையான அனுபவம் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. ''ஆபத்தான விளையட்டை விளை யாட வேண்டாம்'' என்று மிட்டல் குடும்பத்தினர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இந்த விளையாட்டு விளையாடுவதற்கான முடிவை மிட்டல் எடுத்தாரா அல்லது அவரது மகன் எடுத்தாரா என்பது தெரியவில்லை. ஆனால் அவர்கள் இந்த ஏலத் தில் கலந்து கொள்ளாமல் ரஷ்ய அரசாங்கமே தடுத்து விட்டதால், இந்த ஆபத்தான விளையாட்டிலிருந்து பாராச்சூட் இல்லாமலேயே கீழே குதித்து விட்டனர். அடிகிடி பெரிதாகப் படவில்லை.

மிட்டலின் இந்த தோல்வி குறித்து கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் மாஸ்கோ செய்தித்தாள்க ளில் மிட்டலைப் பற்றிய செய்திகள்தான் முதல் பக்க முன்னணி செய்திகளாக இருந்தன. ஆனால் லண்டன் செய்திதாள்கள் மிட்டலின் இந்த தோல்விச் செய் தியை அடக்கியே வாசித்தன.



COVER STORY

சதியினால் வீழ்த்தப்பட்டார்

இந்தக் கட்டுரையில் கூறப்படும் சில விஷயங்கள் விமர்சனத்துக்கு உள்ளாகப் போகின்றன. காரணம், சு.ப.தமிழ்ச்செல்வன் மீது நடாத்தப்பட்ட தாக்குதல், அவரது நடமாட்டங்கள் மற்றும் இருப்பிடம் ஆகியவை பற்றிய உளவுத் தகவல்களின் அடிப்படையிலேயே நடாத்தப்பட்டன என்று நாங்கள் எடுத்திருக்கும் நிலைப்பாடு.

இந்த நிலைப்பாடு ஏன் விமர்சனத்துக்கு உள்ளாகும் என்று கருதுகிறோம் என்றால், இது வன்னியில் அவ்வப்போது நடைபெறும் (சமீப காலங்களில் கிட்டத்தட்ட, தினமும்) குண்டுவீச்சுத் தாக்குதல்களில் ஒன்றுதான் என்பதாக ஒரு கருத்து சில ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது. அப்படி வழமையான தாக்குதல் ஒன்றின்போது குண்டு ஒரு குறிப்பிட்ட இலக்கில் போய்விழ, தமிழ்ச்செல்வன் தற்செயலாக அந்த இடத்தில் இருக்கப்போக, துரதிஷ்டவசமான இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது, அவ்வளவுதான் என்பது மேற்படி ஆய்வாளர்களின் கூற்று.

நாங்கள் கூறப்போவது அதற்குத் தலைகீழ் அதுதான் சிக்கல்.

தமிழ்ச் செல்வனும் மற்றய போராளிகளும் குண்டுவீச்சுக்குப் பலியானார்கள் என்ற தகவல் கிடைத்தவுடன், உலகில் பல்வேறு பகுதிகளிலும் வசிக்கும் தமிழர்கள் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருந்தபோது வெளியிடப்பட்ட ஆய்வுகள், கருத்துக்கள், கூற்றுக்கள் எல்லாமே உணர்ச்சிபூர்வமாகவே அமைந்திருந்தன. அது எதிர்பார்க்கக்கூடியதே.

அந்த நிலையில், தங்களையும் மற்றயவர்களையும் சமாதானப்படுத்திக் கொள்வதற்காக மேற்படி கருத்து ஆய்வாளர்கள் சிலரால் கூறப்பட்டிருக்கலாம். அதுவும் இயல்புதான். இந்தக் காலப்பகுதியில் வெளிவந்த ஆய்வுகளில் எதுவுமே தொழில்நுட்ப ரீதியான ஆய்வுகளாக இருக்கவில்லை எல்லாமே உணர்ச்சி அடிப்படையிலான ஆய்வுகளாக இருந்தன. அதுவும் இயல்புதான். திடீரெனக் கிடைத்த சோகச் செய்தி ஏற்படுத்திய அதிர்ச்சியில் கூறப்படும் ஆய்வுகள் அப்படித்தான் இருக்கும்.

இந்தக் குண்டுவீச்சுத் தாக்குதல் சும்மா குருட்டாம் போக்கில் நடைபெற்றது. காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த கதையாக தமிழ்ச்செல்வன் அகப்பட்டுக் கொண்டார் என்று கருத்துத் தெரிவித்திருந்த ஓரிரு ஆய்வாளர்களுடன் பேசிப்பார்த்ததில், அவர்களுக்கும் தொழில்நுட்பத்துக்கும் சம்மந்தம் இல்லை என்றோ, அல்லது அந்தக் கோணத்தில் அவர்கள் சிந்திக்கவில்லை என்றோ புரியக் கூடியதாக இருந்தது. ஆய்வு செய்வதற்கு தொழில்நுட்பம் தெரியத் தேவையில்லை என்பதும் வாஸ்தவம்தான். எனவே அதில் தவறில்லை.

இந்தக் குண்டுவீச்சுப் பற்றி, அரசியல் ரீதியான மற்றும் உணர்வு ரீதியான ஆய்வுகள் இதுவரை வெளிவந்த நிலையில், முதல் தடவையாக முற்றுமுழுதான தொழில்நுட்ப ரீதியாக இந்தக் குண்டுவீச்சைப் பற்றி நாங்கள் பார்க்கலாம்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை இது அவர்களது தளபதிகளின் உயிருடன் சம்மந்தப்பட்ட விஷயம் என்பதால், மனச்சாந்தி தரும் ஊகங்களைவிட கொஞ்சம் கசப்பான உண்மைகளைத் தெரிந்து கொள்ளவே விரும்புவார்கள் - வருங்காலப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக.

சரி, இந்தத் தாக்குதலின் முழுமையான விபரங்களை கொஞ்சம் டெக்னிக்கலாகப் பார்க்கலாம். மன்னிக்கவும் சில ஆய்வாளர்களே - உங்களது கூற்றை மறுப்பதற்கு.

முதலில், குண்டுவீச்சுப் பற்றிய செய்தி வெளியிடப்பட்ட நேரம் பற்றிய ஒரு குழப்பமான கருத்த இருக்கிறது. அதைப் பார்த்துவிட்டுப் போகலாம்.

குண்டுவீச்சு நடைபெற்றது காலை 6 மணிக்கு (இங்கு குறிப்பிடப்படுபவை அனைத்துமே இலங்கை நேரம்) குண்டுவீச்சுக்கு தமிழ்ச்செல்வன் பலியானார் என்ற தகவல் உத்தியோக பூர்வமாக விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்டது அன்றையதினம் மதியத்தின் பிறகு.

''தமிழ்ச்செல்வன் பலியானார் என்று புலிகள் அறிவித்ததைக் கேட்டபின்னர்தான் அரசு தரப்பினர் தமிழ்ச்செல்வன் மீது குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்திவிட்டோம் என்று கூறினார்கள். அதற்குமுன் வன்னியில் கரும்புலிகளின் முகாம் ஒன்றின்மீது குண்டுவீசினோம் என்றுதான் கூறினார்கள். இதிலிருந்து தெரியவில்லையா. அவர்கள் தமிழ்ச்செல்வனை இலக்குவைத்துத் தாக்கவில்லை என்பது. சும்மா

தாக்கிவிட்டு, பிற்பாடு புலிகள் தமிழ்ச்செல்வனின் பெயரை அறிவித்தவுடன் அதை தமது வெற்றியாக்கிக் கொண்டார்கள்'' என்பது ஒரு ஆய்வு இதைத்தான் அநேக ஆய்வாளர்கள் மேற்கோள் காட்டியிருந்தார்கள்.

உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் - மன்னிக் கவும் இது தவறு.

பாதுகாப்பு அமைச்சு இந்தக் குண்டுவீச்சுப் பற்றி வெளியிட்ட முதலாவது செய்திக்குறிப்பை அவர்கள் சரியாகப் பார்க்கவில்லை என்று நினைக்கிறேன்.

முதலாவது செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருந்தது: இன்று காலை 6 மணிக்கு விமானப்படையின் ஜெட் விமானங்கள் இரு குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியிருந்தன. ஒன்று விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர் ஒருவரின் மறைவிடம், மற்றயது கரும்புலிகளின் முகாம் என்று உளவுத் தகவல்களின் அடிப்படையிலேயே இத்தாக்குதல்கள் நடாத்தப் பட்டன. இரு இலக்குகளும் முற்றாக அழிக்கப் பட்டன.

இந்தச் செய்தி பாதுகாப்பு அமைச்சினால் வெயியிடப்பட்ட நேரம் என்ன தெரியுமா? சரியாக 9.16:24

அதாவது, புலிகள் உத்தியோக பூர்வமாக அறிவிப்பதற்கு மூன்று மணி நேரத்துக்கு முன்பு! இந்தச் செய்திக் குறிப்பில் விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவர் என்று குறிப்பிட்டிருந்தார்கள் - தமிழ்ச்செல்வன் என்று குறிப்பிடவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் இப்படியாக 'முக்கிய தலைவரின் மறைவிடம்' என்ற ரீதியிலான செய்திக்குறிப்பு தினமுமோ, வாரத்துக்கொரு தடவையோ, குறைந்தபட்சம் மாதமொரு தடவையோ வரும் அறிவிப்பல்ல என்பதைக் கவனியுங்கள்.

இதை எப்படி உறுதியாக கூறுகிறேன் என்றால் இச்செய்தி எனக்கு கிடைத்து, நான் இதுபற்றி அறிய கொழும்பையும் வன்னியையும் தொடர்புகொள்ள முயன்று கொண்டிருந்த போது, புலிகளின் உத்தியோக பூர்வ அறிவிப்பு வெளியாகியிருக்கவில்லை.

எனவே, அவர்கள் ஒரு உளவுத் தகவலின் அடிப்படையிலேயே விமானங்களை அனுப்பினார்கள் - புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரை இலக்கு வைத்தார்கள் என்பது உறுதியானது.

இனி, தாக்குதல் நடைபெற்ற காலை 6 மணிக்கு சற்று முன் போகலாம்.

தாக்குதல் நடைபெற்றது வெள்ளிக்கிழமை 2ம் திகதி. அதற்கு முன்தினம், அனுராதபுரம் விமானப்படை முகாம் தாக்குதலின் தொடர்புடைய சில போராளிகளுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் விருது வழங்கிய நிகழ்வு நடைபெற்றது.

எமக்கு கிடைத்த தகவல்களின்படி இந்த விருது வழங்கல் நிகழ்வு இரவு கிட்டத்தட்ட 10 மணியளவில், பெயர் குறிப்பிடப்படாத லொகேஷன் ஒன்றில் நடைபெற்றிருக்கிறது. அதில் தமிழ்ச்செல்வன் கலந்து கொண்டிருக்கிறார்.

அதன்பின் அதிகாலை கிட்டத்தட்ட 1.15 அளவில் தமிழ்ச்செல்வன் உதவியாளர் அலெக்ஸ் வெளிநாடு ஒன்றிலுள்ள ஒருவருடன் தொலைபேசியில் பேசியிருக்கிறார் (அந்த விபரங்கள் சில பாதுகாப்பு காரணங்களுக்காக தவிர்க்கப்படுகின்றன) விருது வழங்கும் நிகழ்வு பற்றிய புகைப்படங்கள் இன்னமும் சிறிது நேரத்தில் தருகிறேன். காத்திருங்கள் என்று கூறியிருக்கிறார்.

இது 100 சதவீதம் ஊர்ஜிதமான தகவல்.

இந்த இடைப்பட்ட காலப்பகுதியில் அதாவது இரவு 10 மணிக்கும், அதிகாலை 1.15க்கு மிடையே அலெக்ஸ் குண்டுவீச்சு நடைபெற்ற இடத்துக்கு வந்திருக்கச் சந்தர்ப்பம் இருக்கிறது. காரணம் விருது வழங்கல் நிகழ்வு நடைபெற்ற இடத்திலிருந்து மேற்படி தொலைபேசி அழைப்பை மேற்கொண்டிருக்க முடியாது என்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய காரணங்கள் இருக்கின்றன. அத்துடன் தாக்குதல் நடைபெற்ற இடத்திலிருந்து தான் அந்த அழைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்பதற்கும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய காரணங்கள் இருக்கின்றன.

அலெக்ஸ் எப்போதும் தமிழ்ச் செல்வனுடன் கூடவே செல்பவர் என்பதால் தமிழ்ச் செல்வனும் இந்தக் காலப் பகுதிக்குள் தாக்குதல் நடைபெற்ற இடத்துக்குச் சென்றிருக்க முடியும்.

இந்த நடமாட்டம் வன்னியில் இருந்து யாரோ ஒருவரால், ராணுவத் தரப்புக்கு தெரியப்படுத் தப்பட்டிருக்கலாம்.

இது சாத்தியமா என்று நினைப்பவர்கள் ஒரு விஷயத்தைக் கவனியுங்கள். வன்னிக்குள் வைத்து ராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினர் கிளைமோர் தாக்குதல்களைக் கடந்த காலங்களில் நடத்தியிருக்கிறார்கள்.

கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்பியூலன்ஸ் வாகனம் ஒன்றில் புலிகளின் முக்கியஸ்தர் போகலாம் என்று அது கிளைமோர் தாக்குதலில் சிக்கியிருக்கிறது. அதேபோன்றதொரு தாக்குதலில் வன்னிக்கு உள்ளே வைத்துத்தான் தளபதி சங்கர் கொல்லப்பட்டிருக்கிறார். இவ்வளவும் ஏன், இதே தமிழ்ச்செல்வனைக் குறிவைத்து வன்னிக்கு உள்ளே நடாத்தப்பட்ட தாக்குதலில் அவர் மயிரிழையில் உயிர் தப்பிய சம்பவமும் நடைபெற்றிருக்கிறது.

ராணுவத்தின் ஆழ ஊடுருவும் ஆட்கள் கிளைமோர் தாக்குதலையே வன்னிக்குள் நடத்த முடியுமென்றால், நடமாட்டங்களைக் கண்காணித்து தகவல் கொடுத் திருக்க முடியாதா?

தமிழ்ச் செல்வனும் மற்றயவர்களும் தாக்குதல் நடைபெற்ற இடத்துக்கு அதிகாலை 1.15க்கு முன்பு வந்திருக்கலாம் என்ற எங்கள் ஊகம் சரியாக இருந்தால், வன்னியிலிருந்து ராணுவத் தரப்புக்குக் கொடுக் கப்பட்ட உளவுத் தகவல் 1.15க்கும் அதிகாலை 4 மணிக்கும் இடையே போன் மூலமோ அல்லது வேறு தொடர்பு சாதனம் மூலமோ வன்னியிலிருந்து வெளியே போயிருக்கலாம்.

இதை எப்படிச் சொல்கிறோமென்றால், அதிகாலை சுமார் 4 மணியளவில் வன்னி வான்பரப்பில் உளவு விமானமொன்று பறக்கத் தொடங்கியிருக்கிறது.

இந்த நடைமுறை எதற்காக என்பதையும் ஊகிக்கலாம். வன்னியிலிருந்து தகவல் கொடுக்கப்பட்ட உடனே, விமானியற்ற உளவு விமானம் அனுப்பப்படுவது, குறிப்பிட்ட அந்த இடத்திலிருந்து தமிழ்ச்செல்வனும் மற்றயவர்களும் வெளியேறுகிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கு.

இதற்கும் ஒரு காரணம் இருக்கிறது.

இலங்கை விமானப்படையில் இந்தக் குண்டு வீச்சு ஜெட் விமானங்கள் இரவுநேரம் பறத்தல் செய்து துல்லியமாக குண்டு வீச முடியாத விமானங்கள். இரவு என்றால், முதலில் மேலேயிருந்து ஒரு வெளிச்சக் குண்டைப்போட்டு, அதன் வெளிச்சத்தில், இலக்கைப் பார்த்து, அதன் பின்னர்தான் குண்டுவீச முடியும். அதற்கிடையே குறிவைக்கப்பட்ட இடத்திலிருப் பவர்கள் தப்பிவிடலாம்.

இதனால் குண்டுவீச்சு விமானங்கள் கிட்டத்தட்ட 6 மணியளவில் வெளிச்சம் வந்த பின்னரே இலக்கில் குண்டு வீச வர முடியும் என்பதால், அதிகாலை 4 மணியிலிருந்து உளவு விமானம் தமிழ்ச்செல்வன் இருந்த இடத்தின்மீது வானிலிருந்து ஒரு கண் வைத்திருந்திருக்கலாம் - அங்கிருந்து யாராவது வெளியேறுகிறார்களா என்று.

இன்னமும் கொஞ்சம் ஆழமாக சிந்தித்தால், தமிழ்ச் செல்வன் இந்த இடத்தில் இருக்கிறார் என்ற தகவலைக் கொடுத்த நபர், உளவு விமானம் அதிகாலை 4 மணிக்கு வானில் தோன்றும் வரை தானே வேறொரு இடத்திலிருந்து அந்த இடத்தில் கண் வைத்திருக்கலாம். அதிகாலை 4 மணிவரை யாரும் அங்கிருந்து வெளியேறவில்லை என்பதை பார்த்த பின்னர், வானில் உளவு விமானம் வந்தபின் அங்கிருந்து அகன்றிருக்கலாம்.

இதுவும் சாத்தியம்தான். ஏனென்றால், குண்டு வீசப்பட்ட இடம் ஒரு சந்திப்பு நடத்தப்படும் இடம், தற்காலிக அலுவலகம், தகவல் தொடர்பு மையம் என்றெல்லாம் ஊடகங்களில் தகவல்கள் வந்தாலும், அந்த இடம் அடிப்படையில் ஒரு வீடு. யாழ்ப்பாணம் பாணியிலான ஒரு வீடு.

பிரதான வீதியிலிருந்து செல்லும் ஒரு கிளைப் பாதையில் அமைந்துள்ள வீடு. வீட்டைச் சுற்றியுள்ள காணி அல்லது வளவு மிகவும் சிறிது. அருகாமையில் வேறு வீடுகளும் இருக்கின்றன.

மிகப்பெரிய காணிக்கு நடுவேயுள்ள வீடு என்றால் கண்காணிப்பது கடினம். காணி சிறியது என்பதால் வெளியேயிருந்து ஓரளவுக்கு கண்காணிக்கலாம். அதுவும் நள்ளிரவுக்குப் பின்னர் பெரிதாக கஷ்டமிருக்காது.

உளவுத் தகவல் கூறப்பட்டு, உளவு விமானம் வந்து கண்காணித்த நிலையில் அதிகாலை 6 மணிக்கு கிபீர் மற்றும் மிக் குண்டுவீச்சு விமானங்கள் வந்திருக் கின்றன. கிபீர் விமானத்துக்கு வேறு ஒரு இலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. மிக் விமானத்துக்கு தமிழ்ச் செல்வன் இருந்த வீடு இலக்காக கொடுக்கப் பட்டிருக்கிறது.

அடுத்த விஷயம் என்னவென்றால், கையில் ஒரு முகவரியை வைத்துக் கொண்டு ஒரு வீட்டைத் தேடி வீதியில் போவது போல வானத்தில் பறக்கும் சுப்பர்சோனிக் விமானத்திலிருந்து வீடு தேட முடியாது. வீடு அமைந்திருக்கும் இடம் முன்கூட்டியே வரைபடத்தில் துல்லியமாக தெரிந்திருக்க வேண்டும். அந்த இடத்தை (இலக்கை) மிக் விமானத்தின் பனலிலுள்ள *TIS*ல் *(Target Identification System)* முதலிலேயே *Feed* பண்ண வேண்டும்.

அப்போதுதான் துல்லியமாக குண்டு வீச முடியும். (அப்படித்தான் வீசப்பட்டது) TISல் இலக்கு பதியப்பட்டால் விமானி பட்டனைத் தட்டினால் விமானமே இலக்கை நோக்கிப் போகும். (வர்த்தக விமானங்களில்கூட இப்போது இது இருக்கிறது. பெயர்தான் வித்தியாசம் FPIS - போயிங் 777 விமானத்தில் விமானி இதை செட்பண்ணி விட்டால், எந்த ரன்வேயில் இறங்கி, எந்த டாக்சி வேயில் ஓடி, கேட்டுக்கு கடைசியாக திரும்ப வேண்டிய இடம்வரை விமானம் தானாகவே போகும் - விமானி கை வைக்காமலேயே)

தாக்க வேண்டிய இலக்கு அவர்களுக்குத் துல்லியமாக முன்கூட்டியே தெரியும் என்பதற்கு மற்றுமோர் ஆதாரம் வேண்டுமா?

குண்டுவீச்சின் துல்லியத்தன்மை வேண்டும் என்பதனால், மிக் விமானம் வானில் பறந்த உயரத்திலிருந்தே குண்டைப் போடவில்லை. தரைமட்டத்திலிருந்து 1000 அடி உயரம்வரை பதிந்து குண்டு வீசிவிட்டுச் சென்றிருக்கிறது.

மிக் போன்ற ஒரு சுப்பர்சோனிக் விமானத்தைச் செலுத்தும்போது தரைமட்டத்திலிருந்து 1000 அடி உயரம் வரை இறங்குவது விமானிக்கு எவ்வளவு பெரிய ரிஸ்க் தெரியுமா? கிளெயிமிங்லிவரில் விமானியின் கை ரெடியாக இருக்க வேண்டும். குண்டு ரிலீஸ் பட்டனை அழுத்திய அதே நேரத்தில் லிவரை முன்னோக்கி இழுக்க வேண்டும். சுமார் 4 இலிருந்து 5 விநாடிகள் தாமதமானால், விமானம் 1000 அடி கீழ் நோக்கிப் போய் தரையில் மோதும். (இதை Automatic ஆகவும் செய்யலாம். ஆனால் எந்த விமானியும் இந்த விஷயத்தில் Automatic செயற்பாட்டை நம்பி தமது உயிரை பணயம் வைப்பதில்லை. Manual ஆகவே ஒப்பரேட் பண்ணுவார்கள்)

இப்படியான துல்லிய உளவுத் தகவல், விமானத் தொழில்நுட்பம், எல்லாமாகச் சேர்ந்துதான் தமிழ்ச் செல்வனைப் பலிகொண்ட குண்டை வீசியது.

விமானப்படையினரின் அதிஷ்டத்தால்தான் தமிழ்ச் செல்வன் பலியானார் என்று சொன்னால் அது எங்களை நாங்களே முட்டாளாக்கிக் கொள்வது போன்றது. வேண்டுமானால், விதி என்று (நம்பிக்கை இருந்தால்) சொல்லலாம்.

விதி எங்கே வருகிறது என்றால், எவ்வளவு உளவுத் தகவல், தொழில்நுட்பம் எல்லாம் இருந்தாலும் தமிழ்ச்செல்வன் அந்த இடத்திலிருந்து காலை 6 மணிக்குமுன் கிளம்பியிருந்தால் எல்லா ஏற்பாடுமே அவர்களுக்கு வீணாகியிருக்கும்.

விதி விடவில்லை.



அத்தியாயம் - 3

ராஜிவ்காந்தி பயணம் செய்த காரில் அவருடன் வந்திருந்த இரு பத்திரிகையாளர்களுக்கு கூட்ட நெரிசலில் மேடைக்குச் செல்ல வழியேற்படுத்திக் கொடுத்தார் வாழப்பாடி ராமமூர்த்தி. பின்னால் ஜீப்பில் விடியோ கிராபருடன் வந்த அவர், முதல் ஆளாகப் பொதுக்கூட்ட மேடையில் ஏறினார். சவுக்குக்கட்டைத் தடுப்பு வேலி அருகே சென்ற ராஜிவ்காந்தி சிலருடன் கை குலுக்குவதையும் மேடையிலிருந்தவாறு பார்த்தார் ராமமூர்த்தி.

அவர்களுக்கு அருகேயே பசை போட்டு ஒட்டியதுபோல கூடவே திரிவார்கள். தமிழ்நாடு காங்கிரஸில் ஆயிரத் தெட்டு கோஷ்டிகள் இருப்பதால் டெல்லியிலிருந்து வருபவர்களுடன் தங்களுக்குத்தான் முக்கியத்துவம் இருக்கிறது என்று காட்டிக்கொள்ள ஆளாளுக்குப் போட்டி போடுவார்கள்.

இம்முறை தேர்தல் நெருங்கும் சமயம். டெல்லியில் இருந்து வந்திருப்பவர் சாதாரண நபர் அல்ல. காங்கிரஸ் கட்சியின் தலைவர். முன்னாள் பிரதமர். அடுத்த பிரதமராகும் வாய்ப்பு இருப்பதாக ஊடகங்களால் கணிக்கப்பட்டவர். அப்படிப்பட்ட ஒருவருக்கு அருகே



ராஜிவ்காந்தி கொலையின் மர்மங்கள்

வழமையாக ராஜிவ் காந்தி தமிழகம் வரும்போது அவருக்கு அருகிலேயே கூட வரும் ராமமூர்த்தி, அன்றைய இரவில் மாத்திரம் எதற்காக ராஜிவ்காந்திக்கு அருகில் வராமல், முன்னே சென்று மேடையில் ஏறினார் என்பது தெரியவில்லை. ராஜிவ்வு டன் வந்திருந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை மேடைக்கு அருகே அழைத்துச் செல்வதற்கு ராமமூர்த்தி தான் போயிருக்க வேண்டும் என்பதில்லை. வேறு யாரிடமாவது அந்த அலுவலை ஒப்படைத்துவிட்டு, ராமமூர்த்தி ராஜிவ் காந்தியுடன் சென்றிருக்கலாம்.

இது ஒரு ஆச்சரியமான விஷயம் என்றால், அதைவிட ஆச்சரியமான விஷயம், தமிழ்நாடு காங்கிரஸின் எந்தவொரு தலைவரும் அன்றைய இரவில் ராஜிவ் காந்திக்கு அருகே நின்றிருக்கவில்லை.

வழமையாக விளம்பரத்தில் விருப்பமுடைய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் டெல்லியிலிருந்து யார் வந்தாலும்

எந்தவொரு உள்ளூர் தலைவரும் இல்லை என்பது ஆச்சரியம் இல்லையா?

தமிழக காங்கிரஸ்ஸின் இரு முக்கிய தலைவர்களான மூப்பனார், வாழப்பாடி ராமமூர்த்தி (இருவரும் தற்போது உயிருடன் இல்லை) ஆகிய இருவரும் அன்றைய இரவில் இந்தப் பொதுக்கூட்ட மைதானத்தில் இருந்தார்கள். ஆனால் ராஜிவ் காந்திக்கு அருகில் இல்லை.

இது எதேட்சையாக நடந்ததா, அல்லது வேறு ஏதாவது காரணம் இருந்ததா என்பது தெரியவில்லை. பின்னாட்களில் ராஜிவ்காந்தி கொலை விசாரணையின் போதுகூட இந்தக் கோணத்தில் யாரும் சந்தேகம் எழுப்பவில்லை. **இது ஒரு சந்தேகம்.**

பொதுக்கூட்ட மைதானத்துக்கு வந்த காரில் இரு பத்திரிகையாளர்களுக்கு நடுவே அமர்ந்து வந்ததால் காரிலிருந்து மரகதம் சந்திரசேகரால் சற்று மெதுவாகத்தான் இறங்க முடிந்தது. எனினும், ராஜிவ்காந்தி நின்றிருந்த இடத்துக்கு அருகே நெருங்கிவிட்ட அவர், தனது ஆதரவாளர்களை ராஜிவ்காந்தியிடம் அறிமுகப்படுத்த முயன்றார். கூட்டத்தினர் மரகதம் சந்திரசேகரை நெருக்கியடித்துக்கொண்டிருந்தனர். கட்சித் தொண்டர் ஒருவர், ராஜிவ்காந்திக்கு சால்வை அணிவித்துவிட்டு போட்டோவுக்கு 'போஸ்' கொடுத்தார். அப்போது அந்தத் தொண்டர் தம் இரு கைகளினாலும் ராஜிவ்காந்தியை பிடித்துக் கொண்டிருந்தார்.

அந்தத் தொண்டரை அப்பால் தள்ளிவிட முயன்ற மரகதம் சந்திரசேகர், நிலைதடுமாறி கீழே விழ இருந்தார். ஆனால் விழாமல் சமாளித்து விட்டார். ராஜிவ்காந்தியை சுற்றிலும் பாதுகாப்பு வளையம் அமைத்திருந்த சீருடை அணியாத பொலிசாருக்கு மக்களின் நெரிசலிலிருந்து ராஜிவ் காந்தியை பாதுகாப்பதே பெரிய பிரச்சினையாக இருந்தது. கட்சித் தொண்டர்களும் பொதுமக்களும் சூழ மேடையை நெருங்கிவிட்டார் ராஜிவ்காந்தி.



மூப்பனார்

விடியோகிராபர்கள் யாரும் பொதுக்கூட்ட மேடையில் இல்லை. அனைவரும் அருகிலிருந்த தற்காலிக மேடையில் நின்றிருந்தனர். விடியோ கமராக்களுக்கான மின் இணைப்பு அந்த ஓரிடத்திலிருந்துதான் கிடைத்தது. அந்த இடத்திலிருந்து மேடையைத் தெளிவாகப் பார்க்க முடியாது.

இவ்வளவு முக்கியமான தேர்தல் பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் ராஜிவ் காந்தியின் பிரச்சாரத்துக்கு எவ்வளவு அதிகமான கவரேஜ் கொடுக்க முடியுமோ அவ்வளவு கவரேஜ் கொடுக்க முயல்வார்கள் என்பது இயல்பு. அப்படியிருந்தும் வீடியோகிராபர்களை மேடை சரியாக தெரியாத இடத்தில் கொண்டுபோய் நிறுத்திய ஏற்பாடு யாரால் செய்யப்பட்டது?

அதைச் செய்தவர் நிச்சயமான ஒரு உள்ளூர் காங்கிரஸ் பிரமுகராகத்தான் இருக்க முடியும், இல்லையா? அவர் எதற்காக அப்படிச் செய்தார்? ராஜிவ் காந்தியின் கடைசி நிமிடங்கள் வீடியோவில் பதிவாவதை யாரோ விரும்பவில்லையா? **இது மற்றுமோர் சந்தேகம்.**



வாழப்பாடி ராமமூர்த்தி

இது போதாதென்று அடுத்து நடந்ததைப் பாருங்கள். ஒரு கட்டத்தில் வீடியோ கமராக்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டது. இதனால் தான் ராஜிவ் காந்தி கொல்லப்பட்ட கணத்தில் எடுக்கப்பட்ட வீடியோப் பதிவுகள் எதுவுமில்லை. கண்ணால் பார்த்தவர்கள் கூறியதை வைத்தே விசாரணை நடைபெற்றது. வீடியோ கமராக் களின் மின் இணைப்பு கூட்ட நெரிசலால் வயர் இழுக்கப் பட்டு துண்டிக்கப்பட்டதா அல்லது இந்த நிமிடத்தில் கூட்டத்திலிருந்தவர்களில் யாரோ சிலரின் ரியாக்ஷன் பதிவாகாமல் துண்டிக்கப்பட்டதா? **இது அடுத்த சந்தேகம்.**

காரணம் வெடிகுண்டு அந்த இடத்தில் வெடிக்கப் போகின்ற விபரம் கூட்டத்திலிருந்த வேறு முக்கிய நபர்கள் யாருக்காவது ஏற்கனவே தெரிந்திருந்தால் அவர்களது படபடப்பு மற்றும் பயங்கலந்த பார்வை ஆகியவை வீடியோவில் பதிவாகியிருக்கும்.

ஆண்கள் பகுதியிலிருந்த கட்சித் தொண்டர்களைப் பார்த்த பின், பெண்கள் பகுதிக்கு வந்த ராஜிவ்காந்தியை அங்கிருந்த கட்சியின் பெண் நிர்வாகிகள் சிலர் வணங்கினர். ஏற்கனவே ராஜிவ்காந்தியுடன் சிறிது தூரம் வந்திருந்த மரகதம் சந்திரசேகர் இப்போது ராஜிவ் காந்திக்கு அருகே இல்லை. ராஜிவ் நின்றிருந்த இடத்திலிருந்து மிகத் தொலைவில் நின்றிருந்தார்.

ராஜிவ் காந்தி எந்தத் தொகுதியில் பிரச்சாரம் செய்ய வந்திருந்தாரோ, அந்தத் தொகுதியின் காங்கிரஸ் வேட்பாளரும்; காங்கிரஸ் கட்சியின் பெண் வேட்பாளருமான மரகதம் சந்திரசேகர், கட்சியின் பெண் நிர்வாகிகளை ராஜிவ் காந்திக்கு அறிமுகப்படுத்த அந்த இடத்தில் இல்லை என்பது ஆச்சரியமாக இல்லையா?

பெண் நிர்வாகிகளும் தொண்டர்களும் இருந்த பகுதிக்கு முன்னே, தனது தாயுடன் நின்றிருந்த கோகிலா, ஏற்கனவே தாஸ் மூலமாக அனுமதி பெறப்பட்டதன்படி தனது ஹிந்தி, மொழி பெயர்ப்புக் கவிதையை ராஜிவ் காந்தியிடம் வாசித்துக் காண்பித்தார்.

கோகிலாவுக்கு பின்னால் இருந்த கண்ணாடி அணிந்த சல்வார் கமீஸ் பெண், ராஜிவ் காந்தியை நோக்கி அடியெடுத்து வைத்தார்.

அவரைத் தடுக்க சப் இன்ஸ்பெக்டர் அனுசுயா முயன்றபோது, தடுக்க வேண்டாம் என ராஜிவ்காந்தி சைகை காட்டினார். அனுசுயா சற்று பின்னால் அடியெடுத்து வைத்ததும், கண்ணாடி அணிந்த பெண் நகர்ந்து சென்று ராஜிவ்காந்தி முன்னால் நின்றார்.

ராஜிவ்காந்தியின் கழுத்தில் சந்தன மாலையை அணிவித்தார். பின்னர் அவரது காலைத் தொட்டு வணங்குவதைப்போல கீழே குனிந்தார்.

இது நடந்தது ராஜிவ்காந்தி குண்டு துளைக்காத காரிலிருந்து இறங்கிய 10 நிமிடங்கள் கழித்து. அப்போது நேரம் இரவு 10 .18

கண்ணாடி அணிந்த பெண் கீழே குனிந்தவுடன், திடீரென காதைச் செவிடாக்கும் ஓசை கேட்டது. ராஜிவ் காந்தி நின்ற இடத்தில் தீப்பிளம்புடன் 20 அடி உயரத்துக்குக் கரும்புகை எழுந்தது. யாருக்கும் எதுவும் புரியாமல் எல்லா இடங்



களிலும் கூக்குரல் கேட்டது.

புகை தணிந்ததும் பார்த்தால், ராஜிவ் காந்தி நின்றிருந்த இடத்தில் எவரும் உயிருடன் இருந்த அறிகுறியே இல்லை. எங்கு பார்த்தாலும் இரத்தமும், சதைத் துண்டுகளும் சிதறிக்கிடந்தன.



கண்ணாடி அணிந்த பெண், லதா கண்ணன், கோகிலா, புகைப்படம் எடுத்த ஹரிபாபு, ராஜிவ் காந்தியின் தனிப் பாதுகாப்பு அதிகாரி உள்பட 15 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் மூவர் வைத்திய சாலையில் இறந்தனர். இறந்தவர்களில் மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் முகமது இக்பால் உள்பட 9 பொலிசாரும் அடங்குவர். 44 பேர் காயமடைந்தனர். இவர்களில் 20 பேருக்குப் பலத்த காயம்.

ராஜிவ்காந்தியின் கடைசி நிமிடங்களைப் படம் பிடித்த காமெரா, அதை வாடகைக்கு வாங்கிவந்த போட்டோ கிராபர் ஹரிபாபு உடல் மீது 'மௌனச்சாட்சியாக'க் கிடந்தது.


கரும் புகை தணிந்ததும் அங்கு பீதியும், குழப்பமும் காணப்பட்டது. ஏராளமான கட்சித் தொண்டர்களும், பொலிசாரும் அச்சத்தால் அங்கிருந்து ஓடிப்போய் விட்டனர். சிலர் தங்கள் காரிலோ மற்றவர்களின் காரிலோ ஏறி அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிட்டனர். ஆனாலும், கட்சித் தொண்டர்கள் சிலரும், பொலிசார் சிலரும் அங்கேயே இருந்தனர்.

குண்டுவெடிப்பில் ஸ்ரீபெரும்புதூரின் அமைதி சிதறிய நேரத்தில், ராஜிவ்காந்தி வருகைக்காகப் பொதுக்கூட்ட மேடையில் காத்திருந்தார் வாழப்பாடி. இந்திரா காந்தி சிலையிருந்த பகுதியிலிருந்து பொதுக்கூட்ட மேடை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தார் மூப்பனார். பொதுக்கூட்ட மைதானத்தில் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து பாதுகாப்பான தூரங்களில் இருந்த இவ்விரு தலைவர்களும் குண்டு வெடித்த இடத்துக்கு ஓடிச்சென்று பார்த்தபோது, தங்கள் தலைவர் ராஜிவ்காந்தியின் சிதைந்து போன உடலைத்தான் காண முடிந்தது. ராஜிவ் காந்தி அணிந்திருந்த லோட்டோ ஷுக்கள் தான் அவரது உடலை எளிதாக அடையாளம் காண உதவின.

ராஜிவ்காந்தியின் உடலைத் தனது கைகளால் தூக்க மூப்பனார் முயன்றபோது, சதைப்பிண்டங்கள்தான் கைகளில் வந்தன. உடனே, ராஜிவ்காந்தியின் உடல் மீது சால்வை போர்த்தப்பட்டது. முகம் தரை மீது புதைந்திருந்தால் உடலைத் திருப்பிப்போட்டுவிட்டு ஸ்ட்ரெட்சர் வரவழைக்கப்பட்டது.

இந்த நேரத்தில் ராஜிவ் காந்தியின் உடல் கிடந்த சிவப்புக்கம்பள விரிப்பின் ஒரு பகுதியில் தீப்பற்றியது. அதைப் பார்த்துவிட்டு, அதுவரை சற்றுத் தொலைவில் நின்றிருந்த, கூட்டத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குப் பொறுப்பான பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் (ஐ.ஜி) ராகவன் அந்தத் தீயை அணைத்தார்.

ராஜிவ்காந்தியின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக சென்னையில் உள்ள அரசாங்கப் பொது வைத்திய சாலைக்கு பொலிஸ் வாகனத்தில் கொண்டு செல்லப் பட்டது. மற்றவர்களின் உடல்களும் பிரேதப் பரிசோதனைக்காக அகற்றப்பட்டபோது, அங்கே கிடந்த 'சினான்' கமராவை எடுத்து வருமாறு கூறினார் பொலிஸ் ஐ.ஜி. ராகவன்.



குண்டுவெடிப்பில் எஞ்சிய தடயங்களைச் சேகரித்துப் பத்திரப்படுத்த வேண்டியதன் அவசியம் அவருக்குத் தெரியும். புலனாய்வு விசாரணை தொடங்கினால் ஒவ்வொரு சிறு விவரமும், தடயமும் முக்கியத்துவம் பெற்றதாகி விடும்.


பிரேதப் பரிசோதனைக்குப் பின் ராஜிவ்காந்தியின் உடல் மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு எடுத்துச் செல்லப் பட்டது. டில்லியிலிருந்து விமானப்படை சிறப்பு விமானத்தில் ராஜிவ்காந்தியின் மனைவி சோனியா காந்தி, மகள் பிரியங்கா ஆகியோர் அப்போதுதான் அங்கு வந்து சேர்ந்தனர். பின்னர் ராஜிவ்காந்தியின் உடலுடன் தனி விமானத்தில் டில்லிக்கு புறப்பட்டுச் சென்றனர். அப்போது மே 22ம் திகதி அதிகாலை நேரம்.

ராஜிவ்காந்தி படுகொலைச் சம்பவம் நடந்த நேரத்தில் தமிழகத்தில் ஆளுநர் ஆட்சி (இந்திய அரசின் நேரடி ஆட்சி) நடந்துகொண்டிருந்தது. சட்டம் ஒழுங்கு சீர்குலைவு என்ற காரணத்திற்காக சில மாதங்களுக்கு முன்புதான் திமுக அரசாங்கம் கலைக்கப்பட்டிருந்தது.


அப்போது ஆளுநராக இருந்த பீஷ்ம நாராயண சிங் இந்திய அரசுக்கு ராஜிவ்காந்தி படுகொலை புலனாய்வு வேலையை தமிழக காவல்துறையிடமிருந்து அகற்றி சி.பி.ஐ.யின் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று அறிவுறுத்தல் அனுப்பினர்.

1991 மே 22 ஆம் திகதி காலை 11 மணிக்கு, மத்திய பாதுகாப்புப் படையின் இயக்குநர் ஜெனரல் கே.பி.எஸ். கில், மத்திய உளவுப்பிரிவு (சி.பி.ஐ.) இயக்குநர் விஜய் கரன் ஆகியோர், ஹைதராபாத்தை தலைமையிடமாகக் கொண்ட தென்னகப்பகுதியின் மத்திய ரிசேர்வ் பொலீஸ் படையின் ஐ.ஜி.யாக இருந்தவரும், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்தவருமான டி.ஆர். கார்த்திகேயனைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினர்.

ராஜிவ்காந்தி படுகொலைச் சம்பவத்தைப் புலனாய்வு நடத்தவிருக்கும் சி.பி.ஐ.யின் ஒரு பகுதியாக அமைக்கப் படவுள்ள சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு டி.ஆர். கார்த்திகேயன் தலைமை ஏற்க வேண்டும் என இந்திய அரசின் பல்வேறு நிலைகளில் ஒரு மனதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.



''மகாத்மா காந்தி, இந்திரா காந்தி படுகொலைச் சம்பவங்களில் கொலையாளிகள் சம்பவ இடத்தி லேயே அகப்பட்டதால் சாட்சியங்கள் திரட்டுவதும் புலனாய்வு மேற் கொள்வதும் சற்று எளிதாகவே



இருந்தது. ஆனால், ராஜிவ் காந்தி படுகொலை அந்த மாதிரியானதல்ல.

திட்டமிட்டவர்கள் யார் என்ற அடையாளமே தெரிய வில்லை.

இந்தச் சம்பவத்துக்கு யார் அல்லது எந்த அமைப்பு காரணமாக இருக்கும் என்ற யூகத்தைக்கூட இந்திய உளவு அமைப்புகளால் தர முடியவில்லை என்பதை விஜய் கரன் ஒப்புக் கொண்டார்.

இந்தப் புலனாய்வும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கென்னடி கொலை வழக்குபோல முடியக் கூடும்.

இருப்பினும், இதில் உள்ள மர்ம முடிச்சுக்களை அவிழ்க்க அரசாங்கம் விரும்புகிறது என்றும் அவர் சொன்னார்.

(தொடரும்)

1986ம் ஆண்டின் நாடு கடத்தலின் பின் பெனாசிர் பூட்டோ நாடு திரும்பும் நாளன்று நசீர் அஹமது பாலோச் அதிகாலையில் எழுந்து பூட்டோவின் கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சியின் முத்திரையை தனது சட்டையில் குத்தி "பூட்டோ நெடுங்காலம் வாழ்க" என முழங்கிக் கொண்டிருந்தார்.

பாடுபடுவேன்'' என்று கூறியதை மிகவும் நம்பினார். "பூட்டோ எங்கள் வீட்டிற்கே வந்து எங்களது பிரச்சனைகளைப்பற்றி விசாரித்தார். அப்போது சிறிய வனாக இருந்த நசீர் அவரது கட்சியின் கொடியை ஆட்டிக்கொண்டு வீட்டில் இருந்தான்'' என்கிறார் அனிபா பன்னோ.

உயிர் ஆபத்தில் பெனாசிர்



அவரது தந்தையின் சகோதரி அனிபா பன்னோ "அவருக்கு கிறுக்கு பிடித்திருக்கிறது. பூட்டோவின் ஆட்சி அவருக்கு எதுவுமே செய்ததில்லை. ஆயினும் அவர்களது தாரக மந்திர மான உணவு, இருப்பிடம், உடை என்பதை அவர் மிகவும் தீவிரமாக நம்பினார். கட்சியின் தீவிர தொண்டர் அவர்'' என்கிறார்.

மறுபடியும் வந்திருக்கிறார்

பெனாசிர் பூட்டோ, தனது தந்தை சுல்ஃபிகர் அலி பூட்டோ ராணுவத்தால் தூக்கிலிடப்பட்ட போது பாகிஸ்தானை விட்டு சென்றார். எனினும், தனது தந்தையின் உடலை பெறுவதற்காக திரும்பி வந்த அவர், தனது கட்சியை தேர்தலில் வழிநடத்தி பாகிஸ்தானின் முதல் பெண் பிரதமரானார். அவரே உலகத்திலேயே ஒரு முஸ்லிம் நாட்டை ஆண்ட முதல் பெண்மணி.

பாகிஸ்தானின் மற்ற ஏழை மக்களை போலவே, நசீரும் பூட்டோ ''ஏழைகளுக்காக

எனினும் பூட்டோ 1999ல் தன் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச் சாட்டுக்களை எதிர்த்தும், மற்றொரு ராணுவ வன்முறையை தவிர்க்கவும் நாட்டை விட்டுச் சென்றார். கடந்த மாதம் பாகிஸ்தானுக்குத் திரும்பி வந்த அவரை வரவேற்க நசீர் கர்ப்பிணியாக இருந்த மனைவியை வீட்டில் விட்டுவிட்டு சென்றார். ஆனால் இந்த முறை அவர் வீடு திரும்பவில்லை.

அவரது இறந்த உடல் மட்டுமே கிடைத்தது.

பூட்டோவை கொல்ல ஏவப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் நசீர் உட்பட 141 பேர் பலியாகினர். அதற்கு மறுநாள், இறந்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்திய பூட்டோ, அவர்களது உயிர் தியாகம் தன் மீது அவர்கள் வைத்திருந்த மதிப்பை காட்டுகிறது என்றார்.

ஆனால், அனிதா பன்னோவிற்கு இது வேறு விதமாகத் தோன்றுகிறது. "அரசியல்வாதிகள் இது போன்ற இறப்புகளின்மீது நடந்து தங்களது

அரசியல் பயணத்தை தொடர முடியாது. எங்களுக்கு இப்போது அப்பாவை பார்த்தேயிராத குழந்தை ஒன்றுதான் மிச்சம். அவனுக்கு பூட்டோ என்ன செய்ய விருக்கிறார் என்று பார்ப்போம்'' என்கிறார் அனிபா.

நாடு முன்புபோல இல்லை

பாகிஸ்தானின் பிரதமராக இருமுறை பதவியில் இருந்திருக்கும் பெனாசிர் பூட்டோ, தன்னுடைய வரவே பாகிஸ்தானின் முதல் நம்பிக்கை என்கிறார். ஆனால், அவர் இப்போது திரும்பியிருக்கும் நாடு, அவர் முன்பு ஆண்ட பாகிஸ்தான் அல்ல. இப்போது அந்த நாடு முன்பு எப்போது இல்லாத அளவிற்கு வன்முறை மிகுந்த நாடாகி விட்டது.

அல்-கய்தா மற்றும் உள்ளூர் தீவிரவாதிகளின் வேலை இந்த தாக்குதல் என்று கூறப்பட்டாலும், பூட்டோ அந்த நாட்டின் அரசையும், அவர்களது பாதுகாப்பு கவனக் குறைவையும் குறைகூறி இருக்கிறார். எனினும், பூட்டோ 1986இலும், 1993இலும் ஜெயித்தது போல இப்போதும் ஜெயிக்கலாம் என்பதை கனவிலும் நினைக்க முடியாது. ராணுவத்தின் பிடியில் இருக்கும் பாகிஸ்தான் நாட்டு மக்கள் அனைவருமே ஒரு ஜனநாயகத்தை எதிர்நோக்கினாலும், ராணுவம் தனது பிடியை தளர்த்தாமல் இருக்கிறது.


54 வயதான பூட்டோ இதை எவ்வாறு சமாளிக்க போகிறார் என்பதே கேள்விக்குறி.

அவரது ஆரம்பம் ஒரு கலவையாக உள்ளது. அவரது ஊழல் குற்றச்சாட்டுகளை மறந்து முஷராஃப் அவரை நாடு திரும்ப அனுமதித்துள்ளார். மேலும், ஒருவர் இருமுறை மட்டுமே பாகிஸ்தானின் பிரதமராக முடியும் என்ற சட்டத்தையும் மாற்ற முஷராஃப் ஒப்புக் கொண்டுள்ளதாக தெரிகிறது. அவ்வாறு நடந்தால், வரும் தேர்தலில் பூட்டோ பிரதம மந்திரிக்கான வேட்பாளராக போட்டியிடுவார்.

ஆயினும், முஷராஃபுடனான பூட்டோவின் சில ரகசியப் பேச்சுவார்த்தைகள் அவரது கட்சிக்குள் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. மொத்தத்தில் பாகிஸ்தானிற்கு பூட்டோவின் வருகை ஒரு புதிய சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

வன்முறைக்கு நடுவில் பிரச்சாரம்

ஒக்டோபர் 20ம் திகதி, வெளியில் தெரிவிக்கப்படாமல் திடீரென்று பூட்டோ யாரி என்ற இடத்துக்குச் சென்று மக்களைச் சந்தித்து உயிரிழந்த மக்களின் குடும்பங் களுக்கு ஆறுதல் கூறினார். அவரது பேச்சை கேட்க அப்போதும் மக்கள் வெள்ளமென திரண்டனர். ''நான் உங்கள் சகோதரி. யாரி எனது சொந்த இடம். எனக்காக நீங்கள் அனைவரும் கொடுத்த ஆதரவிற்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்'' என்றார் பூட்டோ. உடனே கூட்டம் ஆரவரித் தது. ஒரு கட்சி தொண்டர் வாணவேடிக்கை வெடித்து மகிழ்ந்தார். பிறகு பூட்டோவின் கார் திரும்பி சென்றது.



பூட்டோவின் இந்த எதிர்பாரா வருகை அவரது கட்சியின் பாரம்பரியமான நீண்ட பிரச்சார பயணங் களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. பாகிஸ்தானில் என்றுமே மக்களின் வருகையை வைத்தே ஒரு கட்சி யின் பலத்தை நிர்ணயிப்பார்கள். இந்த விஷயத்தில் பூட்டோவின் கட்சியே என்றும் முதலிடத்தில் இருந்து வருகிறது.

''எங்கள் நாட்டில் அரசியல்வாதிகள் கீழிறங்கி வந்தால் மட்டுமே மக்களைத் தொடர்பு கொள்ள முடியும். பூட்டோவின் ஆதரவாளர்கள் தொலைகாட்சி பார்ப் பவர்கள் அல்ல. அவர்களுக்கு வீதிவழி பிரச்சாரமே சரி. எனவே, இதுபோன்ற பிரசாரங்கள் செய்யாமல் அரசியல்வாதிகளால் அரசியல் நடத்த முடியாது. ஆனால் இப்போது அதற்கே வழியில்லாமல் போய் விட்டது'' என்கிறார் பாகிஸ்தான் அரசியல் ஆலோசகர் நஸ்ரத் ஜாவெத்.

பூட்டோ தனது தேர்தல் பிரசாரத்தை தனது சொந்த மண்ணான லர்கானாவிலிருந்து தொடங்க நினைத் திருந்தார். ஆனால், தற்போது அதைப் பற்றி மீண்டும் சிந்திக்க அவர் தள்ளப்பட்டுள்ளார். ''தற்கொலைத் தாக்குதல்களிலிருந்து தப்ப நாங்கள் யோசிக்க வேண்டி யுள்ளது. எனினும், நாங்கள் மக்களை சந்திக்கும் பிரசாரங்களை கைவிட மாட்டோம். வீதி பிரசாரங் களுக்கு எங்களது கட்சியில் சிலர் எதிர்ப்பு தெரிவித்துள் ளனர். எனவே பாதுகாப்பை மனதில் கொண்டு வீதிப் பிரசாரங்களை மட்டும் தவிர்ப்போம்.''

சர்வாதிகாரியுடன் சமரசம்

முஷராஃபுடனான பேச்சுவார்த்தை வெற்றிபெற்றால், பூட்டோ பாகிஸ்தானின் பிரதமராக மூன்றாவது முறை யும் வரக்கூடும். ராணுவத்தலைவர் பதவியிலிருந்து இறங்கினாலும் முஷராஃபே ஜனாதிபதியாக பதவியை தொடருவார். ஆனால், அவ்வாறு அமைந்தால் கட்சிக் குள்ளேயே பலத்த எதிர்ப்பு வரலாம் என பூட்டோ அச்சத்தில் உள்ளார்.

''தங்கள் பகுதியில் உள்ள கட்சி ஆட்களிடம், வோட் கேட்டு தங்களிடம் வரவேண்டாமென பலரும் கூறி யுள்ளனர். படித்த மக்கள் இவர்களது ரகசிய டீல்களை

அச்சத்துடன் பார்க்கின்றனர்'' என்கிறார் ஆயிஷா டாமி ஹக் என்னும் பத்திரிக்கையாளர்.

தேர்தலில் வெற்றி பெற்றாலும், தனது அரசியல் எதிரி யான முஷராஃபுடன் ஒத்துப்போகும் ஒரு சங்கடமான நிலையில் உள்ளார் பூட்டோ. ஜனாதிபதியான முஷராஃபிற்கு மக்களவையை கலைக்கும் அதிகாரமும் உண்டு. இந்த அதிகாரத்தை வைத்துதான் முஷராஃப் முன்பு பூட்டோவின் ஆட்சியை கலைத்தார். இந்த அதிகாரத்தை மாற்றுவதற்கான சட்டத்தை கொண்டு வர மக்களவையில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு வேண்டும். இது நடக்காத காரியம் என்பதால் பூட்டோ வின் கட்சித் தலைவர்கள் கவலையில் உள்ளனர்.

பூட்டோ தன்மீது நடந்த தாக்குதலுக்கு நேரடியாக முஷராஃபை குற்றம் சாட்டாவிட்டாலும், அவரது ஆட்சியின்கீழ் உள்ள தீவிரவாதிகளே இதற்கு காரணம் என தெரிவித்துள்ளார். "நான் அரசாங்கத்தை குறை கூறவில்லை. ஆனால் இந்த அரசாங்கத்தின் கீழ் உள்ள சிலரும், பாதுகாப்பு அதிகாரிகளின் பொறுப்பற்ற நடவடிக்கைகளுமே இதற்கு காரணம்'' என்று பூட்டோ தெரிவித்தார்.

மேலும், முஷராஃபுடனான தனது பேச்சுவார்த்தையை நியாயப்படுத்தி, தற்போதைய நிலையில் அது மிகவும் அவசியம் என்று கூறியுள்ளார் பூட்டோ. "ஜனநாயகத் திற்காக நடக்கும் போர் இது. எனவே, இது அமைதியாக நடக்க வேண்டுமென நான் விரும்பு கிறேன். அவர் மீது ஏற்கனவே தாக்குதல்கள் நடந்துள் ளன. இப்போதும் என்மீதும் நடந்துள்ளன. இதுவே தீவிரவாதிகளை இருவருமாக சேர்ந்து எதிர்க்க வழி செய்துள்ளது.''

பத்திரிக்கை சுதந்திரம்

முஷராஃபின் ஆட்சியில் நடந்த நல்ல விஷயங்களில் முக்கியமான ஒன்று, பத்திரிக்கைகளின் சுதந்திரம். தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களும், வானொலி நிலையங்களும் பூட்டோவின் வருகையை முக்கிய விஷயமாக கொண்டாடின. "மீடியா முக்கிய பொறுப்பை வகிக்கிறது. எனவே பூட்டோ மீடியா விடம் சுமூக உறவு கொள்ள வேண்டும். முதலில் சுலபமாக இருந்தாலும், பின்பு வரும் கடின கேள்வி களுக்கு அவர் பதிலளிக்க வேண்டும். எப்போதும் போல கட்சியின் மந்திரத்தை கூறிவிட்டு செல்ல முடியாது'' என்கிறார் ஹக்.

ஜனவரியில் நடக்கவிருக்கும் தேர்தலே, பாகிஸ்தானில் மீடியாவின் பார்வையில் நடக்கும் முதல் தேர்தலாகும். ஏற்கனவே, பல கட்சித் தொண்டர்கள் பூட்டோ தாக்குதலிலிருந்து தப்பித்ததை தொலைக்காட்சியில் பல முறை கண்டனர். இதனாலேயே பலரும் அவர் மீதான நம்பிக்கையை இழந்தனர்.

"கட்சி தலைவர்கள் தங்களது கார்களில் அந்த இடத்தை விட்டு உடனே சென்றனர். அங்கு கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களை பற்றி அவர்கள் கவலையே கொள்ளவில்லை. உண்மையில் தங்களது கார்களில் காயமடைந்தவர்களை அவர்கள் மருத்துவ மனைக்கு அனுப்பியிருக்க வேண்டும். ஆனால், அவர் களை ஆம்புலன்சுகளும், சேவைப்படைகளும் வரும் வரை காக்க வைத்தனர்.''

பெரிய எதிர்பார்ப்புகள்

மற்றுமொரு விஷயத்திலும் முஷராஃபின் ஆட்சி நன்மையளித்துள்ளது. அவரது ஆட்சியில் நாட்டின் பொருளாதாரம் வருடத்திற்கு 7% வீதம் வளர்ச்சி யடைந்து வருகிறது. முக்கியமாக, ஒன்பது வருடங் களுக்கு முன்பு பாகிஸ்தான் அணுஆயுத சோதனை நடத்தியதால் அமெரிக்கா அதன்மீது விதித்திருந்த பொருளாதார தடையை 2001ல் விலக்கியதே இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.

பாகிஸ்தானின் வியாபார உலகம் இதை அப்படியே பூட்டோவும் தொடர வேண்டுமென விரும்புவது இயற்கை. அதேசமயம், ஏழை மக்களின் கோரிக்கை களையும் பூட்டோ நிறைவேற்ற வேண்டும். "பூட்டோ எங்களுக்கு வேலை கொடுப்பேன் என உறுதியளித்துள் ளார். அவர் இதை செய்யவில்லை என்றால் அதற்கான பலனை அனுபவிப்பார்''

தீவிரவாதத்திற்கு எதிராக போர்

எல்லாவற்றி ற்கும் மேலாக, தீவிரவாதத்திற்கு எதிரான போரில் பூட்டோ தங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் எதிர்பார்ப்பை அவர் நிறை வேற்ற வேண்டும்.

பூட்டோவே முஷராஃப் தீவிரவாதத்தை தடுக்கத் தவறி விட்டதாக கூறியுள்ளார். ஆயினும், நாட்டில் மக்களாட்சி மலர வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்த வழியையும் அவர் இதுவரை கூறவில்லை. "சர்வாதிகாரம் இங்கு எடுபடாது. அது நிலைமையை இன்னும் மோசமாக்குகிறது.''

கடந்த இரு மாதங்களில் இரண்டு டசினுக்கும் மேலான தாக்குதல்கள் ராணுவத்தை எதிர்த்து நடைபெற்றுள் ளது. மேலும் 2001, செப் 11 உலக வர்த்தக மையத்தின் மீதான தாக்குதலுக்குப் பிறகு உலகின் எந்தத் தாக்கு
















தலும் பாகிஸ்தானை நோக்கியே கையை நீள செய்துள்ளது. அமெரிக்காவின் கூற்றுபடி பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் எல்லையே அல்-கய்தாவின் சொர்க்கம்.

முஷராஃப் மற்றும் பூட்டோவின் பேச்சுவார்த்தை அமெரிக்காவின் தீவிரவாதத்திற்கு எதிரான போரில் உதவும் என்று அமெரிக்கா நம்பினாலும், பலரும் இது கைமீறிய விஷயம் என்கின்றனர். "தீவிரவாதம் அங்கு வேரூன்றி விட்டது. தற்போது நிலைமை கை மீறி விட்டது அதை யாராலும் அப்போது ஒடுக்க முடியாது."

தீவிரவாதத்திற்கு எதிரான போராக ஆரம்பித்தது தற்போது பாகிஸ்தானியர்களுக்கு எதிரானதாக மாறி விட்டது. இதை பூட்டோ மாற்ற வேண்டும். "மொத்த முஸ்லிம்களின் மீது இருக்கும் வெறுப்பைத் தகர்த்து தீவிரவாதத்தை பூட்டோ அழிக்க வேண்டும். அது மிகவும் கடினமான விஷயம்"

உள்நாட்டு மற்றும் உலக நாடுகளின் எதிர்பார்ப்பை செயலாக்குவதே பூட்டோவின் முன் இருக்கும் முக்கிய சவால். "நான் எனது உயிரையும் பணயம் வைக்க தயாராக உள்ளேன். ஆனால் எங்களது நாட்டை தீவிரவாதத்திற்கு பலிகொடுக்க மாட்டேன்" என்று அவர் கூறியுள்ளார்.

தீவிரவாதிகள் ஏற்கனவே அவரை குறி வைத்து ஒரு முறை முயற்சித்துள்ளனர்.

மறுமுறை வைக்க அதிக நாட்கள் ஆகாது அவர்களுக்கு.

1970ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் அப்போது அச்சு அசலான கம்மியூனிசம் இருந்த காலத்தில், பணக்காரராக இருப்பதே குற்றம் என்று பார்க்கப்பட்ட சீனாவில், முதலாளித்துவ பாணியிலான பொருளாதார சீர்திருத்தங்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்ட சீனாவின் மறைந்த தலைவர் டெங் ஜியா ஒப்பிங் ஒருமுறை, ''முதலில் சிலர் பணக்காரர்களாக ஆகட்டும்'' என தெரிவித்தார்.



கோடீஸ்வரர்கள் ஜாக்கிரதை

மேலும் அவர் குறிப்பிட்ட மற்றொரு வாசகம் மிகவும் புகழ்பெற்றது. ''ஏழ்மை என்பது சமத்துவம் அல்ல. பணக்காரர்களாக இருப்பது புகழைத் தரும்''

30 ஆண்டுகளுக்கு பிறகு சிறிய எண்ணிக்கையிலான சீனர்கள், மற்றவர்களைவிட பணக்காரர்களாகி வருகின்றனர். பாஸ்டன் கன்சல்டன்சி நிறுவனம் நடத்திய ஆய்வின்படி, 2005ம் ஆண்டு சீனாவில், இரண்டரை லட்சம் கோடீஸ்வரர்கள் (அமெரிக்க டொலரில் கோடீஸ்வரர்கள்) இருப்பதாகவும், உலகில் ஆறாவது இடத்தில் (அதிக கோடீஸ்வரர்கள்) சீனாவில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சீனாவின் மொத்த மக்கள்தொகையில் 0.4 சதவீதம் மட்டுமே. ஆனால், நாட்டின் 70 சதவீதமான செல்வம் அவர்களிடம் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஃபோர்ப்ஸ் பத்திரிக்கைக்காக கடந்த 2000ம் ஆண்டு சீன கோடீஸ்வரர்களின் பட்டியலை தயாரித்து அளித்த ஷாங்காயை சேர்ந்த ஆங்கில சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட் ரூபர்ட் ஹூகிவெர்ஃப் கூறுகையில், ''2004ம் ஆண்டின் பிற்பகுதியில் 50 ஆயிரம் சீனர்களின் சொத்து மதிப்பு, ஒவ்வொருவருக்கும் 10 மில்லியன் அமெரிக்க டொலர் அல்லது அதற்கும் மேலாக இருந்தது என்று தெரிவிக்கிறார். அவர்களில் குறைந்தபட்சம் 200க்கும் மேற்பட்டோரின் சொத்து மதிப்பு, ஒவ்வொருவருக்கும் 100 மில்லியன் டொலருக்கும் அதிகமாக இருந்தது'' என்று தெரிவித்தார்.

மரியாதை இழப்பு

சீனாவில் ஹூ ரன் என அழைக்கப்படும் ஹூகிவெர்ஃப், 2002ம் ஆண்டு ஃபோர்ப்ஸ் பத்திரிக்கையிலிருந்து விலகினார். ஆனால், அவர் சொந்தமான ஹூ ரன் என்ற பெயரில் கோடீஸ்வரர்களின் பட்டியலை தொடர்ந்து வெளியிட்டு வருகிறார். இதனால், சீன பணக்காரர்கள் பற்றி ஆண்டுதோறும் தற்போது இரண்டு விதமான பட்டியல்கள் வெளியாகி வருகின்றன.

ஆனால், அவற்றில் உள்ள தகவல்களை யாரும் மறுக்க முடியாது.

சீனாவின் பங்குச் சந்தையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பங்குகளின் விலைகள் வானத்தைத் தொடுகின்றன. இதனால் மேலும் பலர் கோடீஸ்வரர்களின் பட்டியலில் இணைந்துள்ளனர்.

டெங்கின் புகழ்பெற்ற வாக்கியமான 'பணக்காரர்களாக இருப்பது புகழைத் தரும்' என்பது, சீன சமூகத்தின் வேர்களை புரட்டிப் போட்டபோதிலும், பொது மக்களிடம் குறிப்பாக இளைஞர்களிடம் பணக்காரர்களுக்கு மரியாதை இல்லை. அண்மையில் அரசுக்கு சொந்தமான சீனா யூத் டெய்லி நடத்திய ஆய்வு ஒன்றில், 45 வயதுக் குட்பட்ட 3,990 பேரில் 66.75% பேர், சீன கோடீஸ்வரர்கள் ''மிகவும் தாழ்ந்த புகழ் அல்லது குணங்களை'' கொண்டுள்ளனர் என தெரிவித்துள்ளனர். வெறும் 3.95% சதவீதம் பேர் மட்டும்தான், கோடீஸ்வரர்கள் சமூகத்தில் நல்ல மரியாதையை கொண்டுள்ளனர் என தெரிவித்துள்ளனர்.

''மக்களிடம் மரியாதையை பெற கோடீஸ்வரர்கள் என்ன செய்ய வேண்டும்'' என்ற கேள்வியும் கேட்கப்பட்டிருந்தது. அதற்கு வந்த பதில்களைப் பாருங்கள்

நேர்மையான கோடீஸ்வரர் என்றால், அவருக்கு சமூக பொறுப்புணர்வு (87.79%) மற்றும் கருணை உள்ளம் (77.11%) இருக்க வேண்டும் என்றும், சட்டப்பூர்வமான முறையில் அவர்கள் பணம் சாம்பாதித்து இருக்க வேண்டும் (73.99%) என்றும் இந்த கருத்துகணிப்பில் தெரிவித்தனர். இந்த ஆய்வின் மூலம் சீனக் கோடீஸ்வரர்களுக்கு இத்தகைய நற்பண்புகள் இல்லை என பலரும் கருதுவது தெரியவந்துள்ளது.

கோடீஸ்வரர்களுக்கு சமூக பொறுப்பு இல்லை என 81.06% பேர் பதிலளித்துள்ளனர். சட்டவிரோதமாக அவர்கள் சொத்து சேர்த்துள்ளதாக 68.01% பேர் நம்புகின்றனர். பெரிய மனிதர்களுக்கு தாராள உள்ளம் கிடையாது என 67.16% பேர் பதிலளித்துள்ளனர்.

சீனாவின் பாரம்பரியத்திற்கும், மக்களின் இப்படியான நம்பிக்கைக்கும் ஏதேனும் தொடர்பு இருக்கிறதா? இருக்கிறது. கன்பூசிய சீனாவில் மக்கள் நான்கு குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளனர்: (கன்பூசியன்) அறிவுஜீவிகள், விவசாயிகள், கலைஞர்கள் மற்றும் வியாபாரிகள் என வரிசைப்பட்டுள்ளதில், பணம் ஈட்டும் வியாபாரிகளுக்கு கடைசி இடம் அளிக்கப்பட்டுள்ளது. கோடீஸ்வரர்கள் இந்த சமுதாய நம்பிக்கையின் அடிப்படையிலேயே, கடைசியாக வருகிறார்கள் - சமுதாய மதிப்பில்!

குறுக்குவழியில் பணம் குவிப்பு

ஆனால் இதில் ஆச்சரியமான ஒரு தரவும் இருக்கிறது. அதே கருத்துக் கணிப்பில், உலகில் மிகவும் பணக்கார சீனராக கருதப்படும் ஹொங்கொங்கை சேர்ந்த செயோங் காங்க் ஹோல்டிங்ஸின் தலைவரான லீ காஷிங், உலகிலேயே பெரிய பணக்காரரான மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தலைவரான பில் கேட்ஸிற்கு அடுத்தபடியாக மரியாதைக்குரியவர் என மக்கள் வாக்களித்துள்ளனர்.


அதாவது கோடீஸ்வரர்களாக இருந்தாலும் தனிப்பட்ட செல்வாக்கு, அல்லது புகழ், சிலரைத் தூக்கிவிடவே செய்கிறது. வர்த்தக சாம்ராஜ்ஜியத்தில் கோடீஸ்வரர்களின் எழுச்சி மற்றும் ஈகைக்குணம் ஆகியவற்றை கருத்தில் கொண்டுதான் மக்களிடம் அவர்களின் மதிப்பு உயர்கிறது.

சீனாவில் உள்ள கோடீஸ்வரர்களைவிட, அயல் நாடுகளில் உள்ள கோடீஸ்வரர்கள் மீது நல்ல மதிப்பு வைத்துள்ளதாக சீன மக்களில் பெரும்பாலானவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். உள்நாட்டுக் கோடீஸ்வரர்கள் மீது அவர்கள் வைத்துள்ள எண்ணங்களின் பிரதிபலிப்பாக இது இருக்கிறது.

''லி கா-ஷிங் அல்லது ஹொங்கொங்கில் உள்ள பிற கோடீஸ்வரர்களைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால், சீனாவில் உள்ள பல கோடீஸ்வரர்கள், அவர்களின் முதல் தங்க வாளியை கடின உழைப்பின் மூலமாகவோ அல்லது அதிர்ஷ்டத்தின் மூலமாகவோ பெறவில்லை. சட்டவிரோதமான வழிகளில் அவர்கள் பொருள் ஈட்டியுள்ளனர்'' என பெய்ஜிங்கை சேர்ந்த சமூவியலாளர் ஒருவர் தெரிவிக்கிறார்.

மோசடி மன்னர்கள்

கடந்த காலங்களில் சீன பணக்காரர்கள் இழைத்த 'உண்மையான பாவங்கள்' பற்றி கடுமையான விவாதங்கள் நடைபெற்றுள்ளன. 2000ம் ஆண்டு முதல் ஃபோர்ப்ஸ் அல்லது ஹூ ரன் பட்டியல்களில் இடம்பெற்று வரும்



லீ காஷிங்
உலகிலேயே பெரிய பணக்காரரான மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தலைவரான பில் கேட்ஸிற்கு அடுத்தபடியாக மரியாதைக்குரியவர் என மக்கள் வாக்களித்துள்ளனர்.

கோடீஸ்வரர்களில் பலர், பின்னர் மோசடி, நிதி முறை கேடு, வரி ஏய்ப்பு மற்றும் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்த குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நந்தே நிறுவனத்தின் முன்னாள் தலைவரான மியோ குயிஸ்ஹாங்க், நடிகையாக இருந்து பின்னர் பெண் தொழிலதிபராக உருவெடுத்த லியூ ஜியோவோகுயிங், ஷாங்காயின் மிகப்பெரிய பணக்காரர் என அழைக்கப்பட்டவரும், ஷாங்காய் நோங்காய் நிறுவனத்தின் முன்னாள் தலைவருமான ஜாவு ஜென்கெயி ஆகியோர் மீது பல்வேறு வழக்குகள் உள்ளன. அண்மையில் ஃபோர்ப்ஸின் கோடீஸ்வரப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட மற்றொரு பணக்காரரும், ஷாங்காயில், ''நெடுஞ்சாலைகளின் மன்னர்'' என்று அழைக்கப்படுபவருமான ஜாங் ரோங்குன், ஏராளமான ஷாங்காய் அதிகாரிகள், ஷாங்காய் கட்சி தலைவர் சென் லியான்குயு உள்ளிட்டோருக்கு லஞ்சம் கொடுத்த புகாரின் பேரில் கைது செய்யப்பட்டார்.

மோசடிக் கோடீஸ்வரர்கள் கைது

கடந்த மாதம் ஜியாவோஷூவு சினான் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் முன்னாள் தலைவரான ஜியி குவோசெங், மோசடி புகார்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டார். ஹெனன் மாகாணத்தில் கைது செய்யப்படும், ஃபோர்ப்ஸ் கோடீஸ்வரர்கள் பட்டியலில்

இடம்பெற்ற மூன்றாவது நபர் இவர். கடந்த பெப்ரவரியில் ஹெனனை சேர்ந்த லுயாங் ஜோங்க்டாய் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் லீ யிச்சாவோ, வரி ஏய்ப்பு செய்த சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். மே மாதத்தில் ஹெனன் மாகாணத்தில் மிகப் பெரிய பணக்காரரும், ஹூயாலின் நிறுவனத்தின் முன்னாள் தலைவருமான சன் சுஹூஹூவாவிடம், மோசடி குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டது.

இந்த பட்டியல் தொடர்ந்து நீண்டு கொண்டே செல்கிறது.

அதே நேரத்தில் ஊழல் மூலம் கோடீஸ்வரரான பலர், ஃபோர்ப்ஸ் கோடீஸ்வரர்கள் பட்டியலில் இடம்பெறவில்லையென்ற போதிலும், அவர்களும் நீதிமன்றப் படிக்கட்டுகளில் ஏறியிறங்கி வருகின்றனர். உதாரணமாக, ஜியான்ஹாவோ நிறுவனத்தின் தலைவரும், பெய்ஜிங்கின் மிகப்பெரிய பணக்கார கோடீஸ்வரருமான யுவான் பாவோஜியாங்கின் சொத்து மதிப்பு 100 பில்லியன் யுவானுக்கும் (13 பில்லியன் டொலர்) அதிகமாக இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. அவரும், கூட்டாளிகள் இருவரும், 2003ம் ஆண்டு வாங்க் ஜிங் என்பவரை கொலை செய்த குற்றத்திற்காக தூக்கிலிடப்பட்டனர்.

போட்டி வர்த்தகரான சிக்ஹூயானை கொலை செய்வதற்காக வாங்க் ஜிங்கை, கூலிக்கு பயோஜிங் அமர்த்தியுள்ளார். ஆனால், கொலை திட்டத்தை நிறைவேற்றுவதில் தோல்வியடைந்த நிலையில், பயோஜிங்கை வாங் பிளாக்மெயில் செய்ததால், அவர் தீர்த்துக்கட்டப்பட்டார்.

நாமும் ஒருநாள் ராஜா

பெரும்பாலான சீன கோடீஸ்வரர்களுக்கு, சமூகப் பொறுப்புணர்வு மிகவும் குறைவாக இருக்கிறது. ''போலியான பொருட்கள் மற்றும் மருந்துகள் பரவ காரணமாக இருப்பது, குழந்தைகள் மற்றும் கொத்தடிமைகளை வேலைக்கு பயன்படுத்துவது போன்றவற்றுக்காக குறைந்தபட்சம் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அவர்களில் ஒரு சிலரின் நடத்தை அரு வெறுக்க தக்கவ கையில் மிகவும் அநீதியாக இருக்கிறது'' என சமூகவி யலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், புதிய கோடீஸ்வரர்கள் பலருக்கு ஈகைக்குணம் என்பது அறவே இல்லை. ''சீனாவில் (மெயின்லாண்ட்) இயற்கையினால் பேரழிவு எதுவும் ஏற்பட்டால், ஹொங்கொங் பணக்காரர்கள் மற்றும் சாதாரண மக்கள் நிவாரண நன்கொடைகளை அளிக்கின்றனர். ஆனால், மெயின் லாண்ட் சீனாவில் வசிக்கும் பணக்காரர்கள் அவ்வாறு நன்கொடை அளிப்பது அரிதான காரியமாக இருக்கிறது. செல்வக்குவிப்பில் ஏற்பட்டுள்ள இடை வெளி, நாட்டில் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்கிறது. பணக்காரர்களின் பேராசை மற்றும் கஞ்சத்தனம் ஆகியவற்றால், அவர்களின் மீது மக்கள் கோபம் கொண்டுள்ளனர்.

நியாயமாக சொல்ல வேண்டுமெனில், அனைத்து கோடீஸ்வரர்களும், மோசடி பேர்வழிகள் அல்ல. மரியாதைக்குரிய சில பணக்காரர்கள், சட்டபூர்வமாக செல்வத்தை குவித்துள்ளனர் என்றும், அவர்களுக்கு சமூக பொறுப்புணர்வும், பிறருக்கு உதவும் ஈகைக்குணமும் இருக்கிறது என்றும் 56.92% சதவீத இளைய சமுதாயத்தினர் கருத்து தெரிவித்துள்ளனர்.

அவர்களுக்கு உதாரணமாக, சென்ஷென் ரியல் எஸ்டேட் வர்த்தகர் வான்கி, வாங் சி, அமெரிக்க தேசிய கூடைப் பந்து அசோஷியேஷன் நட்சத்திரம் யோ மிங் மற்றும் மெங்நியூ குழு தலைவரும், நிறுவனருமான நையூ செங் செங் ஆகியோரை குறிப்பிடலாம். சர்வே மூலம் தெரிய வரும் நல்ல விஷயம் என்னவென்றால், சீன மக்கள், அவர்களின் பிரச்னைகளை உணர்ந்துள்ளனர்.

அவர்களில் பலர் என்றாவது ஒருநாள் தாங்களும் பணக்காரர்களாக ஆவோம் என எண்ணுகின்றனர். புகழ்பெற்ற பணக்காரர்களாகும் லட்சியத்தை அடைந்த பின்னரும் கூட, தங்களின் கொள்கைகளை தக்க வைத்துக்கொள்ள முடியும் என ஒரு சிலர் நம்புகின்றனர்.

கம்யுனிசத்திலிருந்து முதலாளித்துவத்துக்கு ஒரு நாடு மாறும்போது இப்படியான விவகாரங்கள் சகஜம்தான் போலிருக்கிறது



அத்தியாயம் 3

இத்தாலியும் சண்டைக்குள் நுழைகிறது

இந்தக் காலகட்டத்தில் ஜேர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்களின் வெற்றியால் அவை அதிக அளவில் உருவாக்கப்பட்டதுடன், நவீனப் படுத்தவும்பட்டன. ஆனால் நீர்மூழ்கிக் கப்பல்கள் தவிர்த்த மற்றய ஜேர்மன் கப்பல்களின் (கடலின் மேற்பரப்பில் செல்லும் கப்பல் களின்) நிலவரம் கொஞ்சம் சிக்கலில் இருந்தது.

நடவடிக்கைக்குப் பதிலாக நேச நாடுகள் படையெடுப்பி லிருந்து தங்களது கைப்பிடியிலிருக்கும் ஸ்கன்டிநேவியா வைப் பாதுகாக்கும் பணிக்கு இக்கப்பல்களை திருப்பி விட்டது ஜேர்மனி.

இந்தக் காலகட்டத்தில் பிரிட்டிஷ் கடற்படையும் பாரிய இழப்புக்களைச் சந்தித்திருந்தது. விமானந்தாங்கிக் கப்பலான கரேஜியஸ், போர்க்கப்பலான ரோயல் ஓக் உட்பட சில முக்கிய கப்பல்களை பிரிட்டிஷ் கடற்படை இழந்திருந்தது. ஆனால் அதனால் பிரிட்டிஷ் கடற்படை ஒரேயடியாக பலமற்றுப் போகவில்லை. இந்த இழப்பைச்

உலகமகா யுத்தத்தின் உளவுக் கதைகள்

இத்தாலியும் சண்டைக்குள் நுழைகிறது



நோர்வேயைக் கைப்பற்றும் நடவடிக்கையில் ஜேர்மனியின் கடற்படை கணிசமான இழப்புக் குள்ளானது என்று கடந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டி ருந்தோம். அந்த இழப்பு ஒருபுறம் இருக்க, ஸ்கன்டிநேவியக் கடற் பரப்பில் வைத்து பிரிட்டிஷ் வணிகக் கப்பல்களை தாக்க முயன்றபோது, ஜேர்மனி தனது கிராஃப்ஸ்டீ என்ற பெரிய கப்பலையும் பிஸ்மார்க் என்ற போர்க் கப்பலையும் இழக்க நேரிட்டது.

பிஸ்மார்க் போர்க்கப்பலின் இழப்புக் கடும் விளைவுகளை ஏற்படுத்தியது. இந்த இழப்பி னால் ஸ்கன்டிநேவியக் கடற்பரப் பில் ஜேர்மனியின் கடற்படைப் பலம் குறைந்துபோனது.

உடனே ஜேர்மனியின் அனைத்துப் பாரிய கப்பல்களையும் நோர்வே கடற்பகுதிக்கு அனுப்ப உத்தர விட்டார் ஹிட்லர். தாக்குதல்

சமாளிக்கக் கூடிய வகையில் பிரித்தானிய கடற்படை பாரிய அளவில் அமைத்து இருந்தது.

1941ம் ஆண்டு மே மாதத்தில் ரகசிய சங்கேத வார்த்தை களுக்கான *(code words)* மறைபொருளை அறியும் *(Decoding)* சாதனம் ஒன்றை ஜேர்மன் கப்பல் ஒன்றிலி ருந்து பிரிட்டிஷ் கடற்படை கைப்பற்றியது. இந்தச் சாதனம் மூலமாக ஜேர்மன் படையினரின் ரகசிய சங்கேத வார்த்தைகளின் மறை பொருளை பிரிட்டனால் அறிந்து கொள்ள முடிந்தது.

இதனால், ஜேர்மனியின் நீர் மூழ்கிக் கப்பல்களின் கண்ணில்படாமல் பிரிட்டிஷ் கப்பல்கள் கடலில் நடமாடத் தொடங்கின.

1941ம் ஆண்டு கோடைக்



காலத்தில் யுத்தத்தின் போக்கு திரும்பியது. அதுவரை ஜேர்மனியின் பக்கமாக நின்றிருந்த சோவியத் ரஷ்யா, ஜேர்மனிக்கு எதிராகத் திரும்பியது. நேச நாடுகளுக்கு ஆதரவாக சோவியத் யூனியனும் போரில் குதித்தது. ஜேர்மனி சும்மா இருக்குமா? அது ரஷ்யா மீது படையெடுத்தது.

ஜேர்மானியப் படையெடுப்பையடுத்து முதல் சில வாரங்களில் பெரும்பாலான ஆயுதங்களையும், ராணுவத் தளபாட உற்பத்தித் தளங்களையும் சோவியத் யூனியன் இழக்க நேரிட்டது. இந்த இழப்பை ஈடுகட்டுவதற்காக மேற்கத்திய நேசநாடுகள், ஆர்க்டிக் பகுதியில் இருந்த கப்பல்கள் அணியை சோவியத் யூனியனுக்கு அனுப்பின. இக்கப்பல்கள் ஏற்கெனவே ஜேர்மானிய படைகளில் தாக்குதலுக்குள்ளாகிக் கொண்டிருந்த கப்பல்கள்.

அட்லாண்டிக் பகுதியில் செயல்பட்டுக்கொண்டிருந்த ஜேர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் பல, மத்திய தரைக் கடல் பகுதிக்குச் செல்லுமாறு ஹிட்லரால் உத்தரவிடப் பட்டன. பிரித்தானிய நாட்டுக்கான பொருள்களைக் கடல் வழிச்செல்லவிடாமல் தடுப்பதே இந்த உத்தரவின் நோக்கம்.

உடனே மத்திய தரைக்கடல் பகுதியில் வைத்து ஜேர்மானியக் கப்பல்களைத் தாக்க பிரிட்டிஷ் கடற் படைக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது.

மெட்டாக்ஸ் என்ற சாதனத்தின் மூலம் இந்த முயற்சியை ஜேர்மனி முறியடித்துவிட்டது. ஒளிபாய்ச்சும் விமானங் கள் வருவதை முன்கூட்டியே கண்டறிந்து தெரிவிக்கக் கூடிய ராடார் கண்டுபிடிப்புச் சாதனம்தான் இந்த மெட்டாக்ஸ்.

பிரிட்டிஷ் ஒப்பந்தம் மூலமாக இந்தப் பகுதிக்குத் தருவிக்கப்பட்டிருந்த அமெரிக்க நாசகாரிக்கப்பல்கள் நடமாடத் தொடங்கியதாலும் மத்திய தரைக்கடல் பகுதி யில் அமைந்திருந்த துறைமுகங்களின் வெளிச்சங்களை யெல்லாம் அணைத்து இரட்டடிப்புச் செய்யத் தொடங்கி யதாலும், ஜேர்மனிய கப்பல்களின் தாக்குதல்கள் குறையத் தொடங்கின. அப்பகுதியிலிருந்து ஜேர்மனி நீர்மூழ்கிகள் ஆகஸ்டு மாத மத்தியில் மீண்டும் அட்லாண்டிக் மையப் பகுதிக்குத் தங்கள் செயல்பாட்டை மாற்றிக்கொண்டன.

டிசம்பரில், ஜேர்மானிய கடற்படை சோவியத் யூனியனை நோக்கி ஆர்க்டிக் கப்பல்கள் அணியை அனுப்பி வைத்தது. இந்தக் கப்பல் அணியால், ஒரு வணிகக் கப்பலைக்கூட அழிக்க முடியவில்லை. இதனால், ஜேர்மானிய கடற் படைத் தளபதி எரிக் ரேடர் பதவி விலக நேரிட்டது. அவருக்குப் பதிலாக, நீர்மூழ்கிகள் பிரிவுத் தளபதியாக இருந்த கார்ல் டோனிட்ஸ் பொறுப்பேற்றார். இதை யடுத்து, நீர்மூழ்கிகள் தயாரிப்புக்கு ஜேர்மனி முன்னுரிமை கொடுக்கத் தொடங்கியது.

டிசம்பரில் அமெரிக்கா ஐரோப்பாவில் போரில் இறங்கிய போது நீர்மூழ்கிக் கப்பல்கள் தமது கப்பல்களைத் தாக்குவதைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எதையும் அமெரிக்கக் கடற்படை எடுக்க வில்லை. இதனால், அமெரிக்கா ஏராளமான கப்பல்களை இழக்க நேரிட்டது. இதை ஜேர்மானியர்கள் ‘இரண்டாவது மகிழ்ச்சிகரமான நேரம்’ எனக் குறிப்பிட்டனர்.

பிரான்ஸில் பிரெஸ்ட் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த ஜேர்மனியில் பெரிய கப்பல்கள் பல ஆங்கிலக் கால்வாய் வழியாக ஜேர்மனியில் உள்ள தங்கள் தளங் களுக்கு நழுவிச் சென்றுவிட்டன. இதன் மூலம் ஹிட்லரின் முந்தைய கட்டளையை ஜேர்மன் கடற்படை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டது.

ஆனால், இச்சம்பவம் பிரித்தானிய கடற்படையின் பெருமைக்குப் பலத்த அடியாக இருந்தது.

விமானங்களின் ராடர்களால் கண்டறியப்படும் ஜேர்மனிய நீர்மூழ்கிகள் மீது ஒளிபாய்ச்சுவதற்கு நேச நாட்டு விமானங்களுக்கு ஜூனில் அனுமதி வழங்கப்பட்டது.







ஆனால், 1943ம் ஆண்டு ஜனவரியில் எச்.யு.எஸ். ராடாரை பிரித்தானியா உருவாக்கியது. இந்த ராடாரை ஜேர்மனியின் 'மெட்டாக்ஸ்' சாதனத்தால் கண்டறிய இயலாது எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், ஏட்டிக்குப் போட்டியாக பிரிட்டனின் புதிய ராடாருக்கும் 'நாக்ஸோஸ்' என்ற ராடார் கண்டுபிடிப்புச் சாதனம் மூலம் ஜேர்மனி வழிகண்டுவிட்டது. இதனால், எச்.யு.எஸ். ராடாரைப் பயன்படுத்தும் உள்நாட்டு விமானங்களைப் பற்றி பயப்படாமல் ஜேர்மன் போர் விமானங்களால் செல்ல முடிந்தது.

இளவேனிக் காலத்தில் அட்லாண்டிக் போர், நேச நாட்டுப்படைகளுக்கு ஆதரவாகத் திரும்பத் தொடங்கியது. 'கறுப்பு மே' எனக் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில், நேச நாடுகளின் சில கப்பல்கள் கடலில் மூழ்கடிக்கப்பட்டன. ஜேர்மன் கடற்படை தனது நீர்மூழ்கிகளில் 25 சதவீதத்தை இழந்தது. அந்த டிசம்பரில் ஜேர்மன் கடற்படையின் திறன்மிக்க கடைசிக் கப்பலை வடமுனைப் போரில் இழந்தது.

இதிலிருந்து மீள்வதற்கான முயற்சியை ஜேர்மன் கடற்படை எடுக்கவில்லை. அதே நேரத்தில் நேசநாட்டுப் படைகள் தரப்பில் 'லிபேர்ட்டி' கப்பல்கள் பெருமளவில் உருவாக்கப்பட்டன. நீர்மூழ்கிகள் தாக்குதலைச் சமாளிக்கும் போர் உத்திகள் வகுக்கப்பட்டன. தொலை தூரத் தாக்குதல் நடத்தும் திறன் கொண்ட விமானங்கள் மூலம் கடல் பகுதியில் ரோந்து மேற்கொள்ளப்பட்டது.

இவர்களது தொழில்நுட்ப வளர்ச்சியின் எதிரொலியாக, பிரிட்டனுக்குத் தேவையான அத்யாவசியப் பொருட்கள் கடல் வழியே தங்குதடையின்றி வந்து சேர்ந்தன. இப்பொருள்கள் சேமிப்பு நடவடிக்கை 1944ம் ஆண்டு மத்தியில் மத்திய ஐரோப்பாவில் நிகழ்ந்த படையெடுப்பின்போது உதவிகரமாக அமைந்தது.

தெற்கு ஐரோப்பா, மத்திய தரைக்கடல், மற்றும் வட ஆப்பிரிகாவை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது அவசியம் என பிரித்தானிய அரசு கருதியது. அதற்குக் காரணம் சூயஸ் கால்வாய் வழியே கப்பல் போக்குவரத்தை அது நம்பியிருக்க வேண்டிய நிலைதான்.

சூயஸ் கால்வாய் அச்சு நாடுகளின் கையில் சிக்கினாலோ, அல்லது மத்திய தரைக்கடல் பகுதியில் பிரிட்டிஷ் கடற்படை தனது ஆதிக்கத்தை இழக்க நேரிட்டாலோ பிரிட்டன், இந்தியா, அவுஸ்திரேலியா, ஆகிய நாடுகளுக்கிடையிலான கப்பல் போக்குவரத்து 'நன்னம்பிக்கை முனை'யைச் சுற்றித்தான் வர வேண்டியிருக்கும். இதனால் வழக்கமானதைவிட பல ஆயிரம் மைல்கள் சுற்றிச் செல்லும் நிலைமை ஏற்படும்.


இத்தாலி, 1940ம் ஆண்டு ஜூனில் பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் மீது போர்ப் பிரகடனம் செய்தவுடன் பிரித்தானிய கட்டுப்பாட்டில் உள்ள மால்டா தீவை இத்தாலி முற்றுகையிட்டது. இத்தீவு மத்திய தரைக் கடலில் இத்தாலிக்கும் அதன் காலனி நாடான லிபியாவுக்கும் இடையே அமைந்திருந்தது.

1940ம் ஆண்டு ஜூலையில் பிரான்ஸ் ஜேர்மனியிடம் சரணடைந்தபோது பிரெஞ்ச் கடற்படை வட ஆப்பிரிக்காவில் முகாமிட்டிருந்தது. பிரான்ஸ் ஜேர்மனியிடம் சரணடைந்த விஷயம் தெரியவந்தவுடன் பிரெஞ்ச் கடற்படையை பிரிட்டன் தாக்கியது. பிரெஞ்ச் கடற்படை ஜேர்மன் வசம் சிக்கிவிடக் கூடும் என்ற நோக்கில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால், பிரான்ஸ் பிரித்தானிய உறவில் அடுத்த சில ஆண்டுகளுக்குள் கசப்பு நிலவியது.

இந்தத் தாக்குதலுக்குப் பின் நடந்ததுதான் கலாபிரியா போர். நேச நாட்டுக் கடற்படைகளுக்கும், இத்தாலிய கடற்படைகளுக்கும் இடையே நடந்த முதலாவது மிகப்பாரிய போர் இது.

பிரான்சிடமிருந்து அச்சுறுத்தல் வர வாய்ப்பில்லாத நிலையில், ஆப்பிரிக்காவின் மேற்குப் பகுதிகளைப் பாதுகாக்கும் பணியைச் சற்று தளர்த்திக்கொண்டது இத்தாலி. அதன் கவனம், கிழக்கில் பிரிட்டிஷ் காமன் வெல்த் படைகள் மீது திரும்பியது.



ஆகஸ்டு மாதத்தில் ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் ஆதிக்க நாடான சோமாலியா மீது இத்தாலி படையெடுத்தது. அங்கிருந்து பிரிட்டிஷ் காமன்வெல்த் படைகளை வெளியேற்றிவிட்டு, 'இத்தாலியின் கிழக்கு ஆப்பிரிக்காவை' உருவாக்கியது. அதற்கு அடுத்த மாதம் பிரிட்டிஷ் பாதுகாப்பில் உள்ள எகிப்தின் சிறு பகுதியைப் பிடித்ததன் மூலம் வட ஆப்பிரிகாவில் போரைத் தொடங்கியது இத்தாலி. சார்ள்ஸ்-டி-கால் தலைமையிலான சுதந்திர பிரெஞ்ச் படைகள் உட்பட நேசநாட்டுப் படைகள், பிரெஞ்ச் பகுதியில் இத்தாலியின் கட்டுப்பாட்டை நீக்கிவிட்டு, சுதந்திர பிரெஞ்ச் படையை நிலைநிறுத்த முயன்றன.

1940ம் ஆண்டு செப்டெம்பரில் பிரான்ஸ் மேற்கு ஆப்பிரிக்காவை கைப்பற்றும் முயற்சியில் தோல்வி கண்டது. எனினும், நவம்பரில் பிரான்ஸ் மத்திய ஆப்பிரிக்காவை வெற்றிகொண்டது. இத்தாக்குதல் முயற்சிகளுக்கு இடையே, அல்பேனியாவிலிருந்து இத்தாலி தாக்குதல் நடத்தியது. கிரீஸ் நாட்டையும் தாக்கியது.

1940ம் ஆண்டு நவம்பரில் தொடங்கி, நேச நாட்டுப் படைகள் இத்தாலியப் படைகளுக்கு எதிராக அடுத்தடுத்து பல வெற்றிகளைப் பெற்றன. நவம்பர் 12ம் திகதி டொரண்டோ (இது கனடா அல்ல) என்ற இடத்தில் இத்தாலிய கடற்படையை எதிர்த்து நேச நாட்டுப் படைகளின் அனைத்து விமான, கடற்படைகள் தாக்குதல் நடத்தின.

1941ம் ஆண்டு ஜனவரியில் 'இத்தாலியின் கிழக்கு ஆப்பிரிக்கா' மீது பிரித்தானிய காமன்வெல்த் படைகள் தாக்குதலைத் தொடங்கின. இதில் இத்தாலி தோல்வியடைந்தது. பால்கனிலும் இத்தாலி பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கிரேக்க ராணுவம் கிரீஸை விட்டு இத்தாலியரை வெளியேறச் செய்தன. இதையடுத்து தெற்கில் உள்ள அல்பேனியாவில் தேக்க நிலை உருவானது.

இத்தாலியின் தோல்விகளைக் கண்டு உஷாரான ஹிட்லர், தனது படைபலத்தை வலுப்படுத்த உத்தரவிட்டார். பெப்ரவரியில் ஜேர்மனிய படைகளை ஆப்பிரிக்காவுக்கு அனுப்பினார். மார்ச் மாதத் தொடக்கத்தில் பிரிட்டிஷ் காமன்வெல்த் படைத் தலைவர் வட ஆப்பிரிகாவிலிருந்து தனது படைகளை கிரீஸுக்கு அனுப்பினார். ஆப்பிரிக்காவில், ஜெனரல் எர்வின் ரோம்மெல் தலைமையில் இருந்த ஜேர்மனிய படைகள் மார்ச் மாத இறுதியில் பலம் குறைந்து காணப்பட்ட பிரிட்டிஷ் காமென்வெல்த் படைகள் மீது தாக்குதல் தொடுத்தன.

இத்தாக்குதலின்போது ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் ஈராக்கில் ஏற்பட்ட ஆட்சிக் கவிழ்ப்புப் புரட்சியால் தங்களுக்குக் கிடைத்து வரும் எண்ணெய் தடைப்படும் என நேசநாடுகள் அஞ்சின. கிரீஸ் மீதும் யுகோஸ்லாவியா மீதும் ஜேர்மன் படையெடுத்ததும் நேச நாடுகளின் கவலை அதிகரித்தது.

ஏப்ரல் மாத மத்தியில் ஜேர்மனியின் ரோம்மெல் தலைமையிலான படைகள், பிரிட்டிஷ் காமென்வெல்த் படைகளை மீண்டும் எகிப்திலிருந்து விரட்டியடித்தன. டோப்ருத் துறைமுகத்தைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்டார் ரோம்மெல். சில நாட்கள் கழித்து புரட்சி நடந்த ஈராக் மீது பிரிட்டிஷ் படை படையெடுத்து அதைக் கைப்பற்றியது. மே மாத இறுதியில் ஜேர்மன் படைகள் யுகோஸ்லாவியா, கிரீஸ் மற்றும் கிரேட் தீவைக் கைப்பற்றின. இதனால், பிரிட்டிஷ் காமென்வெல்த் படைகள் பால்கனிலிருந்து விலக நேரிட்டது.


ஜூன் 8ம் திகதி பிரிட்டிஷ் காமன்வெல்த் படைகளும் சுதந்திர பிரெஞ்ச் படைகளும் இத்தாலியின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியா மற்றும் லிபியா மீது படையெடுத்தன. பிரிட்டிஷ் காமன்வெல்த் படைகள் சிரியா மற்றும் லிபியா வழியாகச் செல்லலாம், அங்குள்ள ராணுவத் தளங்களைப் பயன்படுத்தலாம் என இத்தாலி காட்டிய சலுகைகளே இதற்குக் காரணம்.

ஒரு வாரம் கழித்து பிரிட்டிஷ் காமென்வெல்த் படைகளின் தளபதி வேவல், மேற்குப் பாலைவனப்பகுதியில் பெரும் தாக்குதல் நடத்தும் எண்ணத்தில் 'பட்டில் ஆக்ஸ்' ராணுவ நடவடிக்கையைத் தொடங்கினார். ஆனால், எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. அப்பகுதியில் இருந்த பிரிட்டிஷ் காமென்வெல்த் படைகளின் டாங்கிகளில் பாதியை இழந்ததுதான் மிச்சம். இத்தோல்வியால் ஆத்திரமடைந்த பிரிட்டிஷ் பிரதமர் சேர்ச்சில் ஜூலை மாத தொடக்கத்தில் வேவலை நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாக கிளாட் ஆச்சின்வேக்கை காமென்வெல்த் படைத் தலைவராக நியமித்தார்.

(தொடரும்)

உலகின் மிகப்பெரிய ஆயுத வியாபாரி உளவுத்துறைகளிடம் சிக்கியது எப்படி?

அத்தியாயம் 44




டிசம்பர் மாதம் 20ம் திகதி சர்வதேச அணுசக்தி ஏஜன்சியின் தலைவரான எல் பரதாய் லிபியாவின் அணுஆயுத தலைவரான மதூக் மொஹம்மது மதூக்கை வியன்னாவில் சந்தித்தார். அப்போது லிபியத் தலைவர் தங்களது கையிலுள்ள சகல அணுஆயுதங்களை அழித்து விடுவதாக உறுதி கூறினார். ஆனால், எப்படி அழிப்பது என்பதில் அமெரிக்காவிற்கும் சர்வதேச அணுசக்தி ஏஜன்சிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

தற்போது லிபியா வெளிப்படையாக தனது தவற்றை ஒப்புக்கொண்டு அதை அழிக்கவும் முன்வருவதால் அவர்களுக்கு அதற்கான உதவிகளை செய்ய வேண்டும் என அணுசக்தி ஏஜன்சி விரும்பியது. ஆனால் அமெரிக்கா இதற்கு ஆதரவளிக்கவில்லை. அப்போதைய அமெரிக்க அணுஆயுத தலைவரான ஜோன் போல்டன் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார். அவர் எல் பரதாய் அணுசக்தி ஏஜன்சியின் தலைவராக மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்படுவதை தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தார்.

தனது தொலைபேசி அழைப்புகளையும் அமெரிக்கா கண்காணிப்பதாக எல் பரதாய் நினைத்தார். ''சொந்த மனைவியிடமும் பிள்ளைகளிடமும் தனியாக தொலைபேசியில் பேச முடியாமல் இருப்பது மிகவும் கொடுமையான விஷயம்''

ஆயினும் இவை அனைத்து ஈரானிய ஒப்பந்தத்தை முறிப்பதற்காகவே செய்யப்பட்டது. மேலும், சர்வதேச அணுசக்தி ஏஜன்சி அணுஆயுத தயாரிப்பின் டெக்னிகல் விஷயங்களில் தலையிடக்கூடாது என வாஷிங்டன் தெரிவித்தது. மேலும், ஏஜென்சியின் முக்கிய தலைவர்கள் இருவருமே அணுஆயுதம் அல்லாத நாடுகளிலிருந்து வருவதால் (எல் பரதாய் - எகிப்து, ஹெநனென் - பின்லாந்து) இருவருமே லிபியாவின் அணுஆயுத வரைபடங்களை பார்ப்பதிலிருந்து அமெரிக்காவால் தடுக்கப்பட்டனர்.

அதாவது அணுஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் ஏஜன்சி



யின் தலைவர்களே தாங்கள் கட்டுப்படுத்தப் போகும் அணுஆயுதத்தின் வரைபடத்தைப் பார்க்க முடியாது.

லிபியா தனது அணுஆயுதங்களை அழிக்கச் சம்மதித்துவிட்டது. சரி. அதை யார் அழிப்பது? யார் மேற்பார்வை பார்ப்பது என்று மகா குழப்பம். யார் எந்த வேலையை செய்யலாம் என்று முடிவு செய்ய லிபியாவின் முக்கிய உளவுத் துறை தலைவர் மூஸா கூஸா, நியமிக்கப்பட்டார். அவரை தமது நாட்டுக்கு இதுபற்றிப் பேச வரும்படி அமெரிக்கா கூறியது. அவரோ அதற்குத் தயாராக இல்லை. இறுதியில் லண்டனில் பேசுவது என்று முடிவானது.


ஜனவரி 19ம் திகதி பிரிட்டிஷ் அதிகாரி வில்லியம் ஏர்மனும், பால்டனும் எல்பரதாயை சந்திக்க வியன்னா சென்றனர். இந்த பேச்சுவார்த்தையின் மூலம் லிபியா தனது அணுஆயுதங்களை அழிப்பதை சர்வதேச அணுசக்தி ஏஜன்சி கண்காணிக்கும் என்றும், அமெரிக்காவும் பிரிட்டனும் லிபியாவிற்கு அணு ஆயுதங்களை அழிக்க உதவி செய்யும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

அதாவது, உண்மையில் அமெரிக்காவும் பிரிட்டனும் அணுஆயுதங்களை அழிக்கும். சர்வதேச அணுசக்தி ஏஜன்சி இதை வேடிக்கை பார்க்க வேண்டும்.

லிபியாவில் இருந்த அணுஆயுத பொருட்களின் மதிப்பை கணக்கிட டிசம்பர் மாதம் சர்வதேச அணுசக்தி ஏஜன்சியின் அதிகாரிகள் சிலர் அங்கு சென்றனர். அந்த குழுவில் எல் பரதாய், ஹெநனென் மற்றும் ஜாக்கஸ் பௌட் ஆகியோர் இருந்தனர். ஜாக்கஸ் பௌட் பிரான்ஸிலிருந்து வருவதால் அணுஆயுத வரைபடங்களை பார்த்தும் நிர்ணயிக்கும் திறனும் உரிமையும் பெற்றிருந்தார்.

ஜனவரி 20ம் திகதி அணுஆயுத அழிப்பு வேலைகள் தொடங்கின. லிபியர்கள் மனதை மாற்றிக் கொள்ளும் முன் முக்கிய ஆயுதங்களை முதலில் அழித்துவிடத் தீர்மானிக்கப்பட்டது. அமெரிக்க அதிகாரிகள் வந்தடைந்த பின்னர் அவர்களிடம் அணுஆயுத டிசைன்கள் ஒப்படைக்கப்பட்டன. இதை பிரிட்டிஷ் அதிகாரி மேற்பார்வையிட்டார்.

டிசைன்கள் ஒரு பிளாஸ்டிக் உறையில் வைக்கப்பட்டிருந்தன. அந்த உறையில் ''த குட் லுக்ஸ் ஃபாப்ரிக்ஸ் அண்ட் டெய்லர்'' என எழுதப்பட்டிருந்தது. இது ஒரு கடையின் பிளாஸ்டிக் உறை. கடை எதுவென்றால் பாகிஸ்தானின் மிகவும் பழமைவாய்ந்த, முக்கிய கடை.



கான் இதன் முக்கிய வாடிக்கையாளர்!

இந்த விஷயம் வெளியே தெரிய ஆரம்பித்தவுடனேயே இந்த கடையின் வாசலில் இருந்த கானின் புகைப்படம் அகற்றப்பட்டது.

ஜாக்கஸ் பௌட்டும் அவரது குழுவும் அந்த டிசைன்களை பார்வையிட்டு அவை உண்மையானது போல் இருப்பதாக தெரிவித்தனர். பிறகு இந்த பேப்பர்கள் சர்வதேச அணுசக்தி ஏஜன்சியின் ஒரு பெட்டியில் வைக்கப்பட்டது.

இவற்றை அமெரிக்காவிற்கு கொண்டு செல்லும் விமானம் பழுதடைந்ததால் புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டது. இந்த காகிதங்களை பாதுகாப்பாக வைத்திருக்க ஒரு அதிகாரியிடம் கொடுக்கப்பட்டிருந்தது. விமானம் தாமதமாகியதில் அந்த அவற்றை தலையிலேயே வைத்துக் கொண்டு தூங்கிவிட்டார். தூங்கிய அதிகாரியிடம் சண்டையிட்டு திரும்ப வாங்கி இவற்றை மற்றுமொரு முறை சரிபார்த்தனர். இவை அனைத்தும் ரகசியமாகவே நடந்தேறின.

மேலும், லிபிய உளவுத்துறை அவர்களது ஒவ்வொரு நடவடிக்கையையும் கண்காணிப்பதையும் அறிந்தே இருந்தனர். ஒரு மிகப்பெரிய தொகைக்கு வாங்கிய அணுஆயுதங்களை விட்டுக்கொடுப்பதால் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பையும் சோதனை செய்யச் சென்ற அதிகாரிகள் அறிந்தே இருந்ததால் அனைத்து விஷயங்களும் ரகசியமாகவே செய்யப்பட்டன.

பிறகு அமெரிக்கா சென்றடைந்த உடனேயே இந்த டிசைன்கள் மிகவும் பாதுகாப்போடு சோதனைக்கு எடுத்து செல்லப்பட்டன. இந்த காகிதங்கள் பிறகு பத்திரிக்கையாளர்களுக்கும் காண்பிக்கப்பட்டன. ஏனெனில், பல செண்ட்ரிப்யூஜ்கள் இன்னமும்


முழுமையடையாமலேயே இருந்ததால், அமெரிக்கா ஒன்றுமில்லாத விஷயத்தை பெரிதுபடுத்தியதாக மக்கள் நினைக்க கூடாது என அவர்கள் விரும்பினார்கள்.

அமெரிக்காவின் அணுஆயுதக்கழக தலைவர் ரொபேர்ட் ஜோசப் ''நாம் எதிர்பார்த்ததை விட இது மிகவும் முன்னேறிய ஆயுதங்களாக உள்ளன'' என தெரிவித்தார். மேலும், அவர்களிடம் காண்பிக்கப் படுவது வெறும் மொடல்களே, லிபியா இன்னமும் தங்களது யுரேனியத்தை முழுமையாக பயன்படுத்த ஆரம்பிக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

கான் கொடுத்த அனைத்துப் பொருட்களையும் உபயோகப்படுத்த லிபியாவுக்கு தொழில்நுட்ப அறிவு போதுமா என்ற கேள்வியும் எழுந்தது. கான் கொடுத்த பல விஷயங்களும் அட்டைப் பெட்டியிலேயே பிரிக்கப்படாமலேயே இருந்தன. ஆயினும் சில பொருட்கள் உபயோகப்படுத்தப்பட்டு ரோட்டர்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

கிடைத்த பொருட்களை வைத்துப் பார்த்தபோது ஒரு விஷயம் நன்றாகப் புரிந்தது: லிபியா கற்பனையிலும் எட்டியிருக்க முடியாத இடத்திற்கு கான் அவர்களை எடுத்து சென்றிருக்கிறார். ஆயினும் அவர்கள் அணு குண்டு தயாரிப்பில் ஈடுபட முன்னரே திட்டத்தைக் கைவிட்டுவிட்டனர்.

அமெரிக்காவின் சொல்லைக்கேட்டு தமது அணு ஆயுதங்களை அழிக்க முன்வந்த லிபியா அதன்மூலம் எதிர்பார்த்த எந்த உதவியுமே கிடைக்காமல் பரிதாபமாக ஏமாற்றப்பட்டது. 2004ம் ஆண்டு முழுவதுமே அமெரிக்கா அவர்களை கட்டுப்படுத்தியது. மார்ச்சில் டோனி பிளேரும் இரண்டு மணி நேர பேச்சுவார்த்தை ஒன்றை லிபியாவுடன் நடத்தினார். கடாஃபி, லிபியாவுக்கு பொருளாதார, அரசியல் மற்றும் ராணுவ



உதவிகள் தேவை என தெரிவித்திருந்தார். ஆயினும், அவரது கோரிக்கை எதுவுமே செயல்படுத்தப்படவில்லை.

போதும் போதாதற்கு, அரேபியக் கூட்டம் ஒன்றில் ஏற்பட்ட பகையால், சௌதி அரேபிய இளவரசர் அப்துல்லாவை கொலை செய்ய லிபியா போட்டிருந்த திட்டம் வெளியில் கசிந்தது. இதனால் லிபியாவின் மேல் இருந்த கட்டுப்பாடுகள் மேலும் இறுகின. 2006 மே வரை இருந்த இதே இறுக்கமான நிலை அதன் பின்தான் இப்போது லேசாக தளர்ந்திருக்கிறது.

லிபியாவின் மூலம் கானின் வியாபார சங்கிலி பற்றி பல முக்கிய காகிதங்களும் கோப்புக்களும் அகப்பட்டன. இதற்குமுன் கிடைத்த விஷயங்களைவிட பல மடங்கு பெரிய விஷயங்கள் தெரியவந்தன. லிபியர்கள் அவர்களாகவே அனைத்து உண்மைகளையும் கூறியதால் இதில் ரகசியத்திற்கும் இடமின்றி போனது.

ஈராக்கில் அணுஆயுதங்கள் உள்ளன என்ற அமெரிக்காவின் அறிக்கையை எதிர்த்த அனைத்து நாடுகளும் தற்போது ஒன்று கூடின. சர்வதேச அணுசக்தி ஏஜன்சி அவர்களுக்கு ஆதரவளித்து அமெரிக்காவை எதிர்த்தது. ஈராக்கின் அணுஆயுதத் தயாரிப்பை நிரூபிக்க, ஒக்டோபர் 2003 முதல் அமெரிக்காவும் பிரிட்டனும் சேர்ந்து கானின் அணுஆயுத வியாபாரச் சங்கிலியை மேலும் ஆராய்ந்தனர். இதில் பலருக்கும் தெரியாத உண்மைகள் பல திசைகளைலிருந்தும் வெளிவந்தன.

கான் மற்றும் அவரது வியாபார சங்கிலிகள் 12ற்கும் மேற்பட்ட நாடுகளில் செயல்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. உண்மையில் அதற்கு மேலும் அவர்கள் செயப்பட்டிருக்கக் கூடும். அணுஆயுத பெருக்கம் உலகில் பெருகுவதை தடுப்பதற்காக அமெரிக்காவால் நியமிக்கப்பட்ட அதிகாரியான ஜோன் வுல்ஃப், தென்னாப்பிரிக்கா, மலேசியா, துருக்கி மற்றும் துபாய் ஆகிய நாடுகளில் இது குறித்த ஆராய்ச்சி மேற்கொண்டார். 2004ன் முதல் நான்கு மாதங்களும் அங்கு கிடைத்த ஆவணங்களை வைத்து துப்பு துலக்கும் வேலை நடந்தது.

''பின்பு நாங்கள் சில நாடுகளுக்கு சென்று கானின் வியாபார சங்கிலியை ரகசியமாக உடைத்தோம். பல நாடுகளுக்கும் அணுஆயுத சம்பந்தப்பட்ட உதவிகள் வழங்கி வருவதைப்பற்றி விவரித்தோம். இந்த வியாபார சங்கிலி எவ்வாறு செயல்பட போகிறார்கள் என்பது எங்களது கவலையல்ல. சம்மந்தப்பட்ட ஒவ்வொரு நாட்டுக்கும், இதுபோன்ற ஒரு ஆபத்தான வியாபார சங்கிலியில் அவர்களது நாடும்



அடங்கியுள்ளது என்பதை தெரிவிப்பதே எங்களது குறிக்கோள். அவர்களுக்கு அது சம்பந்தப்பட்ட சாட்சியங்களையும் காட்டினோம்.

இந்த சங்கிலியை உடைக்க நாங்கள் யோசனைகள் தந்தாலும், அந்தந்த நாடுகளே அவர்களது சட்டத்திற்குட்பட்டு எவ்வாறு இந்த வியாபாரத்தை ஒடுக்குவது என்ற திட்டத்தை தயாரிக்க நாங்கள் வழி செய்தோம். எல்லா நாடுகளுக்கும் நாங்கள் இந்த உதவியை செய்தோம். இதன் காரணமாக அவர்கள் எடுத்த நடவடிக்கையில் எங்களுக்கு புதிய பல தகவல்களும் கிடைத்தன''.

மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூர் இந்த வியாபாரத்தின் தலைநகர் போல செயல்பட்டிருந்தது. ''நாங்கள் செண்ட்ரிஃபூஜ் வரைபடம் ஒன்றைத் தயார் செய்து, அதில், மலேசியாவில் தயாரிக்கப்படும் பாகங்களை சிவப்பு நிறத்தில் குறித்தோம். பின்பு, ஸ்கோமி நிர்வாகத்திடம், அந்த வரைபடங்களைக் காட்டி அவர்கள் தயாரிக்கும் பாகங்கள் எண்ணெய்த் தொழிற்சாலைக்கு எந்த விதத்திலும் பயன்படாது என்றும், அனைத்து பாகங்களுமே அணுஆயுத தயாரிப்பிற்கு மட்டுமே பயன்படும் என்றும் விளக்கினோம்.

மேலும், அந்த பாகங்கள் எதுவுமே துபாய்க்கு செல்லவில்லை. மாறாக லிபியாவிற்கு செல்கின்றன என்பதையும் விளக்கினோம். ஸ்கோமியில் தயாரிக்கப்படும் பாகங்களை மலேசிய அதிகாரிகளின் பார்வையிலிருந்து தப்ப வைப்பதற்காகவே அவர்கள் இவ்வாறு துபாயிலுள்ள எண்ணெய்த் தொழிற்சாலைக்கு ஏற்றுமதி செய்யப்படும் பாகங்கள் எனக் கூறியிருக்கின்றனர் என்றும் தெரிவித்தோம்.

மேலும், இந்த விஷயம் அரசியல் ரீதியாகவும் மிகவும் சிக்கலானதாக இருந்தது. காரணம் மலேசியப் பிரதமரின் மகன் தேவையில்லாமல் இதில் சம்மந்தப்பட்டிருந்தார்.

எங்களுடைய நோக்கம் மலேசியப் பிரதமரின் மகனைப் பிடிப்பதல்லை என்றும், பி.எஸ். தாஹிர் மட்டுமே எங்களது குறி என்றும் அவர்தான் இந்த வியாபாரத்திற்கு முக்கிய பின்னணி என்றும் நாங்கள் தெளிவாகக் கூறி, மலேசிய அதிகாரிகளின் ஒத்துழைப்பைப் பெற்றோம்.

மலேசியாவுடனான எங்கள் பேச்சுவார்த்தை சுலபமாக இருக்கவில்லை. ஏனெனில், மலேசியாவுடனான உறவு இந்த வியாபார சங்கிலியில் முக்கியமானது என்பதால் இது வெளியுலகிற்கு தெரிந்தால் நாட்டிற்கே அவப்பெயர் வந்துவிடும் என மலேசிய அதிகாரிகள் நினைத்தனர்.

தங்களின் நிறுவனம் (ஸ்கோமி) மலேசியாவின் எந்த சட்டத்தையும் மீறவில்லை என மலேசிய அதிகாரிகள் ஒற்றைக்காலில் நின்றனர். அவர்களை ஒருவழியாக செயற்பட வைப்பதற்கு சில மாதங்கள் கஷ்டப்பட வேண்டியிருந்தது. தாஹிர் 2004ம் ஆண்டு மே மாதம் கைது செய்யப்பட்டார்.

ஆயினும், வேறு எந்த நாட்டு விசாரணைக்கும் தாஹிரை ஒப்படைக்க மாட்டோம் என்றும் மலேசியப் பிரதமர் அறிவித்தார். சர்வதேச அணுசக்தி ஏஜன்சிக்கு மாத்திரமே தாஹிரிடம் பேச மலேசிய அரசால் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், அதுவும் அவர்கள் விரும்பிய வண்ணம் பெரிதாக இல்லாமல் மலேசிய அரசின் விருப்பத்தின் பேரிலே எப்போதாவதுதான் அனுமதிக்கப்பட்டது. முதல் 20 மாதங்களில் தாஹிரிடம் இரண்டு முறை மட்டுமே அவர்களால் பேச முடிந்தது.

இரண்டாவது முறை பேசும்போது அவர் முன்னர் தெரிவித்திராத ஈரான் சம்பந்தப்பட்ட வியாபார விஷயங்களைத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

அடுத்த கட்டமாக அமெரிக்க அதிகாரிகள் 2004ல் துருக்கிக்கு பயணித்து, அந்நாட்டு அரசிற்கு அவர்களது நிறுவனங்கள் கானுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றி கூறினார்கள். இதை முக்கியமாக எடுத்துக் கொண்டு துருக்கி அரசு அந்த வியாபாரங்கள் அனைத்தையும் துண்டித்தது. துருக்கிய ஏற்றுமதி அதிகாரிகள் மிகவும் துல்லியமாக பொருட்களை ஆராய்ந்து இந்த வியாபாரத்தை வேரோடு அழிக்க முன்வந்தனர்.

லிபிய ஒப்பந்தத்தில் முக்கிய நபரான குணாஸ் கையர் இதய நோயில் இறந்தார்.

இதைத் தொடர்ந்து ஸ்பெயின் மற்றும் பிரிட்டிஷ் அரசுகளும் தங்களது நாட்டில் நடக்கும் வியாபாரங்களையும் வியாபாரிகளையும் கண் காணிக்கத் தொடங்கினர்.

(தொடரும்)

இரு இலைகள், ஒரு கொழுந்து

ஓங்கி உயர்ந்து நிற்கும் இமாலய மலை எங்குதான் சென்று முடிகிறது என்று தெரியவில்லை. நான் பயணம் செய்து கொண்டிருந்தது ஒரு மாருதி கார். பயணத்தின் வழி கண்ட காட்சிகளில் மேற்கு வங்காளத்தின் மலைப்பகுதிகளின் உயரத்தை மறைக்கும் வண்ணம் வளர்ந்து நின்ற பனை மரங்கள், வெள்ளித்திரை போல போர்த்தப்பட்டிருந்த மேகக் கூட்டங்கள் என அனைத்துக் காட்சிகளும் மனதைக் கரைக்கும் விதமாக இருந்தன.

அதன் பிறகு மலைப் பாதையில் ஊர்ந்த வாகனம் சிப்ரஸ் மற்றும் மூங்கில் மரங்கள் அடர்ந்திருந்த காட்டு வழி பயணத்தைத் தொடர்ந்தது. மலைப் பாதையின் கடின மான ஏற்ற இறக்கங்களில் அந்த வாடகை வண்டி பெரும் இரைச்சலை ஏற்படுத்தியது. ஒரு சில மணி நேர பயணத் தின் முடிவில் மலை உச்சி வந்தடைந்தது.

அங்கிருந்து பார்த்தபோது சிறு கிராமங்கள்கூட இல்லாத அடர்ந்த வனப்பகுதி தெரிந்தது. அங்கிருந்து ஒரு 4000அடி தாண்டி சில மாறுதல்கள் தென்பட்டன.

மலைப்பாதையின் ஓரங்களில் ஏற்ற இறக்கமாக செடிகள் இருந்தன. அவை மேலே அடர்த்தியாகவும் கீழே மெல்லியதாகவும் இருந்தன. பச்சை நிறத் துணியை வித்து விட்டாற்போல் இருந்த அந்த இடத்தில் இடை இடையே சிறு புள்ளிகள் நகர்ந்து கொண்டிருந்தன. அந்த பசுமைப் போர்வையின் இடையே நெளிவு சுளிவான பாதைகளும் இருந்தன.

தேயிலைச் செடிகள் அவை.

பணியாட்கள் கமீலியா சினன்சிஸ் என்று கூறப்படும் தேயிலைச் செடியிலிருந்து இலைகளைப் பறித்துக் கொண்டிருந்தனர்.

ஒரு கோப்பைத் தேனீர் அருந்துவதற்காக இந்தியாவின் கோடியில் இருக்கும் ஒரு பகுதிக்கு இமாலய மலையில் அவ்வளவு தூரப் பயணம் உங்களுக்குத் தேவைதானா என்ற கேள்வி எழும். ஆனால் டார்ஜிலிங் பகுதியில் கிடைக்கும் தேனீரை சும்மா ஒரு பேச்சுக்கு, ''நல்ல சுவையான தேனீர்'' என்று மட்டும் கூறிவிடமுடியாது. அவை உலகில் தலைசிறந்தவையும் கூட.

இங்கு கிடைக்கும் தேயிலைகள் ஏல விற்பனையில் கொல்கத்தா மற்றும் ஷாங்காய் பகுதிகளில் பணத்தைக் குவிக்க வல்லவை. டார்ஜிலிங் கறுப்புத் தேனீர் வகைக ளுக்குப் பெயர் போன ஊர். இங்கேயுள்ள சில வல்லுநர் களைக் கேட்ட பொழுது, டார்ஜிலிங் இந்த தேனீர் மட்டு மின்றிப் பல விதமான பானங்களுக்கும் பெயர்பெற்றது என்பது தெரியவருகிறது.

டார்ஜிலிங் மாவட்டத்தில் 87 தேயிலை எஸ்டேட்டுகள்



இயங்கி வருகின்றன. இப்பகுதி இந்தியாவின் மலைகள் அதிகமுள்ள பகுதியான நேபாளம் மற்றும் பூட்டானுக்கு இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. ஒவ்வொரு இடத்திலும் பல்வேறு வகையான தேயிலைகள் பயிரிடப் படுகின்றன. உலகில் தேனீர் அருந்துபவர்கள் பல்வேறு வகை சுவைகளை விரும்புவதும் இதற்கு ஒரு காரணம்.

இங்குள்ள சிலர் தங்களது பங்களாக்களை சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வாடகைக்கு விடுகின்றனர். ஹோட்டல்களைவிட அவை வசதியாக இருக்கின்றன. சில தேயிலைத் தயாரிப்பாளர்கள் தங்களது தயாரிப்பு முறைகளை, வருபவர்களுக்கு எடுத்துக்கூறி விளக்கமும் தருகின்றனர். பின்னர் பல்வேறு விதமான தேனீரைக் கொடுத்து சுவையின் வித்தியாசத்தை உணரச் செய்கின்ற னர். எந்தத் தொழிட்சாலைக்குப் போனாலும் இறுதியில் தேனீர் கொடுத்தே வழியனுப்பி வைக்கிறார்கள்.

மிகவும் சுவைமிகுந்த தேயிலைக் கொழுந்துகள் அறு வடை செய்யப்படும் முதல் கட்ட அறுவடை மார்ச் மாதம் நடைபெறும். மே மற்றும் ஜூன் மாதங்களில் நடை பெறும் இரண்டாம் கட்ட அறுவடையும் இதே அளவு சுவைமிகு தேயிலைகளைக் கொண்டிருக்கும்.

நான் முதலில் சென்றது மகாய்பரி எஸ்டேட்டுக்கு. இந்த எஸ்டேட் கர்ஸியாங் எனும் ஊரின் தெற்கே அமைந்துள் ளது. கடல் மட்டத்திலிருந்து 1500அடி உயரத்தில் இருக் கிறது. இந்த எஸ்டேட்டை உருவாக்கியவர் ஜி.சி. பனர்ஜி என்பவர். உருவாக்கப்பட்ட ஆண்டு? *1840!*

இந்தியாவில் முதன்முதலாக தேயிலைத் தோட்டங்கள் பெருகிய காலனி ஆதிக்க நேரத்தில் தொடங்கப்பட்டிருக் கிறது. இந்தத் தேயிலைத் தோட்டத்தை அவரது குடும்பத் தார் வம்சாவளியாகப் பராமரித்து வருகின்றனர். (தற் போது தோட்டம் பனர்ஜியின் கொள்ளுப்பேரனான ராஜா என்றழைக்கப்படும் ஸ்வராஜ் பராமரிப்பில் உள்ளது) டார்ஜிலிங் தேயிலையின் வளர்ச்சியில் ராஜாவின் பங்கு அதிகம். இவர் அளவுக்கு அந்த மாவட்டத்திலேயே தேயிலை வளர்ச்சிக்கு உழைத்தவர் எவரும் இல்லை என்கிறார்கள்.

இவர்தான் *1988*ல் தேயிலைத் தோட்டங்களுக்கு இயற்கை உரம் இடும் முறையை அறிமுகப்படுத்தினார். பின்னர் நான்கு ஆண்டுகள் கழித்து தேயிலைத் தோட்டங்களை பயோ டைனமிக்காக மாற்றினார். உலகிலேயே முதலில் இங்குதான் இந்த முறை கடைபிடிக்கப்பட்டது.

பயோடைனமிக் முறையினால்தான் உயர்ரக, விலை அதிகமுள்ள தேயிலைகள் டார்ஜிலிங் தோட்டங்களில் கிடைக்கின்றன. இங்கு கிடைக்கும் மஸ்கடல் எனும் வகை தேயிலை ஏலத்தில் ஒரு கிலோ ஐம்பதாயிரம் ரூபாய்க்கு விலை போகிறது.

இவரது தயாரிப்புகளை பொதுவாக நம்மால் சில்லறை விற்பனைக் கடைகளில் காண முடியாது. ஆனால் இவரது தயாரிப்புகள் அதிகமாக 'டேசோ' என்று பெயரிடப்பட்ட அட்டைப் பெட்டிகளில் காணலாம். (விமான நிலையங் களில் வரியற்ற கடைகளில் கிடைக்கிறது)


ராஜாவைச் சந்திக்கலாமென்று சுற்றுலாப் பயணிகளுக்காக பனர்ஜி கட்டியுள்ள ஆறு பங்களாக்களிலும் தேடிவிட்டுக் கடைசியில் அவர் மகாய்பரி தொழிற்சாலையில் இருப்பது தெரிந்து அங்கு சென்றேன். என்ன விஷயம் என்று கேட்டார்.

''நாங்கள் தேயிலை தயாரிக்கும் முறையைக் காண வேண்டும்'' என்று சொன்னபோது ''அதற்கு நீங்கள் தவறான இடத்திற்கு வந்திருக்கிறீர்கள்'' என்று பதிலளித் தார். ''இந்த இடத்தில் தேயிலை எவ்வாறு தயாரிக்கப்படு கின்றது என்று பார்ப்பதைவிட, தேயிலை எவ்வாறு ரசிக்கப்படுகிறது என்று பார்ப்பதற்குத்தான் வர வேண்டும்'' என்றும் விளக்கம் அளித்தார்.

எதையும் பார்ப்பதற்குமுன் இதை அருந்துங்கள் என்று தேனீர் வரவழைத்துக் கொடுத்தார். அவர் தந்த தேனீர் மெல்லிய நிறத்தில் ஃப்ரூட்டி சுவை கொண்டதாக இருந் தது. நாவை விட்டு நீங்காது இருந்தது அந்தத் தேனீரின் சுவை. இதுதான் நான் எனது தேயிலைத் தோட்டப் பயணம் முழுவதிலும் குடித்த சிறந்த தேனீர்களில் முதன்மையானது.

மகாய்பரியில் தேனீரை ரசிப்பது ஒரு சம்பிரதாயமாகவே நடந்து வருகிறது. நான் அங்கே தங்கியிருந்த ஒவ்வொரு நாளும் காலை 7.30மணிக்கு முதியவர் ஒருவர் எனது படுக்கைக்கு வந்து சுடச்சுட அருமையான தேனீர் கொடுப் பார். வெளியே குளிரில் பல் கிட்டியடிக்கும் கம்பளிப் போர்வையை விலக்காமல் படுக்கையில் அமர்ந்தவாறே அந்தத் தேனீரைப் பருகுவேன்.

பிறகு காலை உணவுக்குப் பின்னரும் ஒருகோப்பை தேனீரைப் பருகிவிட்டு நான் தொழிற்சாலைகளைச் சுற்றிப்பார்க்கக் கிளம்புவேன். பாதை நெடுக ஒரு புறம் முழுவதும் தேயிலைச் செடிகள் நிறைந்திருக்கும். மறு புறத்தில் புத்தமத வழிபாட்டுக் கொடிகள் மிதமான தென்றலில் மெல்லிசைக்கேற்ற நடனம் போல் அசைந்தாடும். பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் ஆரவாரத்துடன்



கையசைத்தவாறே செல்வார்கள். அவர்களை அழைத்துச் செல்லும் பெற்றோர்களில் பெரும்பாலா னோர் மகாய்பரி தோட்டத்தில் பணிபுரிபவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் தங்களது கரங்களைக் கூப்பி ''நமஸ்தே'' என்று கூறுவார்கள்.

மகாய்புரி அலுவலகத்தில் ராஜாவைச் சந்திக்கும்போது மற்றுமொரு கோப்பை தேனீர் கிடைக்கும். தற்போதுள்ள புதிய தொழில்நுட்பமான பயோ டைனமிக்ஸில் துவங்கி தான் தேயிலைத் தொழிலுக்கு வரும் முன்னர் லண்டனில் தன் பிழைப்புக்காக செய்து கொண்டிருந்தவை என்று பலவற்றைப் பேசுவார். அவ்வப்போது அவருடன் தொழிற்சாலையின் 'சுவை பரிசோதனை நிலையம்' சென்று அன்று தயாராகும் தேயிலையின் சுவையைப் பரிசோதித்து விட்டு வருவோம். *Quality control!*

"SFTGFOP" என்று அட்டையிடப்பட்டு சில தேயிலைகள் இருந்தன. அதன் விரிவாக்கம் *(Super - Fine Tippy Golden Flowery Orange Pekoe)*. இவை மிகவும் தரமான வகைத் தேயிலைகள். இவற்றிலிருந்து ஒரு பணியாளர் வெறும் இரண்டு கிராம் சரியாக எடை போட்டு அதனை கொதிக்கும் நீரில் சில நிமிடங்கள் போட்டுப் பின்பு கோப்பையில் ஊற்றி எடுத்து வந்தார்.

வைனைப் போலவே தேனீரையும் பருகிப் பார்த்து சுவை மாறுதல்களைக் கண்டுபிடிப்பது கடினம். ராஜா அதனை முதலில் கையில் எடுத்து நிறம் மற்றும் நறுமணத்தைச் சோதிக்கிறார். அதன் பின்னர்தான் சுவையினை சோதிக்க அதனை மெல்லப் பருகுகிறார்.

அந்தக் கோப்பையை அடியிலிருந்து நன்றாக சுழற்றி அந்தச் சுவையினை ஆவியில் கலக்கச் செய்து பின்பு குடித்தார். இவ்வாறாக ஒவ்வொரு கோப்பையாக சோதித்துப் பார்க்கிறார். பிறகு அவர் இரண்டு மாதிரிகளை என்னிடம் கொடுத்து எது உங்களுக்குப் பிடிக்கிறது என்று கேட்டார். நான் பருகிப் பார்த்ததில் இரண்டுமே முதல் கட்ட அறுவடைத் தேயிலையில் தயாரானது என்று தெரிந்தது. இரண்டாவது பருகிய தேனீரின் சுவையில் ஒரு வித திடம் தெரிந்தது. பிறகு அதனை அவர் பருகிவிட்டு ''அருமை'' என்றார்.

இரண்டாவது பருகிய தேனீரில் பீச் பழத்தின் அண்டர்டோன்கள் இருக்கின்றன. முதலாவதாகப் பருகிய தேனீரில் வெறும் பீச் ஃப்ளேவர் மட்டுமே இருந்தது என்றார். அந்த அனுபவம் மிகவும் அற்புதமாக இருந்தது. தேயிலையைப் பொறுத்தவரை நான் கற்றுக்கொள்ள வேண்டியது இன்னும் நிறைய உள்ளது என்பதை உணர்ந்தேன்.

இதனால் அடுத்த சில நாட்களுக்கு இந்தத் தொழில்நுட்ப நுணுக்கங்களைக் கவனமாகப் பார்க்கத் தொடங்கினேன். முதலில் தேயிலை பறிப்பவர்களை அணுகினேன். அவர்களில் அதிகமானோர் நேபாளத்திலிருந்து இந்தியா வந்து குடியேறியவர்களாக இருந்தனர்.

''நீங்கள் செய்வது என்னவென்று கூறுங்களேன்'' என்று கேட்டதற்கு அவர்களிடமிருந்து வந்த பதில்: ''டுயி பாத், ஏக் சுய்ரொ''

அவர்கள் பறிப்பதைத்தான் இவ்வாறு அழைத்தனர். 'டுயி பாத், ஏக் சுய்ரொ' என்றால் 'இரு இலைகள், ஒரு கொழுந்து' என்று அர்த்தமாம். இவ்வாறு மஞ்சள் கலந்த பச்சை நிறத்திலிருந்த செடிகளில், மெதுசாக ஆனால் வேகமாகக் கையைவைத்து, முற்றல் இலைகளை விட்டு விட்டு, டுயி பாத், ஏக் சுய்ரொ.

பறிக்கப்பட்ட இலைகளை ஆர்தொடாக்ஸ் முறையில் தொழிற்சாலைகளில் இருந்த மாபெரும் யந்திரங்கள் பருகத் தகுந்த தேயிலை இலைகளாக மாற்றுகின்றன. ஆனால் இன்னமும் உங்கள் வீட்டுச் சமையலறைக்கு இந்தத் தேயிலை இலைகள் வர அலுவல் முடியவில்லை.

இதன் பிறகு 16-20 மணி நேரம் கழித்து அவற்றிலிருந்த ஈரப்பதம் காய்ந்தவுடன், அவை ரோலர் யந்திரங்களில் செலுத்தப்பட்டு சுருள்களாக மாற்றப்படுகின்றன. அடுத்தது ஃபெர்மண்டேஷன் எனும் கட்டம். இதில் தான் தேயிலைக்கு ஃப்ளேவர் அல்லது வாசனை கிடைக்கிறது.

இந்த இடத்தில் தரம் பிரித்தல் தொடங்குகிறது. ஒருபகுதி இலைகள் மட்டும் ஃபெர்மண்ட் செய்யப்பட்டு சாதாரண தேயிலைகளாக மாறுகின்றன. அல்லது முற்றிலும் ஃபெர்மண்ட் செய்யப்பட்டு கறுப்புத் தேனீராகத் தயாரிக்கப்படுகின்றன.


பிறகு அவை சூடுபடுத்தப்பட்டு ஃபெர்மண்டேஷன் நிறுத்தப்படுகிறது. அதன் அடுத்த கட்டமாக இலைகள் இறுதித் தரம்பிரித்தலுக்கு உள்ளாகின்றன. அவை அதன் குணத்துக்கேற்ற கிரேட்களில் பிரித்து பைகளில் அடைக்கப்பட்டு சோதனை அறையில் ராஜாவின் மேசைக்கு அனுப்பப்படுகின்றன.

டார்ஜிலிங்கில் இருந்து திரும்பிவரும்போது லுஃப்தான்சா விமானத்தில் உணவுக்குப் பின் தேனீர் வேண்டுமா என்று கேட்டார்கள். வேண்டாம் என்று கூறிவிட்டேன்.



ஈராக்கில் ராணுவ ரோபோக்கள்

அமெரிக்கா, தனது தொழில் நுட்ப வளத்தை போர்முனையில் அட்டகாசமாகப் பயன்படுத்துகிறது. முன்னேறிய அறிவியல் ஆராய்ச்சியும், வளர்ந்த தொழில்நுட்பமும் இதற்குக் காரணம். அதைவிட, தனது முன்னாள் பனிப் போர் காலத்து எதிரியான சோவியத் ரஷ்யாபோல, மிகப் பிரம்மாண்டமான படை பலம் இல்லாததை ஈடு செய்யவும், அமெரிக்காவின் விருப்பத்துக்குரிய யுத்த உபகரணமாக விஞ்ஞானம் பயன்படுத்தப்பட்டது.



ஈராக் இதற்கு விதிவிலக்கல்ல.

முன்னாள் அமெரிக்க பாதுகாப்புத் துறைச் செயலர் டொனால்ட் ரம்ஸ்ஃபீல்டின் முயற்சியில், உயர் தொழில்நுட்ப உதவியுடன் கூடிய ராணுவப் பிரிவு ஈராக்கில் நிறுத்தப்பட்டது. ஈராக்கிற்குள் அமெரிக்கப்படைகள் நுழைந்த வேளையில் இருந்தே, மிக நவீன ஆயுதங்கள் இறக்கி விடப்பட்டன. கண்ணி வெடியில் சிக்காத டாங்க்குகள், 'ப்ரீடேட்டர்' போல ஏவுகணைகளை அனுப்ப வல்ல விமானியற்ற விமானங்கள், செயற்கைக் கோள் வழிநடத்தும் தாக்குதல்கள் போன்று அடுத்த தலைமுறைத் தொழில்நுட்ப ஆயுதங்கள்.

இன்றைய தினத்தில் ஹைலைட் ஈராக் போரில் உபயோகப்படுத்தப்படும் ரோபோக்கள்தான்.

தரைத் தள ராணுவ ரோபோக்கள் தயாரிப்பிற்கென, 2006ம் ஆண்டிலிருந்து 2012க்குள், அமெரிக்க அரசு சுமார் 1.7 பில்லியன் டொலர்கள் செலவழிப்பதாகத் திட்டம். 160 நிறுவனங்கள் சேர்ந்த குழுமம் ஒன்று, அமெரிக்கக் காங்கிரஸின் நிதி உதவியுடன் இத்திட்டத்தைச் செயல்படுத்தவிருக்கிறது என்று பாதுகாப்பு ரோபோக் களுக்கான தேசிய மையம் தெரிவிக்கிறது.

அமெரிக்க ராணுவம் ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும், ஆயிரக்கணக்கான ரோபோக்களை யுத்தகளங்களில் இறக்கி விட்டிருக்கிறது. அதில் குறிப்பிடத் தக்கது, ஐ-ரோபோ என்ற நிறுவனம் தயாரித்துள்ள, 19 கிலோ எடையுடைய, பக்போ ரோபோ. இதே நிறுவனம்தான் வக்யூம்-கிளீனிங் செய்யும் 'ரூம்பா' ரோபோவைத் தயாரித்து விற்பனை செய்கிறது.

பக்போ ரோபோ யுத்தக் களங்களில், ஒரு குட்டி டாங் போலவே செயல்படுகிறது. பக்போவால், படியேற முடியும், குகைக்குள் செல்ல முடியும், வீடியோ கண்களால் மூலைகளில் எட்டிப் பார்க்க முடியும். எதிரிகளிடமிருந்தும், பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் வெடி குண்டுகளிடமிருந்தும், வீரர்களைக் காப்பாற்ற முடியும்.

ஐ.இ.டி என்று கூறப்படும் வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து அழிக்க இந்த பக்போ ரோபோக்கள் பயன்படுத்தப்பட்டன. பாதுகாப்புப் பணிகளுக்காக அணிவகுத்துச் செல்லும் வாகனங்கள் இந்த ஐ.இ.டி.களில் சிக்காமல் காக்க இந்த வகை ரோபோக்களை அமெரிக்கா 2004ம் ஆண்டு ஈராக்குக்கு அனுப்பியது. அந்த சமயத்தில் இந்த ஐ.இ.டி.க்கள்தான் ராணுவத்துக்குப் பெரும் தலைவலியைக் கொடுத்து வந்தது. அப்போது அமெரிக்காவிலிருந்து ஈராக்குக்கு ராணுவப் பணிக்காக ரோபோ சாதனங்களான 10 மேடில்டாஸ்கள், 22 பக்போகள், 58 வேங்கார்ட்கள், 43 டலான்கள், 20 சிறிய வகை ஆண்ட்ராஸ் சிஸ்டம் போன்றவை அனுப்பப்பட்டன. மெஸா ரோபாடிக்ஸ் எனும் நிறுவனம் மேடில்டாஸ்களைத் தயாரிக்கின்றது. கனடாவிலுள்ள இ.ஓ.டி பெர்ஃபோர்மன்ஸ் நிறுவனம் வேங்கார்ட்களைத் தயாரிக்கிறது.

ஃபாஸ்டர் மில்லர் நிறுவனம் டலான்களையும், நோர்த் ரொப் க்ரம்மன் நிறுவனம் சிறிய ஆண்டாஸ்களையும் தயாரிக்கின்றன.

இந்த ராணுவ ரோபோக்கள் வெடிகுண்டுகளைக் கண்டு பிடித்து அதனை அழிப்பதற்காகவே பயன்படுத் தப்படு கின்றன. இதன் உள்கட்டமைப்பில் ''டிஸ்ரப்டர்'' எனும் கருவி பொருத்தப்பட்டுள்ளதால் அந்த வெடிகுண்டுகள் காற்று அல்லது நீர் பட்டால் வெடிக்கும் வண்ணம் வடி வமைக்கப்பட்டிருந்தாலும் அதனை அழித்துவிடும் திற னுள்ளதாக இவை உள்ளன.

சட்டலைட் ஒன்றின் கட்டுப்பாட்டில் இயங்கக்கூடிய ரோபோக்கள் வடிவமைக்கப்படும்வரை இந்த வகை சிறிய ரோபோக்களைப் பயன்படுத்த ராணுவம் திட்ட மிட்டுள்ளது. சட்டலைட் கட்டுப்பாட்டில் இயங்கக்கூடிய ரோபோக்கள் மிகவும் சிறிய வகையில், அளவான எடையில், இரு மனிதர்களால் துக்கிக் கொண்டு சுமார் 500மீட்டர்கள்வரை மலைப்பாதையில் ஏறக்கூடிய அள வுக்கு வடிவமைக்கப்படத் திட்டமிட்டுள்ளது.

அடுத்ததாக ஈராக்கில் இலகு ரக ரோபோக்களான ''த்ரோபோட்''கள் பயன்படுத்தப்பட்டன. முதலில் இது 2004 ஈராக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கப்பல் படைக் கப்பல்களில் பயன்படுத்தப்பட்டன. இந்த ரோபோக்கள் வெறும் 30 சென்டிமீட்டர் நீளமும் அகலமும் கொண்டு 4 கிலோ எடை மட்டுமே கொண்டவை. இதனை கட்டி டங்களின் ஜன்னல்களிலும், மாடிப்படிகளிலும், சுவர்க ளிலும் வீசலாம். தரையிலிருந்து 12.5 சென்டிமீட்டர்கள் உயரமே கொண்ட இந்த ரோபோக்கள், கட்டப் பகுதியில் எறியப்படும்போது, எப்படிச் சென்று தரையிலில் ஒட்டு கிறதோ அப்படியே இயங்க ஆரம்பித்து விடுகிறது.

ஈராக்கில் உள்ள அமெரிக்கப்படைகள் துப்பாக்கிகள் ஏந் திய ரோபோக்களைப் பயன்படுத்துவதாக தேசிய பாது காப்புப் பத்திரிக்கை இந்த மாதம் செய்தி வெளியிட் டுள்ளது. ஸ்வார்ட்ஸ் (SWORDS) என்று அழைக்கப் படும் இவ்வகை ரோபோக்கள் ராணுவ வீரர்களால் ரிமோட் முறையில் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்த ரோபோக் கள் எம்-249 வகை துப்பாக்கிகள் ஏந்திப் போரிட வல்லது. ஆனால் இதுவரை ஸ்வார்ட்ஸ் வகை ரோபோக்கள் போரில் பயன்படுத்தப்பட்டதாகத் தகவல் இல்லை.

இந்த அனைத்து ரோபோக்களிலும் பொதுவான ஒரு ஒற் றுமை என்னவென்றால் எந்த ரோபோவுமே தானி யங்கியாக வடிவமைக்கப்படவில்லை. இவை அனைத் தையும் எங்கோ ஒரு மூலையில் இருந்து கொண்டு மனிதன் கட்டுப்படுத்தும் வகையிலேயே வடிவமைக் கப்பட்டுள்ளது.

ஆனால் இது வெகுவிரையில் மாறலாம். கடந்த வெளி வந்த மிலிட்டரி லொஜிஸ்டிக்ஸ் இதழில் டேர்மினேட்டர் வகை தானியங்கி செயல்பாடு கொண்டு எங்கு, எவரை, எப்போது கொல்ல வேண்டும் என்று முடிவெடுக்கும் அளவு திறன் கொண்ட ரோபோக்களைத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக எழுதப்பட்டிருந்தது. வரும் 2015 க்குள் தரைப்படையில் மூன்றில் ஒரு பங்கு ஆளில்லா சாதனங்கள் (ரோபோக்கள்) பயன்படுத்த போவதாக அமெரிக்கக் காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது.

இது பாதுகாப்புப் பிரச்சினை குறித்துப் பெரும் சர்ச்சை யைக் கிளப்பியுள்ளது. சர்வதேச போர் முறைச் சட்டங் கள் தானியங்கி ரோபோக்களைப் பயன்படுத்தக் கூடாது என்றும் அவற்றை ஏதேனும் ஒரு வீரர் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்றே கூறுகிறது. ஆனால் புதிய தலைமுறை ரோபோக்கள் தானியங்கியாக செயல்பட்டு இலக்கைத் தானே தேடியழிக்கும் வகையிலேயே வடிவ மைக்கப்பட இருக்கிறது.

இதற்குக் 2002ம் ஆண்டே அமெரிக்கா புதிய விளக்கம் தந்தது. அதாவது போர் முனையில் மனிதர்கள் நீக்கப்பட்டு அவர்களது உயிரிழப்புக்களை இதன் மூலம் தடுக்கலாம் என்பதுதான் அந்த விளக்கம்.

''போர் முனையில் இந்தத் தானியங்கி ரோபோக்கள் குறி வைப்பது மனிதர்களை அல்ல, அவர்களது ஆயுதங் களைத்தான்'' என்றார் அமெரிக்கக் கப்பல் படையில் மூத்த பொறியாளரான ஜோன் எஸ்.கேனிங். ''உதார ணமாக அந்த ரோபோ முன் ஏ.கே.47 ரக துப்பாக்கியுடன் ஒருவர் தோன்றினால் ரோபோ ரோபோ அவரது ஆயு தத்தையே அழிக்கும் என்றார்.

நடைமுறையில் செயற்படும்போதுதான் இது எந்தளவுக்கு உண்மை என்று தெரியவரும்.



அத்தியாயம் - 23

விடுதலைப் புலிகளின் தலைவர் எழுதிய கடிதத்தில் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரை, இந்தியப்படையின் தவறான காரியங்களுக்கு எதிராக, தமிழகத்தில் ஒரு பெரிய பேரணி நடத்தும்படி கேட்டிருந்தார். இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் முடிந்திருக்கும் பலகாலப் பிரச்சினைகளை வரிசைப்படுத்தி, முதல்வர் எம்.ஜி.ஆருக்கு அனுப்பி வைத்திருந்தார். இந்தியாவுடன் போராடும் நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம் என்று எழுதியிருந்தார். கடும் பாதுகாப்பு வளையத்துக்குள் இருந்து எழுதிய அவர், இந்தியா மிகப் பெரிய நாடு, அதன் ராணுவத்தின் வலிமையை உலகம் அறியும், இந்திய ராணுவத்தை எதிர்த்துப் போராடுவது மிகவும் கடினமானது என்று தனக்குத் தெரியும் என்று எழுதியிருந்தார்.





இந்தியாவின் வியட்நாம்

இந்திய ராணுவத்தினர் தங்களை யுத்த களத்தில் அழித்து விடுவது என்று உறுதியுடன் செயல்படுவதாகவும், ஆனால், எந்நிலையிலும் இந்திய ராணுவத்தால் புலிகளை ஜெயிக்க முடியாது என்றும் எழுதியிருந்தார். எங்களுடைய போராளிகள் 1000 பேரைக் கொன்றால், அதைவிடப் பல மடங்கு அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுவிடுவார்கள். ஏனென்றால், புலிகள் மக்களிடம் இருந்து வந்த மக்கள் இயக்கம். எங்களை மக்களிடமிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. ஆனால், இந்தியா எமது மக்களுக்கு எதிரான யுத்தத்தில் இறங்கியுள்ளது என்று எழுதியிருந்தார்.

தமிழீழ மக்களுக்கு எதிராக விளைவிக்கப்பட்டிருக்கும் அநீதிக்கு எதிராக இந்தியத் தமிழ் மக்கள் வெகுண்டெழ வேண்டும், அவர்கள் தலையிட்டுப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும், இந்தியத் தமிழ் மக்கள் மனது வைத்தால் இலங்கையில் தமிழர்களின் பேரழிவுக்கு ஒரு விடிவுகாலம் பிறக்கும் என்றும், தமிழ் மக்களுக்கு இதனை எடுத்துக்கூறி அங்கு ஒரு மாபெரும் எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யுமாறும் அக்கடிதத்தின் மூலம் பிரபாகரன் கேட்டுக்கொண்டார்.


ஆனால் அந்தக் கடிதத்துக்குப் பதிலே இல்லை.


அடுத்த இரண்டு மூன்று நாட்களில் புலிகளின் தலைவர் மற்றுமோர் கடிதம் எழுதினார். இந்தக் கடிதம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதப்பட்டது. இந்திய ராணுவத்தைத் திரும்ப அழைத்துக்கொள்ளுமாறு அதில் எழுதியிருந்தார். ராணுவ நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளாவிட்டால் கடும் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்று எழுதியிருந்தார்.

அதற்குப் பதில் ஏதும் வராமல் போகவே, அடுத்த கடிதம் சற்று கடுமையான வார்த்தைகளால் எழுதப்பட்டது.

இக்கடிதத்தில் இந்திய வீரர்கள் சிலரைச் சிறைப் பிடித்து வைத்திருப்பதாக எச்சரிக்கப்பட்டிருந்தது. அமைதி உண்டாக்குவதற்காக வந்த இந்தியப் படை, தேவையற்ற போரில் இறங்கி, இங்கு 150 தமிழ் ஈழ மக்களைக் கொன்று குவித்தும், 500க்கும் மேற்பட்டோரைக் காயப்படுத்தியும்

உள்ளது என்று எழுதியிருந்தார்.





இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில், இலங்கையில் அமைதி காப்பதற்கும், மக்கள் நலம் பேணுவதற்குமே இந்தியப் படைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்று ராஜீவ் காந்திக்குப் புலிகளின் தலைவர் நினைவுபடுத்தினார். தமிழ் மக்களின் பேராதரவின் பின்னணியில் இயங்கி வரும் இயக்கத்துக்கு எதிராகப் போர் செய்ய அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்றும், மக்களைத் துப்பாக்கி முனையில் நிறுத்தி, தான் நினைத்ததை முடிக்கும் அரசு உண்மையான குடியரசு அல்ல, இந்தியா போன்ற குடியரசு நாட்டுக்கு இது அழகல்ல என்றும் கூறியிருந்தார். எனவே தமிழர்களின் இயக்கமான விடுதலைப் புலிகள் இயக்கத்தை நசுக்கப்பார்ப்பது நல்லதல்ல என்றும், ராணுவ நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு மீண்டும் கூறியதோடு, மக்களின் அமைதிக்காகப் போராடும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதத்தில் இருந்த கடுமையான வார்த்தைகள் இந்தியப் பிரதமருக்குப் பிடிக்காது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். இந்திய ராணுவத்தின் நடத்தை குறித்துக் கடுமையான வார்த்தைகளில் எழுதியிருந்த புலிகளின் தலைவர் இந்தியப் படைகளுக்கும், இலங்கைப் படைகளுக்கும் வித்தியாசம் ஏதும் இல்லை என்று கூறியிருந்தார். முடிவாக இந்திய ராணுவம் அதே நிலையைத் தொடர்ந்தால், விடுதலைப் புலிகளின் படை இந்திய ராணுவத்தை எதிர்த்து வெல்லும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

புலிகளின் தலைவர் இலங்கையிலுள்ள நிலை குறித்து இந்தியப் பிரதமரிடம் கடிதப்போக்குவரத்து நடத்திக் கொண்டிருந்த அதே வேளையில், இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் புலிகளின் கொரில்லாப் படை இந்திய ராணுவத்தை அழித்துக்கொண்டிருந்தது.

இது நடந்த காலப்பகுதிக்கு சற்று முன்புவரை யாழ்ப்பாணத்தை விடுதலைப்புலிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். சிவில் நிர்வாகமும் ஏறக்குறைய புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இயங்கியது விடுதலைப்புலிகளை யாழ்ப்பாணத்திலிருந்து அகற்றி விட்டு மீண்டும் அரசு நிர்வாகத்தை அங்கே ஏற்படுத்தித் தரும்படி இலங்கை அரசாங்கம் இந்திய ராணுவத்தைக் கோரியிருந்தது.

இது இரு நாடுகளுக்குமிடையிலான கொஞ்சம் ரகசியமான விவகாரமாகக் கருதப்பட்டு அது பற்றி வெளிப்படையாகப் பேசுவதை இரு நாடுகளுமே தவிர்த்திருந்தன. காரணம், இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு இந்த நடவடிக்கை விரோதமானது.

இந்திய ராணுவம் இலங்கை சென்றது அமைதிப்படை என்ற பெயரில். அமைதிப்படையின் நடவடிக்கைகளில் எதிரெதிர் தரப்பிலிருக்கும் புலிகள், மற்றும் இலங்கை அரசில், எந்தத் தரப்புக்கும் சார்பாக நடந்துகொள்ள முடியாது. ஒரு தரப்பு தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பிரதேசத்தைப் பறித்து, மற்றய தரப்பிடம் கொடுக்கவும் முடியாது.

ஆனால் இந்திய அமைதிப்படைக்கு அப்படியான நடவடிக்கையைச் செய்யும்படி டெல்லி உத்தரவிட்டிருந்தது.

இந்திய கப்பல்படையின் சிறப்புப் பிரிவு *(IMSF)* யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளை அகற்றும் ரகசிய நடவடிக்கையில் முக்கியப் பங்காற்றியது. இந்தப் பிரிவு மேற்கொண்ட நடவடிக்கைக்குக் 'சிறப்பு ஒப்பரேஷன் கோட்டை' *(Special Operation Fort)* எனப் பெயரிடப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் இந்திய ராணுவம் இருந்த காலத்தில் இந்த ஒப்பரேஷன் பற்றி இந்தியத் தரப்பிலிருந்து யாரும் மூச்சு விடவில்லை. இலங்கை அரசும் இப்படித் தங்களுக்கு இந்தியாவுடன் ஒரு டீல் இருப்பதாகக் காட்டிக்கொள்ளவில்லை. ஜே. ஆர். ஜெயவர்தனவும் இந்தியத்தூதர் டிக்சிட்டும் செய்துகொண்ட வாய்வழி ஒப்பந்தம் இது என்பதை, இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து அகன்ற பின்னர்தான், இந்திய ராணுவ அதிகாரி ஒருவர் வெளிப்படுத்தினார்.

எட்டு மாதங்களுக்கு முன்னர்தான் இந்தப் பிரிவு *(IMSF)* மிகவும் ரகசியமாக அமைக்கப்பட்டிருந்தது. அதன்பின்

எந்தவித நடவடிக்கையிலும் இந்தப் படைப் பிரிவு பயன்படுத்தப்படவில்லை. ஆனால், யாழ்ப்பாணத்தில் புலிகளைத் தாக்குவது என்று இந்திய ராணுவம் முடிவெடுத்து செயலில் இறங்கியதும், இந்தப் பிரிவின் செயற்பாடு மிக அதிகமாக இருந்தது.



இராணுவத்தின் தரைப் படையினர் எளிதாக முன்னேறிச் செல்வதற்கு வசதியாக அனைத்து ஏற்பாடுகளையும் செய்து இருந்தனர். அதனடிப் படையில் இந்திய ராணுவத்தின் தரைப் படையினர் முன்னேறிச் சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் குருநகர் கடற்கரையின் ஷெட்டியில் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களும், வெடிப் பொருட்களும் விநியோகம் செய்யப்படுவதைத் தடுக்கும்படி இப்பிரிவுக்கு முதலாவது அசைன்மென்ட் கொடுக்கப்பட்டது. இந்திய கடற்படையின் இந்தச் சிறப்புப் பிரிவு அமெரிக்காவின் 'யு.எஸ். சீல்ஸ்' படைப் பிரிவை போல முப்படைகளிலும் உருவாக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப்படையின் தரைப்படையினர் விடுதலைப்புலிகள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்திக் கொண்டு இருந்தனர். அப்போது, காங்கேசந்துறைத் துறைமுகத்திலிருந்து சில மைல் தொலைவில் இந்தியக் கடற்படையின் ஜெமினி கப்பல் நிலைநிறுத்தப்பட்டிருந்தது. இதிலிருந்து அனுப்பப்பட்ட ராணுவத்தினரே கடலில் நகரும் புலிகளின் படகுகளைத் தாக்கினர். விடுதலைப் புலிகளின் விரைவுபடகுகள் பிரிவையும் குண்டு வீசி தகர்த்தனர்.

அதன்பின் மீண்டும் தங்கள் கப்பல் தளத்துக்குத் திரும்பி எதுவும் நடக்காதது போல இருந்துவிட்டனர். தாக்கியது இலங்கைக் கடற்படை என்பதுபோல ஒரு தோற்றம் ஏற்படுத்தப்பட்டது.

இந்திய கடற்படையின் சிறப்புப் பிரிவு ஆட்கள் இதேபோல தொடர்ந்து சில நாட்கள் விடுதலைப் புலிகளின் மீதமிருந்த பல படகுகளைத் தாக்கி அழித்தனர். அதன்பின் இந்திய ராணுவத்தின் தரையிலிருந்த ராணுவத்தினருடன் கூட்டாகச் செயல்பட்டு அதிரடியாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்திய விமானப்படையின் விமானத்தில் பறந்து சென்று யாழ்ப்பாணம் கோட்டைக்குள் வானிலிருந்து குதித்து நுழைந்து முற்றுகையிட்டு, கோட்டையை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அப்போது யாழ்ப்பாணம் கோட்டைக்கு வெளியே சாலைகளில் புதைத்து வைத்திருந்த கண்ணி வெடிகளை விடுதலைப் புலிகள் வெடிக்கச் செய்தனர். இருந்தபோதும் இந்தியக் கடற்படையின் சிறப்புப் பிரிவினர், இந்திய

பின்னாட்களில், இது குறித்து இந்திய ராணுவ அதிகாரி தேபிந்தர் சிங் கூறுவதைப் பாருங்கள். ''விடுதலைப் புலிகளிடம் பயிற்சி பெற்ற நீச்சல் வீரர்கள் இருந்திருந்தால், அவர்கள் நிச்சயம் இந்தியக் கப்பலையும், கப்பற் தளத்தையும் தாக்கியிருப்பார்கள். இந்தியக் கடற்படையின் விசேட பிரிவு ஆட்டம் கண்டிருக்கும். இந்த அச்சம் இந்திய அமைதிப் படையினரிடம் இருந்தது. இந்தியச் சரக்குக் கப்பல் போக்குவரத்தில் ஏதாவது ஒரு சரக்குக் கப்பல் சென்னை துறைமுகத்தில் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டிருந்தால், இந்திய அமைதிப்படைக்குப் பொருள்கள் விநியோகம் செய்வது கண்டிப்பாக தடைப்பட்டிருக்கும்.

அன்று மாலையே நான் கிழக்குக் கடற்படைப் பிரிவினரைத் தொடர்பு கொண்டு பேசினேன். அவர்களிடம் பயிற்சி பெற்ற டைவிங் வீரர்கள் உள்ளதால் அவர்களைத் தொடர்பு கொண்டு வீரர்களைப் பெற முயன்றேன். புலிகள் நீரடியே வந்து இந்தியக் கப்பல்களைத் தகர்க்கலாம் என்ற அச்சத்தில் செய்யப்பட்ட ஏற்பாடு இது.

ஒக்டோபர் 1ம் திகதி, காங்கேசந்துறைத் துறைமுகத்தில் 54வது தரைப்படை டிவிசனும், திரிகோணமலையில் 340வது இன்டிபென்டன்ட் இன்பேன்ட்ரி பிரிகேடும் இருந்தன. அவர்களைத் தவிர மேலும் சில படை வீரர்கள் தயாராக நிறுத்தப்பட்டிருந்தனர். புலிகள் இந்தியக் கப்பல்களைத் தாக்க முயன்றால் இந்தப் படைப்பிரிவுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மேஜர் சங்கர் பாதுரி மற்றும் மேஜர் ஜெனரல் அப்சர் கரீம் ஆகியோர் எனக்குக் கூறினார்கள்.

திரிகோணமலை, யாழ்ப்பாணம், வவுனியா போன்ற இடங்களுக்கு அனுப்புவதற்காக இந்திய ராணுவ வீரர்கள் தயாராக நிறுத்தப்பட்டிருந்தனர். இந்தப் படையினர் போதுமானதாக இல்லை. வழமையாக இதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்கத் தேவையான விகிதத்தைவிடச் சற்று குறைந்தே காணப்பட்டனர். புனேயில் உள்ள இந்திய ராணுவ என்ஜினியரிங் கல்லூரியில் இருந்து, தயாரித்து அளிக்கப்பட்ட இலங்கையின் வரைபடங்கள்

எங்களுக்குத் தேவையான விபரங்களுடன் இருக்க வில்லை. வரைபடத்தில் இல்லாத பாதைகள் பலவற்றில் புலிகள் நடமாடிக் கொண்டி ருந்தார்கள்.



இந்தக் கட்டத்தில்தான் விடு தலைப்புலிகளின் வலிமை மற்றும் எண்ணிக்கையை இந்திய கொமாண்டர்கள் கொஞ்சம் கொஞ்சமாக அறிந்து கொண்டனர். கை எறி குண்டுகள், பீரங்கி டாங்கிகள், அவற்றிற்கான வெடிப் பொருள்களை விடுதலைப் புலிகள் ஏராளமாக வைத்திருந்தனர். விடுதலைப் புலிகள் தயாரித்த விமானம், கிளைடர் விமானம் ஆகியவற்றையும் இந்திய அமைதிப் படையினர் கைப்பற்றி இருந்தனர். அவை தொலைதூரம் பறக்கும் நிலையில் இருக்கவில்லை என்ற போதிலும், புலிகளின் தொலைநோக்குத் திட்டங்கள் அவற்றின்மூலம் இந்தியப் படையினருக்குப் புரியவந்தது.

விடுதலைப்புலிகள் சொந்தமாக ஆயுதங்கள் தயாரித்துக் கொண்டதும், அதை எளிதாக இயக்குவதற்கும் போதிய அளவு பயிற்சி பெற்றிருந்தது மிகவும் அபாயகரமாக கருதப்பட்டது. இந்த ஆயுதங்கள் மிகுந்த பிரமிப்பை இந்திய ராணுவத்தினருக்கு ஏற்படுத்தின. ஏனென்றால் எந்தவொரு நாட்டின் ராணுவத்தினரும் இந்த அளவுக்கு சக்தி வாய்ந்த ஆயுதங்களைச் சொந்தமாகத் தயாரிப்பதில்லை. ஆனால், ஒரு போராளிகள் அமைப்பு இந்த அளவுக்கு சக்தி வாய்ந்த ஆயுதங்களைத் தயாரித்திருந்தது இந்தியப் படையினருக்கு மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

இலங்கையில் இந்திய அமைதிப்படையினர் இருந்த காலம் முழுவதும், விடுதலைப் புலிகளுக்கு தமிழகத்திலிருந்து முழு உத விகள் கிடைத்தன. தமிழகத்தில் பலமான பின்தளம் ஒன்றைப் புலிகள் அமைத்திருந்தனர். இந்தப் பின்தளம் இலங்கையில் புலிகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய ராணுவத்துக்குப் பெருத்த பின்னடைவாக இருந்தது.



இந்தச் சூழ்நிலையில் போர் தவிர்க்க முடியாதது என்பதை றோ மற்றும் ஐ.பி. நன்றாகப் புரிந்துகொண்டது. உளவுப் பிரிவின் இயக்குனர் எம்.கே.நாராயணன் (தற் போது இந்தியாவின் பாது காப்புச் செயலாளராக இருக்கும் அதே நாராய ணன்தான்) ஒக்டோபர் 7ம் திகதி தமிழக பொலிஸ் டி.ஐ.ஜி.க்கு அனுப்பிய கடிதத்தில், தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் வயர்லெஸ் கருவிகளைப் பறிமுதல் செய்யும்படி வலியுறுத்தினார்.

ஆனால், தமிழக அரசு அவ்வாறு தனக்கு உத்தரவிட்டால் மாத்திரமே புலிகளின் வயர்லெஸ் கருவிகளைப் பறிமுதல் செய்யமுடியும் என்று தமிழக பொலிஸ் டி.ஜி.பி. பதிலனுப்பினார்.

மேலும், உளவுப் பிரிவு இயக்குனருக்கு அனுப்பிய கடிதத்தில், அவ்வாறு செய்வதால் ஏற்படும் பின்விளைவுகளையும், தமிழகத்தில் தங்கியிருக்கும் புலிகளைக் கைதுசெய்தால் ஏற்படக்கூடிய சிக்கல்களையும் பற்றி விரிவாகக் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் அரசியல் வட்டாரத்தில் விடுதலைப் புலிகள் எவ்வளவு தூரம் செல்வாக்காக இருந்தார்கள் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

ஒக்டோபர் 7ம் திகதி விடுதலைப்புலிகளிடமிருந்த வயர்லெஸ் செட்டுகளை பறிமுதல் செய்யும்படி தமிழக போலீஸ் டி.ஜி.பி.க்கு டில்லியிலிருந்து கட்டளை வந்தது. அதற்கு மறுநாளே உளவுப்பிரிவு இயக்குனரிடமிருந்து தமிழக டி.ஜி.பி.க்கு இதற்குத் தலைகீழான ஒரு தகவல் அனுப்பப்பட்டது.

அதில், விடுதலைப்புலிகளுக்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளை தளர்த்திக் கொள்ளலாம். அதேபோல, சென்னையில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகளின் தளபதி கிட்டுவை சந்திக்க விருப்பம் உள்ளவர்கள் தாராளமாகச் சந்திக்கலாம். அவர்கள் முழுமையாகப் பரிசோதனை செய்த பிறகே கிட்டுவை சந்திக்க அனுமதிக்கப் படுவார்கள் என்று கூறப் பட்டது.

(தொடரும்)

Ayurvedic Herbal Drink!!



டயபீனா

டயபீனாவானது தினமும் அருந்தக் கூடிய ஓர் மூலிகை ஆரோக்கிய பானம் அல்லது சக்தி வாய்ந்த ஓர் மருந்து. இது உடலின் மிகுதியான குளுக்கோஸினை குறைக்கக் கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குளுக்கோஸினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. நீண்டகால நீரிழிவு நோயாளர்களுக்கு ஏற்படக்கூடிய உடலின் பாகங்களில் விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, நோயினால் சலித்து ஏற்படக்கூடிய அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வரக்கூடிய வியாதிகளை படிப்படியாக நீக்கி விடக் கூடியது. டயபீனா வானது சுலபமான இரத்தோட்டத்தை வழங்கக் கூடியதும், உடலின் மிகையான குளுக்கோஸினை குறைக்கக்கூடியதும், இயற்கையான முறையில் உடலில் உள்ள குளுக்கோஸினை அளவை கட்டுப்படுத்தக் கூடியதும் என உத்தரவாதமளிக்கலாம்.
(டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்களுக்கு மட்டுமே)





க்லூட்டியலா

க்லூட்டியலா பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக் கூடிய ஊளைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக் கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது.
க்லூட்டியலா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழி வகுக்கின்றது.





SABONA & Gift
www.mediherbs.ca



அமெசோன் வனத்தில் இருந்து எடுக்கப்பட்ட மூலிகைகளின் உதவியுடன் தயாரிக்கப்பட்டது எவமார்ட்டின். இயற்கையின் உதவியுடன் உங்கள் முடியுதிர்வை நிறுத்துங்கள். தலைமயிர் குறித்த பல பிரச்சினைகளுக்கு நிவாரணம் அளிக்கிறது எவர்மார்ட்டின்.

Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)